

# காஞ்சிவனக் கருப்பன் தென்னாடு வந்த கதை

***(ஓலைச் சுவடியில் உள்ளபடி)***



***கருப்பன் துணையுடன்***

***கண்டாங்கிக்கோனார் காஞ்சிபுரத்தில் இருந்து புலம்பெயர்ந்து***

***சிவகங்கைச் சீமைக்கு வந்து வாழ்ந்த கதை,***

*காசிஸ்ரீ, முனைவர், நா.ரா.கி. காளைராசன்*

# நூல் விவரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | | **காஞ்சிவனக் கருப்பன் தென்னாடு வந்த கதை** (ஓலைச் சுவடியில் உள்ளபடி) |
| பொருள் | : | **கண்டாங்கிக்கோனார் காஞ்சிபுரத்தில் இருந்து புலம்பெயர்ந்து சிவகங்கைச் சீமைக்கு வந்து வாழ்ந்த கதை** |
| ஓலைச் சுவடி ஆசிரியர் | : | புலவர் சுடலைமுத்து,<br>(திருவாடானை, இராமநாதபுரம் மாவட்டம்,<br>19ஆம் நூற்றாண்டு) |
| நூலாசிரியர் | : | காசிசீர், முனைவர்,<br>நா.ரா.கி. காளைராசன், M.A., M.Phil., PGDCA., Ph.D.,<br>(மேனாள் துணைப்பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி)<br>28 அ, குருநாதர்கோயில் தெரு,<br>கோட்டையூர் - 630 106.<br>824 826 6418, 94435 01912,<br>kalairajan26@gmail.com |
| நூற் பதிப்பு | : | பதிப்புத் துறை,<br>அழகப்பா பல்கலைக்கழகம்,<br>காரைக்குடி 630 003 |
| மொழி/ எழுத்துரு | : | தமிழ் யுனிகோட் - 10 புள்ளி |
| பதிப்பு | : | முதல் பதிப்பு - 19 பிப்ரவரி 2025 |
| அளவு | : | B5 size, (70 GSM காகிதம்) |
| பக்கங்கள் | : | 104 (நூல் 91 + பின்னிணைப்பு 13) |
| ISBN Number | : | 978-81-971855-4-0 |
| அச்சகம் | : | https://www.onlineprintingz.com/ |
| விலை | : | ₹ 150/- |



**KR. PERIAKARUPPAN**
**MINISTER FOR RURAL DEVELOPMENT**

SECRETARIAT
CHENNAI - 600 009.
**11.08.2021**

Date..................................

# *வாழ்த்துரை*

அன்புடையீர் வணக்கம்,

தங்களது பெருமுயற்சியால் “காஞ்சிவனக் கருப்பணசாமி தென்னாடு வந்தகதை” பழைய ஓலைச்சுவடியின் அடிப்படையில் அச்சுக்குக் கொண்டு வந்து, கருப்பணசாமி தென்னாடு வந்த கதையைத் தமிழர்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் வெளிக்கொண்டு வந்துள்ள தங்களது பணி பாராட்டிற்கு உரியது. இந்த நூலைப் படித்து பல செய்திகளை அறிந்து கொள்வதற்கு பயனாக இருக்கிறது. இது போன்று மேலும் பல நூல்களை இந்நூலாசிரியர் அவர்கள் வெளிக் கொணர்வதற்கு எனது நல்வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இவண்,**
11/8/21
**( கே.ஆர்.பெரியகருப்பன் )**

பெறுநர்

காசிஞ்ரீ, முனைவர், கி. காளைராசன் அவர்கள்
மேனாள் துணைப்பதிவாளர்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
28 அ, குருநாதர்கோயில் தெரு,
கோட்டையூர் 630106




# துணைவேந்தர்
# அழகப்பா பல்கலைக்கழகம்
## காரைக்குடி

2017 Accredited with A+ Grade by NAAC (CGPA : 3.64)
2018 MHRD Govt. of India Graded as Category -1 & Granted Autonomy
2018 MHRD Swachh Campus Rank : 4
2024 NIRF National Institutional Ranking Framework Rank : 47 State Public University Rank : 17
2024 THE World University Rankings Young University Rank : 201-250 Asia University Rank : 251-300 World University Rank : 601-800
2024 QS World University Rankings India Rank : 32 Southern Asia Rank : 59 Asia Bandwidth : 271-280

# அணிந்துரை



உலகில் வாழும் மனித இனங்களில் தமிழர்கள் மிகவும் தொன்மையானவர்கள். கீழடி நகர நாகரிகமும், சிந்துவெளி நகர நாகரிகமும் ஏராளமான ஒப்பீடுகளைக் கொண்டுள்ளன என்கின்றனர் ஆய்வாளர்கள். சங்கத்தமிழ் இலக்கியங்களிலும், தொல்காப்பியத்திலும் திருமால் பற்றிய குறிப்புகள் உள்ளன. மாயோன் வழிபாட்டுடன் கருப்பணசாமியையும் தொன்று தொட்டுத் தமிழர்கள் வழிபாடு செய்து வருகின்றனர். தமிழகத்தில் ஐயனார் வழிபாட்டில் ஓர் காவல் தெய்வமாகக் கருப்பணசாமி போற்றி வழிபாடு செய்யப்படுகிறார். “புரவி எடுப்பு” அன்று கருப்பணசாமியின் வாகனமாக வெள்ளைக் குதிரையின் சுடுமண் உருவ பொம்மைகளை மக்கள் தூக்கிச் சென்று திருவிழாவாகத் தொன்றுதொட்டுக் கொண்டாடி வருகின்றனர்.

பாண்டியநாட்டில் அழகர்கோயிலின் காவல்தெய்வமான பதினெட்டாம்படிக் கருப்பணசாமி கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்து அபயம் அளித்துக் காத்துத் திருவருள் வழங்கிவருகிறார் என்கின்றனர். அழகர்கோயிலுக்குக் கிழக்கேயுள்ள மேலூரின் பேருந்து நிலையத்திற்கு எதிரேயுள்ள “காஞ்சிவனக் கருப்பணசாமி” அனைத்து மக்களிடத்திலும் மிகவும் பிரசித்தம்.

காஞ்சிபுரத்தில் சுமார் 320 ஆண்டுகளுக்கு முன்பு கடும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. அப்போது அங்கு வாழ்ந்த மக்கள் அவர்களது வாழ்வாதாரங்களை இழந்து, உயிர் வாழ வேண்டிப் புலம் பெயர்ந்து சென்றுள்ளனர். அவர்களில் ஒரு பிரிவினர் இன்றைய சிவகங்கை மற்றும் மேலூர் மாவட்டங்களில் உள்ள ஊர்களுக்கு வந்து தங்கி வாழ்ந்து வருகின்றனர். காஞ்சிபுரத்திலிருந்து புலம் பெயர்ந்து வந்தவர்களுள் ஆதிகிழவன் என்பவரும் ஒருவர். அவர் அவரது வழிபடு தெய்வமான காஞ்சிவனக் கருப்பணசாமி பெட்டியைத் தலையில் தூக்கிக் கொண்டும், கருவுற்றிருந்த அவரது மனைவியின் கையைப்பிடித்து அழைத்துக் கொண்டும், அவர் வளர்த்த மாடுகளை ஓட்டிக் கொண்டும் தெற்கு நோக்கிப்

பயணமாகியுள்ளார். காவேரியைக் கடந்து, திருச்சிராப்பள்ளி, பொன்னமராவதி, புதுக்கோட்டை, சிங்கம்புணரி, காளையார்கோயில் வழியாகத், தென்னாட்டிற் சிறந்து விளங்கும், வந்தாரை வாழவைக்கும் சிவகங்கைச் சீமையிலுள்ள படமாத்தூர் வந்து சேர்ந்திருக்கிறார். சேதுபதிராஜா அவர்களின் நல்லாதரவைப் பெற்று கண்டாங்கிபட்டி கிராமத்தை உருவாக்கி வாழ்ந்துள்ளார். காஞ்சிபுரத்திலிருந்து படமாத்தூர்வரை வழிநெடுகிலும் ஆதிகிழவனுக்கு ஏற்பட்ட துயரங்களில் இருந்து காஞ்சிவனக் கருப்பணசாமியும் வாழவந்தாள் அம்மனும் காத்தருளியுள்ளனர்.

காஞ்சிவனக் கருப்பணசாமி தன்னை வழிபட்ட ஆதிகிழவனின் குடும்பத்தையும் அவரது மாடுகளையும் காத்தருளிய நிகழ்வுகளை ஏட்டில் எழுதிவைத்துள்ளார். இந்த ஓலைச்சுவடியில் உள்ள 140 ஏடுகளில் 276 பாடல்கள் 1101 வரிகளில் எழுதப்பெற்றுள்ளன. இதில் காஞ்சிவனக் கருப்பணசாமி திருவருள் வழங்கிய நிகழ்ச்சிகள், கருப்பன் துதி, கருப்பன் அருவாளின் பெருமை, கருப்பன் சாட்டையின் பெருமை, கருப்பன் சல்லடத்தின் சிறப்பு, கருப்பனின் ஆபரணங்கள், உய்யவந்தாள் துதி, இராமநாதபுரம் சேதுபதிராஜா அவர்கள் குடிமக்களைத் தன் சொந்தப் பிள்ளைகளாகப் பாவித்து ஆட்சி நடத்திய மாட்சிமை, புதுக்கோட்டை ராஜா பிற குலப் பெண்ணைத் திருமணம் செய்து சமத்துவபுரம் காண முற்பட்ட பெருந்தன்மை, போர்வீரர்களுடன் நடைபெற்ற சண்டைக் காட்சிகள், ஊரார் வயல்களில் மேயும் மாடுகளைத் தொழுவில் அடைத்துத் தண்டம் வசூலிக்கும் முறை, காய்ச்சிய மழுவில் கைவிடும் தண்டனைமுறை, தலைவன் தலைவியின் காதல்காட்சிகள், காட்டில் கருப்பணசாமி நடத்திவைத்த கலியாணம், கர்ப்பிணிப் பெண்ணைக் காப்பாற்றச் சூலாடு பலியிடும் முறை, தங்கப் புதையல் எடுத்தது, பஞ்சகாலத்தில் தானியங்களைத் தானம் வழங்கிய மனிதநேயம், மற்றும் இது போன்ற நிகழ்வுகள் சிறப்பாக வர்ணிக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் சாதாரணமாகப் பயன்படுத்தும் சொற்களைக் கொண்டு இந்த வர்ணிப்புகள் அமைந்திருப்பது அருமை.

ஓலைச்சுவடியில் உள்ள பாடல்கள் அன்றைய செய்திகள் அனைத்தையும் உள்ளடக்கி ஓர் தொலைக்காட்சி நேரடி வர்ணனை போன்று காட்சிகளை நம் கண் முன்னே காட்டுகின்றன. அழகான வர்ணனைகள், அளப்பரிய வரலாற்றுச் செய்திகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. இந்நூலைப் படித்தால் நாமும் காஞ்சிபுரத்திலிருந்து பயணித்துப் படமாத்தூர் வந்து சேர்வது போன்றதொரு உணர்வை ஏற்படுத்துகிறது.

இந்த ஓலைச்சுவடியை அப்படியே நகல் எடுத்து, அதிலுள்ள செய்திகளை வாசித்துத் தட்டச்சு செய்து, தேவைப்படும் இடங்களிலெல்லாம் அருஞ்சொற்பொருள் விளக்கங்களையும் சேர்த்துக், ***“காஞ்சிவனக் கருப்பர் தென்னாடு வந்த கதை”*** என்ற தலைப்பில், அழகப்பா பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைப்பதிவாளர் முனைவர் கி. காளைராசன் அவர்கள் நூலாக்கம் செய்து வெளியிடுவது சிறப்பு.

காஞ்சிநாட்டிலிருந்து பாண்டிய நாட்டிற்குப் புலம் பெயர்ந்து இங்கு குடியாய் வாழும் மக்களின் உண்மைக் கதையை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையிலான ஓலைச்சுவடியைப் படியெடுத்து வெளியிடுவது அரியதொரு சரித்திரப் படைப்பாகும். இந்தத் தொன்மை வாய்ந்த ஓலைச் சுவடியை நூலாக்கம் செய்துள்ள நூலாசிரியர் முனைவர் கி. காளைராசன் அவர்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவர் இதற்கு முன் அழகர்கோயில் சித்திரைத் திருவிழாவுடன் தொடர்புடைய ஓலைச்சுவடி ஒன்றை “கள்ளழகர் வரலாறும் சித்திரைத் திருவிழா நேரடி வர்ணிப்பும்” என்ற பெயரில் நூலாக்கம் செய்துள்ளார். அந்த நூல் அழகப்பா பல்கலைக்கழக இணையதளத்தில் மின்னூலாக வெளியிடப்பட்டுள்ளது. அதைப் போன்றே இந்த ஓலைச்சுவடி நூலாக்கத்தையும் அழகப்பா பல்கலைக்கழகம் வெளியிட்டுப் பெருமை கொள்கிறது.

ஒரு குறிப்பிட்ட இனக்குழு புலம்பெயர்ந்து வாழும் வரலாற்றை எடுத்துக்கூறும் அரியதொரு ஆவணமாக விளங்கும் இந்த நூலைப் போன்று, வேறுபிற அரிய தமிழ் ஓலைச்சுவடிகளையும் நூலாக்கம் செய்து வெளியிடத் தேவையான உதவிகளை அழகப்பா பல்கலைக்கழகம் வழங்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

துணைவேந்தர்
அழகப்பா பல்கலைக்கழகம்

---

## சமர்ப்பணம்



கண்டாங்கிபட்டி, தெய்வத்திரு பி. பொன்னப்பன் அவர்கள்
காஞ்சிவனக் கருப்பனின் கதையைக் கூறுகிறார்,
“ஏட்டுச்சுவடியை நூலாக்கம் செய்து கொடுக்கிறேன்” என்று கேட்டபோது
மிகவும் மனம் மகிழ்ந்து கொடுத்தார். ஏட்டுச்சுவடியை நூலாக்கம்
செய்து முடிக்கும் முன்னரே வயது மூப்பின் காரணமாக இறைவனடி
சேர்ந்துவிட்டார். அவருக்கு இந்த நூல் சமர்ப்பணம்.

# நூலாசிரியர் உரை

எங்களது குலதெய்வம் அருள்மிகு பூரணா புஷ்கலா உடனாய புலிக்கரை ஐயனார் கோயில் சுமார் 700 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிதைந்து கிடந்தது. இறையருளால் கோயிலைப் புதிதாகக் கட்டி, கடந்த நந்தன வருடம் வைகாசி மாதம் 22ஆம் நாள் (04.06.2012) கும்ப அபிஷேகம் செய்து வழிபாடு செய்தோம். விழா முடிந்து எல்லோரும் அவரவர் வீடுகளுக்குச் சென்று கொண்டிருந்தனர். நாங்கள் சிலர் மட்டும் கோயிலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம்.

அப்போது திரு நாராயணன் அவர்கள் எங்களுடன் இருந்தார். அவர் என்னிடம், சிவகங்கை மன்னரிடம் அனுமதி பெற்று கண்டாங்கிபட்டிக் கிராமத்தை எங்களது முன்னோரான 'கண்டாங்கிக் கோனார்' உருவாக்கினார் என்றொரு செய்தியைச் சொன்னார். இந்த வரலாறு எப்படி அறிந்தீர்கள்? இதற்குச் சான்றாக ஆவணங்கள் ஏதும் உள்ளனவா? என்று கேட்டேன். தங்களது வீட்டில் இரண்டு கட்டு ஏட்டுச் சுவடிகள் உள்ளன என்ற கூறினார்.

அந்த இரண்டு ஏடுகளையும் காண வேண்டும் என்று, நாங்கள் உறவினர்கள் மூவர் காணும் பொங்கல் அன்று, கண்டாங்கிபட்டி சென்று திரு. நாராயணன் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தோம். அவரும் அவரது குடும்பத்தினரும் பெரிதும் மகிழ்ந்து எங்களை வரவேற்று உபசரித்து, இரண்டு கட்டுக்களாக ஏட்டுச் சுவடிகளை எடுத்து வந்து கொடுத்தனர்.

ஒன்று மதுரை கள்ளழகர்கோயில் சித்திரைத்திருவிழா பற்றியது. மற்றொன்று திரு.நாராயணன் அவர்களது முன்னோர்கள் காஞ்சிவனத்திலிருந்து இந்தக் கண்டாங்கிபட்டிக்கு வந்து குடியேறிய வரலாறு பற்றியது.



(படத்தில் இடமிருந்து வலமாக 1) திரு. நாராயணன் கோனார் அவர்கள், 2) இடையமேலூர் திரு. பாண்டி அவர்கள்,, 3) திரு. நாராயணனின் தந்தையார் திரு பொன்னப்பன் அவர்கள், 4) திரு. நாராயணனின் தாயார் அவர்கள், 5) திரு. நாராயணன் அவர்களின் மகன் சரவணன்.)

மதுரை கள்ளழகர்கோயில் சித்திரைத் திருவிழா பற்றிய ஏட்டுச் சுவடியை அவர்களிடம் இருந்து பெற்றுச் சென்று, அதைப் படம் எடுத்து, வாசித்து, எழுதித் தட்டச்சு செய்து முடித்து, பிழைத் திருத்தம் செய்து, ஏடுகளின் படங்களையும் புத்தகத்தில் சேர்த்து நூலாக்கம் செய்தோம். அந்த நூலானது அழகப்பா பல்கலைக்கழக இணைய தளத்தில் மின்னூலாக 17 மார்ச் 2021 அன்று வெளியிடப்பட்டது.

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களும், திரு. நாராயணன் குடும்பத்தினரும் பெரிதும் மகிழ்ந்து வாழ்த்தினர்.



“கள்ளழகர் வரலாறும், சித்திரைத் திருவிழா நேரடி வர்ணிப்பும் - மின்னூல்” பங்குனி 4, 17.03.2021, புதன்கிழமை, காலை 10.30 மணிக்கு, அழகப்பா பல்கலைக் கழகக் கருத்தரங்கக்கூடத்தில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களால் வெளியிடப்பட்டது.

இறையருளால், இரண்டாவது ஏடான, காஞ்சிவனக் கருப்பன் கதை அடங்கிய ஏட்டுச் சுவடியும் இப்போது நூலாக்கம் செய்யப் பெற்றுள்ளது. இந்த நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் பெரியகருப்பன் அவர்களுக்கும், நூலைப் பல்கலைக்கழக வெளியீடாக வெளியிடும் மாண்பமை அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களும், உயர்திரு அழகப்பா பல்லைக்கழகப் பதிவாளர் அவர்களும் எனது வாழ்த்துகளையும் நன்றியையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முனைவர், கி. காளைராசன்,
நூலாசிரியர்,
மேனாள் துணைப்பதிவாளர்,
அழகப்பா பல்கலைக்கழகம்.

# நூற் பொருளடக்கம்


| வரிசை எண் | ***பொருளடக்கம்*** | ஏடு எண் |
|---|---|---|
| | காஞ்சிவனக் கருப்பன் தென்னாடு வந்த கதைச் சுருக்கம் | |
| 1 | ஆனைமுகத்தான் வணக்கம் | 1 |
| 2 | சபை வணக்கம் | 2 |
| 3 | ஏடு எழுதியவர் | 4 |
| 4 | கருப்பன் துதி | 6 |
| 5 | கருப்பன் அருவாள் பெருமை | 8 |
| 6 | கருப்பன் சாட்டை பெருமை | 9 |
| 7 | கருப்பன் சல்லடம் பெருமை | 10 |
| 8 | கருப்பனின் ஆபரணங்கள் | 11 |
| 9 | உய்யவந்தாள் துதி | 12 |
| 10 | ***காஞ்சிவனக் கருப்பன் தென்னாடு வந்த கதை வர்ணிப்பு*** | 16 |
| 11 | காஞ்சி வன நாட்டில் பஞ்சம் வந்ததால் பாண்டிநாட்டிற்குப் பயணமாகுதல் | 16 |
| 12 | கருப்பன் துணையுடன் காவேரி வெள்ளத்தைக் கடந்து செல்லுதல் | 18 |
| 13 | காராளன் கரும்புத் தோட்டத்தில் பசுக்கள் மேய்தல் | 20 |
| 14 | பசுக்களைத் ***திருச்சி*** பத்திரகாளித் தெருவில் உள்ள பவுண்டில் அடைத்தல் | 23 |
| 15 | கருப்பன் குதிரை காலால் பவுண்டு பூட்டை உடைத்தல் | 26 |
| 16 | பசுக்கள் ***சிங்கம்புணரி*** சேவுகப் பெருமாள் கோயில் தோப்பை அழித்தல் | 28 |
| 17 | சேவுகப்பெருமாள் தண்டனை கூறுதல் | 33 |
| 18 | சேவுகப்பெருமாள் தனக்கான தளிகையில் பாதியைக் கருப்பனுக்கு வழங்குதல் | 35 |
| 19 | ***பொன்னமராவதி***க்குப் பசு மேய்த்துச் செல்லுதல் | 36 |
| 20 | ஆதிகிழவனுக்கும் பெண்குழந்தை பிறத்தல் உய்யவந்தாள் தொட்டிலாட்டுதல் | 38 |
| 21 | உய்யவந்தாள் தெய்வம் தன்வரலாறு கூறுதல் | 41 |
| 22 | ***புதுக்கோட்டை*** ராஜனின் சிங்காரமண்டபத்தைப் பசுக்கள் சிதைத்தல் | 45 |
| 23 | கருப்பன் அரண்மனை வீரர்களைக் குருடாக்குதல் | 46 |
| 24 | அடுத்து வந்த வீரர்களின் நாக்கை இழுத்துப்பிடித்து நறுக்கி அனுப்புதல் | 50 |
| 25 | புதுக்கோட்டை ராஜன் ஆதிகிழவனை விசாரித்தல் | 52 |
| 26 | புதுக்கோட்டை வீரசின்னு தெய்வத்தைக் கருப்புசாமி அடித்துத் துரத்தி அனுப்புதல் | 53 |
| 27 | ஆதிகிழவன் புதுக்கோட்டையில் குடியாய் வாழ்தல், அரசனுடன் சினேகிதம் கொள்ளுதல் | 56 |
| 28 | ஆதிகிழவனின் மகளை அரசன் பெண்கேட்டல் | 57 |
| 29 | வெறிநாயை வீட்டில் கட்டிவைத்துவிட்டுச் ***சேதுபதிச் சீமை*** நோக்கி ஆதிகிழவன் பயணமாகுதல் | 62 |
| 30 | கருப்பன் ஆதிகிழவன் வேடத்தில் அரண்மனைக்குச் செல்லத் தயாராகுதல் | 65 |
| 31 | முனியாண்டிய மணப்பெண் வடிவம் எடுத்தல் | 72 |

| | | |
|---|---|---|
| 32 | ஆதிகிழவன் வேடத்தில் இருந்த கருப்பனும், மணப்பெண் வேடத்தில் இருந்த முனியாண்டியும் அரசனுடைய குதிரையில் ஏறித் தெற்கே விரைந்து செல்லுதல் | 77 |
| 33 | புதுக்கோட்டைராஜா சேதுபதிராஜாவைச் சென்று பார்த்து உதவி கேட்டது | 79 |
| 34 | ***படமாத்தூர்*** காராங்குளங் கண்மாய் அருகே பசுக்கள் மேய்தல் | 81 |
| 35 | ராஜன் வரவு கண்டு மிரண்ட ஆதிகிழவனைக் கருப்பன் காப்பாற்றுதல் | 84 |
| 36 | சேதுபதிராஜன் காராம்பசுப்பால் கேட்டல் | 86 |
| 37 | கண்மாய்த் தண்ணீர் காராம்பசுவின் பாலாக மாறுதல் | 88 |
| 38 | புதுக்கோட்டை ராஜன் ஊர் திரும்பிச் செல்லுதல் | 92 |
| 39 | சேதுபதிராஜனிடம் கணக்கும் மணியமும் கேட்டுப் பெறுதல் | 94 |
| 40 | மாமன் ஸ்ரீரங்ககோனார் பஞ்சம் பிழைக்கச் சிங்கம்புணரி வந்தபோது சேவுகப்பெருமாள் அருளுதல் | 95 |
| 41 | கருப்பன் ஸ்ரீரங்கனுக்கு வழிகாட்டி உதவுதல் | 99 |
| 42 | ஸ்ரீரங்கனின்மகன் மாமனின் பசுக்களை மேய்க்கச் செல்லுதல் | 101 |
| 43 | மாமன்மகள் சோறுகொண்டு செல்லுதல் | 104 |
| 44 | கருப்பன் கருப்பையாவுக்குத் திருமணம் செய்து வைத்தல் | 106 |
| 45 | கருப்பன் கொடுத்த மாலையைக் கழுத்திலிருந்து கழட்ட முடியவில்லை | 110 |
| 46 | ஆண் ஒன்று, பெண் ஒன்று என ஆதிகிழவனுக்கு இரட்டைக் குழந்தை பிறந்தல் | 112 |
| 47 | ஆதிகிழவன் தனக்கு மூன்றாவதாகப் பிறந்த இரண்டாவது மகளையும் கருப்பய்யாக்கோனுக்கு இரண்டாவது திருமணம் செய்து வைத்தல் | 114 |
| 48 | மயானத்தில் வயிற்றைக் கிழித்துப் பெண்குழந்தையை வெளியே எடுத்தல் | 115 |
| 49 | கருப்பையாக்கோனார் முன் கிழவன் ஒருவன் தோன்றிப் பசிபோக்குமாறு கேட்டல் | 118 |
| 50 | கிழவன் புதையல் ரகசியம் கூறுதல் | 120 |
| 51 | ஒன்பது பொன்குடத்தில் மேல் குமாரனை காணுதல் | 124 |
| 52 | கருப்பன் பிரசன்னமாகிக் ***குமாரபட்டி*** கிராமம் உண்டாக்கி வாழுமாறு கூறுதல் | 126 |
| 53 | பிடிமண் எடுத்துச் சென்று, ***கண்டாங்கிபட்டி*** கிராமம் உண்டாக்கி வாழுதல் | 130 |
| 54 | மாரி பொய்த்துப் பஞ்சம் உண்டாகுதலும், கருப்பனின் கருணையினால் கோனார் வயலில் மட்டும் மழைபெய்து நெல் விளைதலும் | 133 |
| 55 | காஞ்சிவனக் கருப்பன் கிருபையினால் கண்டாங்கிபட்டி பாரில் நலம் பெருகுதல் | 139 |
| | ***இந்த ஏடு எழுதிய காலக் கணிப்பு*** | |
| | ***காஞ்சிவனக்கருப்பன் தென்னாடு வந்த கதை (ஏடுபெயர்த்து எழுதியது)*** | |
| | பின்னிணைப்பு<br>***நூலாசிரியர் குறிப்பு*** | |
| | ***அன்னதானம் கண்தானம்*** | |
| | ***பின்பக்க அட்டைப்படம்*** | |

உ
புலிக்கரை ஐயனார் துணை

# காஞ்சிவனக் கருப்பன்
# தென்னாடு வந்த கதை

***(ஓலைச் சுவடியில் உள்ளபடி)***

## *இது கற்பனைக் கதையல்ல, கடும் பஞ்சத்தினால் காஞ்சிபுரத்திலிருந்து புலம்பெயர்ந்து சிவகங்கை அருகேயுள்ள படமாத்தூர் வந்து வாழ்ந்த கண்டாங்கிக் கோனாரின் வாழ்க்கை வரலாறு*

***கதைத் தெய்வம் -*** காஞ்சிவனக் கருப்பன்
***பெண் தெய்வம் -*** உய்யவந்த அம்மன் (ஏடு எண் 14, 36, 39, 40, 116),
***கதையில் இடம் பெற்றுள்ள பிற தெய்வங்கள் -*** சிவபெருமான், காளி, ஆனந்தவள்ளி, சிங்கம்புணரி சேவுகப் பெருமாள், காட்டேரி, துர்க்கை, முனியாண்டி, மலையாளச் சின்னு, திருமால், லெட்சுமி, குமாரபட்டிக் கருப்பன்,
***கதையில் இடம் பெற்றுள்ள மன்னர்கள் -*** புதுக்கோட்டை மன்னர், இராமநாதபுரம் சேதுபதி மன்னர்,
***கதைத் தலைவன் -*** ஆதிகிழவன் (கண்டாங்கிக் கோனார்)
***கதைத் தலைவி -*** ஆதிகிழவனின் மனைவி உய்யவந்தாள்
***கதை மாந்தர் -*** ஆதிகிழவனின் மூத்த மகள் உய்யவந்தாள் (ஏடு எண் 41, 43, 44, 60, 103, 105, 106, 108, 109, 110, 111, 112, 133 ),
ஆதிகிழவனின் மைத்துனர் ஸ்ரீரங்ககோனார்,
ஸ்ரீரங்ககோனாரின் மனைவி ***உய்யம்மாள்*** (ஏடு எண் 99),
ஸ்ரீரங்ககோனாரின் மகன் கருப்பையாக் கோனார்,
ஆதிகிழவனின் மகன் காஞ்சிவனம்,
ஆதிகிழவனின் இரண்டாவது மகள் உய்யாண்டாள் (ஏடு எண் 116 117 122 126) உய்யத்தாண்டாள் என்றும் ( ஏடு எண் 118) உள்ளது.
***குடி மக்கள் -*** சிவகங்கை மாவட்டம் தமராக்கிநாடு, குமாரபட்டி மற்றும் கண்டாங்கிபட்டியில் வாழும் இடையர்குல மக்கள்.
***கதையில் இடம் பெற்றுள்ள ஊர்கள் -*** காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, சிங்கம்புணரி, பொன்னமராவதி, புதுக்கோட்டை, காளையார்கோயில், படமாத்தூர், இராமநாதபுரம், மேலூர்[1], குமாரபட்டி, கண்டாங்கிபட்டி,
***பசுக்களின் பெயர்கள் -*** திருமங்கை, கோதை, வல்லி, சிங்காரி, ரத்தினம், செங்கமலம், பூ மடந்தை, மாணிக்கவல்லி, சிறாவேங்கை , ஒயிலால், வாருதி ,

---

[1] ....கள்ளர் நாடுகளின் மையப்பகுதியாக நடுவிநாடு உள்ளது. சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்பு ***காஞ்சிபுரத்திலிருந்து வந்த கள்ளர்கள்*** முதன் முதலில் குடியேறி உருவாகிய நாடு என்பதனால் இது பழைய நாடு எனவும் அழைக்கப்படுகின்றது.... ..... ***மேலூர்*** நகரத்தில் உள்ள ***காஞ்சிவனம்*** கோயில் இந்நாட்டின் பொதுக்கோவிலாகும்.... .... நாவினிப்பட்டி, சூரக்குண்டு, ஆட்டுக்குளம், எட்டிமங்கலம் போன்றவை நடுவிநாட்டோடு சேர்ந்திருந்தன. சில முரண்பாட்டால் அவர்கள் பிரிந்துசென்றுவிட்டனர். ஆனால் இன்றும் அவர்கள் காஞ்சிவனம் கோவிலுக்கு வந்து சாமிகும்பிட்டு செல்கின்றனர். https://kallarkulavaralaru.blogspot.com/2018/07/blog-post_52.html

கோதாபுரி, பாணி கமலமதி , லட்சுமி, சந்தானம், பார்வதி, ஏகாம்பாளும், நடையழகி, கட்டழகி, சந்திரபிறை, சிந்து, நாராயணி, அழகு, படை கூட்டி, வேணியம்மா , சங்குவதி , தந்தி , பத்தினி, சிங்காரம் (ஏடு எண் 30)

***கருப்பணசாமி கோயில் இருப்பிடம் -*** சிவகங்கை மேலூர் சாலையில், சிவகங்கை பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 10 கிமீ தொலைவில் உள்ளது இடையமேலூர். இடையமேலூரிலிருந்து சுமார் 3 கி.மீ. தமராக்கி திருவாதவூர் சாலையில் கண்டாங்கிபட்டி கிராமத்தில், சாலையோரம் அருள்மிகு கருப்பன் கோயில் அமைந்துள்ளது. மந்தக்கருப்பணசாமி என்றும் சிலர் அழைக்கின்றனர்.
***ஓலைச்சுவடி ஆசிரியர் -*** இந்தக் கதையைச் சொன்னவர் சுடலைமுத்து, இவர் சேதுநாட்டில் யானைநகரில் பிறந்தவர் என்று ஏடு எண் 4இல் குறிப்பு உள்ளது. யானைநகர் என்ற பெயரில் இப்போது எந்தவொரு ஊரும் இல்லை. யானைநகர் என்ற பெயரானது இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருவாடானையைக் குறிப்பதாக இருக்கலாம்.

***நூலாசிரியர் -*** அருள்மிகு புலிக்கரை ஐயனாரின் நல்லாசியால், இந்த ஓலைச் சுவடியைப் “பார்த்துப் படித்துப் பிழை திருத்தி இந்த வர்ணிப்பை யாவரும் படிக்கும்படியாக நேர்த்தியுடனே” நூலாக்கம் செய்தவர் - காசிஸ்ரீ, முனைவர், நா.ரா.கி. காளைராசன்.

***ஏடு பெயர்த்து இணையத்தில் எழுதியது -*** இந்த ஓலைச்சுவடி, “நாராயணன் கோனார்” என்ற தலைப்பில் 27 சனவரி 2014, மணி 05:48:57 முதல் வாசிக்கப்பெற்று இணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
https://groups.google.com/g/mintamil/c/KuX_FDamwK4?pli=1

***சுவடிக் கணக்கு -*** *இந்த ஓலைச் சுவடி 140 ஏடுகளைக் கொண்டது.* காஞ்சிவனக் கருப்பன் தென்னாடு வந்த கதையானது ஆனைமுகத்தான் வணக்கம், சபை வணக்கம், காஞ்சிவனக் கருப்பன் துதியுடன் தொடங்குகிறது. கருப்பன் அருவாளின் பெருமை, கருப்பன் சாட்டையின் பெருமை, கருப்பன் சல்லடத்தின் பெருமை, மற்றும் கருப்பனின் ஆபரணங்கள் அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளன. கருப்பனின் சிறப்புக்களைக் கூறி வர்ணித்துப் பாடி கருப்பனசாமியை வணங்கிய பின்னர், அடுத்ததாகக் கருப்பனின் தங்கையான உய்யவந்தாளைத் துதித்து “உய்யவந்தாள் துதி” பாடப்பெற்றுள்ளது.

*140 ஏடுகளில், ஏடு எண் 1, 5, 12 மற்றும் 140 ஆகிய 4 ஏடுகளின் பின்பக்கம் ஏதும் எழுதப்பெறவில்லை.* மற்ற பிற சுவடிகள் எல்லாமும் முன்பக்கம் ஒரு பாடலும், பின்பக்கம் ஒரு பாடலுமாக ஒரு ஏட்டிற்கு இரண்டு பாடல்கள் வீதம் உள்ளன. ஒவ்வொரு பாடலும் 4வரிகளால் ஆனது. *(ஏடு எண் 4 - பின்பக்கம் உள்ள பாடல் 3 வரிகளால் ஆனது. ஏடு எண் 5 - முன்பக்கம் உள்ள பாடல் 2 வரிகளால் ஆனது.)*

ஆக மொத்தம், இந்த ஓலைச் சுவடியில் 140 ஏடுகளும், 276 பாடல்களும், 1101 பாடல்வரிகளும் உள்ளன.

# ஏட்டில் உள்ள
# வரலாற்றுக் கதைச் சுருக்கம்

*காஞ்சிபுரத்தில் ஏற்பட்ட கடும் பஞ்சத்தினால் காஞ்சிவனக் கருப்பன் உத்தரவின்படி, ஆதிகிழவன் சாமிபெட்டியைத் தலையில் தூக்கிக்கொண்டு, பசுமாடுகளை மேய்த்துக் கொண்டு பாண்டிநாட்டிற்கு வந்து சேர்ந்து சிவகங்கை அருகேயுள்ள கண்டாங்கிபட்டி கிராமத்தில் குடியாய் வாழ்கிறார். சற்றொப்ப 50 வருடங்களாக ஆதிகிழவனின் வாழ்க்கையில் நடைபெற்ற அன்றாட நிகழ்ச்சிகளைச் சுருக்கிக் கதைவடிவில் கூறப்பட்டுள்ளது. எளிய தமிழில் பாடல் வடிவில் சுருக்கிக் கூறப்பட்ட கதையை மேலும் சுருக்கி உரைநடை வடிவில் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு கதைச்சுருக்கம் மட்டுமே, உண்மையான உணர்வுபூர்வமான முழுக்கதையும் ஏட்டில் உள்ளது.*

ஆதிகிழவன் காஞ்சிபுரத்திலிருந்து புறப்பட்டு திருச்சிராப்பள்ளி வழியாக சிங்கம்புணரி வருகிறார். சிங்கம்புணரியிலிருந்து புறப்பட்டு புதுக்கோட்டை வந்து தங்கிச் சிலகாலம் வாழ்கிறார். பின்னாளில் புதுக்கோட்டையிலிருந்து புறப்பட்டு இராமநாதபுரம்சீமை படமாத்தூர் வந்து குடிமக்களுள் ஒருவராய் வாழ்கிறார். பின்னர் சிவல்பட்டி காட்டுக்குள் வீடுகட்டி அதற்குக் குமாரபட்டி என்று பெயரும் வைத்து வாழ்கிறார். அதன்பின்னர் குமாரபட்டியில் இருந்து புறப்பட்டு முல்லைவனக்காட்டுக்குள் வீடுகட்டி, உவர் நிலத்தில் தொழுவம் அமைத்து அதற்குக் கண்டாங்கிபட்டி என்ற பெயரும் வைத்து, விவசாயம் செய்து இங்கு குடியாய் வாழ்கிறார்.

காஞ்சிபுரத்திலிருந்து புறப்பட்டு கண்டாங்கிபட்டி வந்து குடியாய் வாழும் வரை, ஆதிகிழவனும் உய்யவந்தாளும் ஊர்ஊராய்ப் பசுக்களை மேய்த்துப் பட்ட துன்பங்களும், துயரங்களும், பசுக்களையும் இவர்களையும் காஞ்சிவனக் கருப்பன் காத்து அருளியதும் கதையாக வர்ணிப்பாகப் பாடப்பட்டுள்ளது. உய்யவந்தாள் என்ற பெண்தெய்வத்தின் வரலாறும், கருப்பனின் வர்ணிப்பும், சிங்கம்புணரி சேவுகப்பெருமாளின் சிறப்பும், புதுக்கோட்டை அரண்மனையின் காவல்தெய்வம் மலையாளச்சின்னுவின் காவலும், இராமநாதபுரம் மாட்சிமை பொருந்திய சேதுமன்னரின் அருளாட்சியின் சிறப்பும் வர்ணிப்பாகப் பாடப்பெற்றுள்ளது.

அனைவரும் எளிதில் படித்துப் புரிந்துகொள்ளும் வகையில் இனிய தமிழில் இந்தச் சுவடி பாடப் பெற்றுள்ளது. தெய்வங்களைப் பற்றிய அருமையான வர்ணிப்புகள் உள்ளன. மாடு மேய்த்துக் கொண்டு புலம்பெயர்ந்து சென்ற கண்டாங்கிக்கோனாரின் வாழ்வில் ஏற்பட்ட இடர்பாடுகளை அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறது இந்த ஏட்டுச் சுவடி. காஞ்சிபுரத்தில் ஏற்பட்ட பஞ்சத்தில் தொடங்கி, சிவகங்கைச் சீமையில் ஏற்பட்ட பஞ்சத்தில் முடிகிறது இந்தக் கதை. இந்த ஓலைச்சுவடியை முழுமையாகப் படித்தால் மட்டுமே காஞ்சிவனக்கருப்பனின் அருளாட்சியையும் இறைமாட்சியையும் முழுமையாக உணர முடியும். எனவே அன்பர் அனைவரும் இந்த ஓலைச்சுவடி முழுவதையும் படித்துக் கருப்பனின் அருள்பெறுமாறு அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

***காவேரி வெள்ளத்தைக் கடந்தது -*** காஞ்சிபுரத்தில் 12 வருடங்கள் கடும் பஞ்சம் ஏற்படுகிறது. 21பந்தி 61சேனைகளுடன் ***காஞ்சிவனக்கருப்பன்*** உத்தரவின்படி, ***ஆதிகிழவன்*** கருப்பன்பெட்டியைத் தலையில் தூக்கிக்கொண்டு, மனைவி ***உய்யவந்தாளையும்*** அழைத்துக் கொண்டு, பஞ்சம்பிழைக்கக் காஞ்சிபுரத்திலிருந்து புறப்பட்டுப் பாண்டியநாட்டிற்குப் பயணம் ஆகுகிறார். காவேரியில் வெள்ளம் போகிறது. தலையில் சாமிபெட்டியுடன், கர்ப்பவதியாக உள்ள மனைவியையும் அழைத்துக் கொண்டு, பசு மந்தைகளுடன் வெள்ளத்தைக் கடந்துசொல்ல முடியாமல் கிழவன் தவிக்கிறார். மீண்டும் காஞ்சிபுரத்திற்குத் திரும்பிச் சென்றால் அவமானமாகிவிடும். வெள்ளத்தைக் கடந்து சென்றால்

உயிருக்கு உத்தரவாதம் இல்லை. இந்த இக்கட்டான நிலையைக் காஞ்சிவனக் கருப்பனிடம் முறையிட்டு வேண்டிக் கொள்கிறார். கருப்பனின் திருவருளால், பசுக்கள் ஓரிடத்திலும், ஆதிகிழவன் மற்றோரு இடத்திலும் காவேரியைக் கடந்து கரையேறுகின்றனர்.

***திருச்சி காராளன் கரும்புத் தோட்டத்தைப் பசுக்கள் அழித்தது -*** பசுக்கள் ***காராளன்*** என்பவனுடைய கரும்புத் தோட்டத்திற்கு அருகே கரையேறி, அந்தக் கரும்புத்தோட்டத்தில் மேய்ந்து நாசம் செய்துவிடுகின்றன. பசுக்களின் உரிமையாளர் தேடிவரும்போது தண்டம் வசூல் செய்யவேண்டும் என்று, காராளன் பசுக்கூட்டத்தை காளிகோயில்தெருவில் உள்ள பவுண்டில் அடைத்து விடுகிறான். காஞ்சிவனக் கருப்பனின் குதிரை பவுண்டில் போடப்பட்டிருந்த பூட்டுகளைக் காலால் மிதித்து உடைத்துப் பசுக்களை வெளியேற்றி விடுகிறது. குதிரையை எதிர்த்த பவுண்டின் காவலாளியைக் காலில் மிதித்துக் குதிரை கொன்றுவிடுகிறது.

***சிங்கம்புணரி சேவுகப் பெருமாள் செய்த சிறப்பு -*** காஞ்சிவனக் கருப்பன் சொல்லியபடி, ஆதிகிழவன் திருச்சியிலிருந்து மாடுகளை ஓட்டிக் கொண்டு ***சிங்கம்புணரி*** வந்து சேர்கிறார். மாடுகள் சேவுகப்பெருமாள் கோயில் நந்தவனத்திற்குள் நுழைந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தி விடுகின்றன. இதனால் கோபமுற்ற சேவுகப்பெருமாள் ஆதிகிழவனை அழைத்து மரக்கால் எடுத்துக் காய்ச்சிய மழுவை அளந்து கொடுக்குமாறு தண்டனை வழங்குகிறார். காஞ்சிவனக் கருப்பன் தோன்றி ஆதிகிழவனுக்காக மழுவை அளந்து கொடுக்கிறது. ஆதிகிழவனைச் சாட்டையால் அடித்த பூசாரியின் வாரிசுகளுக்கு ஒற்றைக்கண் பொட்டையாகப் போகும் என்று காஞ்சிவனக்கருப்பன் சாபம் கொடுகிறது. பதறிப்போன சேவுகப்பெருமாள் கருப்பன் கையைப் பிடித்துக் கோயிலுக்குள் அழைத்துச் சென்று தனக்கான தளிகையில் பாதியைக் கருப்பனுக்கு வழங்கிச் சிறப்புச் செய்கிறார்.

***பொன்னமராபதியில் ஆதிகிழவனுக்குப் பெண்குழந்தை பிறத்தல் -***

காஞ்சிவனக் கருப்பன் சொல்லியபடி, ஆதிகிழவன் சிங்கம்புணரியில் இருந்து பசுக்களை ஓட்டிக் கொண்டு புதுக்கோட்டையைச் சேர்ந்த பொன்னமராவதி வந்து தங்குகிறார். அப்படித் தங்கி இருக்கையில், அவருக்குக் காய்ச்சல் கண்டு, பசுக்களை மேய்க்க முடியாமல் போகிறது. கருப்பன் மனமிரங்கி சோணைச்சாமியுடன் சேர்ந்து ஆதிகிழவனுக்குப் பதிலாகப் பசுக்களை மேய்க்கிறது. அப்போது ஆதிகிழவனின் மனைவி ஓர் அழகிய பெண்குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். ஆதிகிழவன் ஓடிச் சென்று, அக்கம்பக்கத்தில் இருக்கும் பெண்களை உதவிக்கு அழைக்கிறார். ஆனால் அவர்கள் அவர்களுடைய வேலைகளில் கவனமாக இருந்து வரமுடியாது என்று கூறிவிடுகின்றனர்.

அதிகமான கவலையுடன் ஆதிகிழவன் தெய்வம் துணைசெய்திட வேண்டுமென்று வேண்டுகிறார். உய்யவந்தாள் என்ற தெய்வம் பிரசன்னமாகிக் குழந்தையை எடுத்துச் சுத்தம் செய்து தொட்டிலில் போட்டுத் "தன் பெயரைப் பிள்ளைக்கு வைக்க வேண்டும்" எனச் சொல்லித் தாலாட்டுப்பாடித் தூங்க வைக்கிறது. தாலாட்டுப் பாட்டுக் கேட்ட ஆதிகிழவன் அதிசயித்து வீட்டிற்குள்ளே ஓடிவந்து பார்க்கும்போது, தொட்டில் ஆடிக்கொண்டிருக்கிறது. ஆனால் தொட்டிலாட்டிய ஆளைக் காணோம். ஆதிகிழவன் இந்தத் தொட்டிலை ஆட்டிய தெய்வம் யாரெனத் தனக்குக் கூறிடுமாறு வேண்டுகிறார்.

உய்யவந்தாள் என்ற அந்தத் தெய்வம் அதன் கதையைக் கூறுகிறது. சிவகுலத்தில் பிராமணத்தியாகப் பிறந்தேன். எனக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. பிரசவித்த வேதனையால் முப்பதாம் நாள் பரமபதம் அடைந்தேன். அப்போது என் அண்ணன் காஞ்சிவனக்கருப்பன் என்னை அழைத்துவந்து சப்த கன்னிமார்கள் இருக்கும் இடத்தில் எனக்கும் இடம் கொடுத்து, நான் வேண்டிய பச்சைமருந்து தளிகையும் எனக்கு வழங்கினான். அண்ணன் காஞ்சிவனக் கருப்பன் உன்னுடன்

வந்த காரணத்தினால், அவனுக்கு அனுக்கிரகமான உனது பெண்குழந்தையை வளர்க்க வந்தேன். உய்யவந்தாள் என்ற "என் பெயரையே உன் குழந்தைக்கும் வைத்து வளர்த்து வா" என்றுகூறி, மறைவாய்த் துணைநின்றது. இது கேட்ட ஆதிகிழவன் மிகவும் மனம் மகிழ்ந்தார்.

இப்படியாகச் சில நாட்கள் சென்றபின்னர், ஆதிகிழவனுக்கும் காய்ச்சல் சரியாகிவிடப் பசுக்களை மேய்த்துவரச் சென்றார். பொன்னமராபதியிலிருந்து பசுக்களை ஓட்டிச் சென்று, காட்டிலே பசுமேய்த்துக் கொண்டு, வேங்கை மரத்தின் மேலே படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறார்.

***புதுக்கோட்டை ராஜனின் சிங்காரமண்டபத்தைப் பசுக்கள் சிதைத்தல் -***

அப்போது, அந்தக் காட்டினில் புதுக்கோட்டை ராஜன் வேட்டைக்குவந்து பரிவாரங்களுடன் தங்கியிருந்தார். அவர் தங்கியிருப்பதற்கான சிங்கார மண்டபத்தைப் பசுக்கள் கொம்பினால் குத்தி தாறுமாறாகச் சிதைத்து விட்டன. இது கண்ட அரசன் மிகவும் கோபம் கொண்டு, இந்தப் பசுக்களை மேய்க்கும் யாதவனைப் பிடித்துச் சித்ரவதை செய்ய வேண்டும் என நினைத்து, *"இந்த மாடுகளை எல்லாம் மடக்கி வாருங்கள்"* என ஆட்களை அனுப்பினார். மாடுகளைப் பிடிக்கவருவது அறிந்த காஞ்சிவனக் கருப்பனுக்குக் கோபம் வந்து, மாடுபிடிக்க வந்தவர்களை எல்லாம் குருடர்களாக ஆக்கிவிட்டது. அவர்களும் பார்வையிழந்து புலம்பி, வழியறியாமல் நடந்து, காட்டுக்குள் முட்செடிகளுக்குள் வீழ்ந்து கிடந்தனர். மாடுபிடிக்கச் சென்றவர் யாரும் வெகுநேரம் ஆகியும் வாராதது கண்டு, கூடுதலான உடல்வலிமை உடைய காவலர்கள் சிலரைக் காட்டுக்குள் மன்னன் அனுப்பி வைத்தார். பலவான்கள் பலரும் மாடுகளைப் பிடிக்கக் காட்டிற்குள் வந்தபோது, கண்கள் குருடாகக் காட்டிற்குள் விழுந்துகிடந்த வீரர்களைக் கண்டு விபரம் கேட்டறிந்து பதைபதைத்தனர். விரைந்து செயல்பட்டு பசுக்களைச் சாய்த்து ஓட்டிட முயன்றார்கள். இதையறிந்த முனியாண்டி தெய்வமானது கருப்பனைக் கண்காட்டியது. கருப்பனும் மிகவும் கோபம் கொண்டு மாடுகளை ஓட்டிச் செல்ல முயன்றவர்களைச் சாட்டையால் அடித்து, *"உங்களது அரசனை இங்கே வரச் சொல்லுங்கள்"* என்று சொல்லி, அவர்களது நாக்கையும் அறுத்துவிட்டது. பலம் மிகுந்த அந்த வீரர்களும் மிகவும் பதறி அலறித் துடித்து, வாயில் இரத்தம் ஒழுக, வந்தவழியே திரும்பி ஓடிச் சென்று, அரசனைக் கண்டு ஏதும் சொல்லமுடியாமல் அழுது புரண்டு, நாக்கு அறுபட்டதை நடித்துக் காட்டினர்.

வீரர்களை இவ்வாறு ஆக்கிய கோனாரைத் தண்டிக்க வேண்டும் என்று அரசனும் கூடுதலான படைகளுடன் காட்டிற்குள் புகுந்தார். அரசன் வருவதைக் கண்ட ஆதிகிழவன் ஓடிச் சென்று அரசனை வணங்கிப் பணிந்து நின்றார். கிழவனைக் கண்ட அரசன் மிகவும் கோபம் கொண்டு பலவாறு திட்டிக் கொண்டிருந்தார். அப்போது ஆதிகிழவனும் அரசனைப் பணிந்து, *"நடந்தன எல்லாம் எனது செயல் அல்ல, இது தெய்வத்தால் நிகழ்ந்தது, நான் ஏதும் அறியேன், நான் நிரபராதி"* என்று சொல்லுகிறார்.

***மலையாள வீரசின்னு -*** அதுகேட்ட அரசன், இந்தக் கிழவன் ஆள்மாறாட்டம் செய்திருக்கிறான் என்று எண்ணி, அவரது பதியில் குலதெய்வமான தன்மையுள்ள வீரசின்னை வருந்தி அழைக்கிறார். மலையாள வீரசின்னு வேகமாக வந்து விபரம் கேட்கிறது. சூழ்நிலையின் பாதகத்தை அறிந்துகொண்ட கருப்பன் நொடிப் பொழுதில் வீரசின்னு ஏறிவந்த வெள்ளைக் குதிரையை வாளால் வீசிக் கொன்றுவிடுகிறது. முனியாண்டி தெய்வமும் "ஏழுவண்டிச் சடையால்" வீரசின்னைக் கட்டிப்போட்டுக் கதாயுதம் ஏந்தி அடிக்க முற்படுகிறது. விபரீதம் உணர்ந்த வீரசின்னு மிகவும் பயந்துபோய், *"என்னை அடிக்காதே, இது முதலாய் வேண்டி உன்னைப் போற்றி செய்தேன், என்னை விட்டு விடு"* என்று வேண்டுகிறது. இனிமேல் *"இந்தக் கிழவனை நீயும் அணுகாதே, மீறி வந்தால், வானோர்கள் வந்தாலும் உன்னைவிட மாட்டேன் மறவாதே"* என்று காஞ்சிவனக்கருப்பன் சொல்லிக் கட்டை அவிழ்த்து, வீரசின்னை விரட்டிவிட்டது. அரசனும் தனது

குதிரையை இழந்து, தனது சேனைகளையும் திருப்பி அழைத்துக்கொண்டு புதுக்கோட்டைக்குத் திரும்புகிறார்.

காட்டில் பசுக்களை மேய்த்துக் கொண்டு, ஆதிகிழவனும் தொண்டமான் புதுக்கோட்டைப் பட்டணத்திற்குச் சென்று அங்கு தங்கி வாழ்கிறார். செய்தி அறிந்த மன்னனும், அரண்மனைச் சேனைகளிடம் *"இந்தக் கிழவனையோ, இவனது பசுக்களையோ கண்டாலும் மடக்காதீர்"* என்று உத்தரவிடுகிறார். சிலகாலம் சென்றபின், ஆதிகிழவனும் அரசனுக்குத் தினமும் பசும்பால் கொடுத்து, அரசனுடன் சினேகிதம் கொள்கிறார்.

***ஆதிகிழவனின் மகளை அரசன் பெண்கேட்டல் -*** அரசனுடன் சினேகிதம் கொண்டு ஆதிகிழவன் அரண்மனைக்குப் பால் கொடுத்து வரும் நாளில், அந்தப் புதுக்கோட்டை ராஜன் ஒருநாள் இரவு ஜாமத்தில் எழுந்து வந்து, ஆதி கிழவனை எழுப்பி, *"உன்னுடைய மகளை எனக்குக் கொடுத்தால், நலம் பெறுவாய்"* என்று கூறுகிறார். இதைக் கேட்ட ஆதிகிழவனும், *"பாவி இவன், நீதியில்லா ராஜன்"* என எண்ணி, இன்னும் சில நாள் சென்ற பின், எனது மகளை உனக்கு மணம் முடித்துத் தருகிறேன் என்று கூறி அரசனை அனுப்பி வைக்கிறார். சில நாட்கள் சென்றன. ஒருநாள், ஆதிகிழவன் அரண்மனைக்குப் பால் கொண்டு போனபோது, அரசனும் கிழவனைக் கண்டு, *"வாரும் ஐயா, கோன்மகனே, இன்றைய தினம் நல்லநாளாக இருக்கிறது. ஆகையால் உனது மகளை எனக்கு இன்றையதினம் திருமணம் செய்து கொடு"* என்று கேட்கிறார். புதுக்கோட்டை ராஜனின் கெடுமதியை நினைந்து, அரசனைச் சுற்றி அரண்மனையில் இருந்த அந்த நாட்டுக் குடிகளும் படைவீரர்களும் எல்லோரும் அறிய, *"வேலி பயிரை மேய்ந்தால், ராஜர்களுக்கு வெற்றி கிடையாது ஐயா, 'ஜாலியாய்' என்மகளை மணம்புரிய நீங்கள் விரும்புகின்றீர்கள், இதில் நான் சொல்வதற்கு என்னஉள்ளது?"* தாங்கள் விரும்பும்படியே இன்று இரவினிலே எனது மகளை உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன். நீங்களும் உங்களது பரிவாரங்களுடன் எனது வீட்டிற்கு வந்து, எனது மகளை மணம் செய்துகொண்டு போங்கள் என்று கூறிடுகிறார்.

இப்படிச் சொல்லிவிட்டு அரசனிடம் விடைபெற்றுக் கொண்டு, ஆதிகிழவனும் விரைவாகத் திரும்பிவந்து, காஞ்சிவனக்கருப்பனை வருந்தி அழைத்து நடந்தனவற்றை எல்லாம் சொல்லி, வேதனைப்படுகிறார். காஞ்சிவனக்கருப்பா, நீ, காவேரி வெள்ளத்தில் இருந்து காப்பாற்றினாய், காராளனிடமிருந்து காப்பாற்றினாய், சிங்கம்புணரி சேவுகப்பெருமாள் கொடுத்த தண்டனையிலிருந்து காப்பாற்றினாய், எனக்குப் பெண்குழந்தை பிறந்தபோதும் காப்பாற்றினாய். இப்போது அரசனுக்குப் பெண் கொடுக்க நான் சம்மதம் சொன்னது நியாயமா? என்று கருப்பனை வணங்கி வேதனையைத் தெரிவிக்கிறார்.

***பசுமந்தையுடன் படமாத்தூர் வந்து சேருதல் -*** கிழவனின் வார்த்தை கேட்ட, காஞ்சிவனக் கருப்பனுக்கு இரக்கம் பெரிதாகி, வருந்தாதே, *"இந்த கருப்பன் உள்ளமட்டும் என்னகுறை உனக்கு?"* நான் சொல்லும்படி செய், வீதியில் திரியும் வெறிநாயைப் பிடித்து வீட்டிலே கட்டி வைத்துத் தீபம் ஒன்றை ஏற்றி வைத்துவிட்டு, நீயும் பசுமந்தைகளை ஓட்டிக் கொண்டு உன்னுடைய மகளையும் அழைத்துக்கொண்டு சேதுபதிச் சீமை நோக்கிப் பயணம் செய், அங்கேயுள்ள படமாத்தூர் சென்று தங்கியிரு என்று கட்டளை இட்டது. கருப்பன் சொல்லியபடி ஆதிகிழவனும் அன்று இரவே பயணம் புறப்படுகிறார். எங்கும் தங்காமல் விரைவாகப் பயணம் செய்து, காளையார்கோவில் வந்து இரவு தங்குகிறார். சாமி துணையென்று சொல்லி, காளையார்கோயிலில் இருந்து புறப்பட்டு படமாத்தூர் சென்று சேர்கிறார்.

***புதுக்கோட்டையில் நடந்த புதுமை -*** அங்கே, புதுக்கோட்டையில் அரசன் திருமணத்திற்கான ஏற்பாடுகளை வெகு விரைவாகச் சிறப்பாகச் செய்து முடிக்கிறார். அரசன் ஆணைப்படி தளபதி மந்திரி வீரர் பலரும் மணப்பெண்ணை அழைத்து வருவதற்காகக் கோனார் வீட்டிற்குச் செல்கின்றனர். வீட்டினுள்ளே, சகல

அலங்காரங்களுடன் ஆதிகிழவன் வடிவத்தில் காஞ்சிவனக்கருப்பன் இருக்கிறார். கிழவன் வேடத்தில் உள்ள கருப்பனிடம் அவர்கள் சென்று, *"ஐயா கோனார்மகனே, எங்கள் அரசனும் உங்களை உடனே அழைத்துவரச் சொல்லி எங்களை அனுப்பி வைத்துள்ளார்"* என்று கூறுகின்றனர். அதற்குக் காஞ்சிவனச்சாமி உங்களுடைய ராஜனுக்கு மாமனார் ஆகிய என்னைக் கால்நடையாய் அழைத்துச் செல்வது அரசனுக்குத் தகுமோ, *"குதிரை கொண்டு வந்து என்னை அழைத்துச் செல்லுங்கள்"* எனக் கூறியும், மேலும் *"அரசன் வந்து அழைத்தால்தான் நானும் வருவேன்"* என்று சொல்லியும் அவர்களைத் திருப்பி அனுப்பி விடுகிறார். தூதர்களும் அரசனிடம் சென்று அப்படியே சொல்லுகின்றனர். அதுகேட்ட அரசன் மிகவும் நகைத்து, ராஜ குடும்பத்தின் அனுசரணை பெற்றோம் என்று, யாதவனும் பெண் தருவதாலே இப்படிக் கூறியுள்ளான். இப்போது அந்தக் கோனார் சொல்லியபடி செய்து திருமணத்தை முடிப்போம், பின்னர் இதுபற்றிப் பார்ப்போம் என்று கல்யாண ஏற்பாடுகளுக்கான கட்டளைகளை இடுகிறார்.

அரண்மனையில் உள்ள பெண்களை அழைத்துச் சகலவிதமான பரிவாரங்களுடன் பெண்அழைப்பிற்கு ஏற்பாடு செய்யுமாறு சொல்லி, ஆதிகிழவனை அழைத்துவரக் குதிரை ஏற்பாடு செய்யுமாறு சொல்லி, சர்வ அலங்காரத்துடன் அரசனும் ஆதிகிழவன் வீட்டிற்குச் செல்கிறார். பல்வேறு மங்கள வாத்தியங்களுடன், யானை குதிரைகளுடன், வானவேடிக்கை, தீவட்டிகளுடன் அரண்மனைப் பெண்கள் ஊர்வலமாக ஆதிகிழவன் வீட்டிற்குச் செல்கின்றனர். மன்னன் வருவதை உணர்ந்த கருப்பனும், முனியாண்டியை அழைத்துக் கோனாரின்மகள் போன்று வடிவம் எடுக்குமாறு சொல்லுகிறது. கருப்பனின் சொற்படியே முனியாண்டியும் விலைமதிப்பில்லாப் பொன்னாடை அணிந்து சர்வ அலங்காரத்துடன் பூலோக ரம்பை போல, மணப்பெண் வடிவம் எடுத்து வீட்டில் இருக்கிறது.

***அரசனுடைய குதிரையில் கருப்பன் பயணமாகுதல் -*** அரண்மனைப் பெண்கள் மணப்பெண்ணின் வடிவழகைப் பலவாறாகப் புகழ்ந்து பேசி மணப்பெண்ணை பல்லக்கில் அழைத்துச் செல்கின்றனர். ஆதிகிழவன் உருவில் உள்ள கருப்பனும் குதிரையில் ஏறி அரண்மனை நோக்கிச் செல்கிறது. இந்த ஊர்வலத்தைக் கண்ட சிலர் *"சட்டமுடன் கோன்மகனே, நீயும் ராஜனைப் போல் குதிரையில் வருவது சரியோ? என்ன தவம் செய்தாயோ, இனிமேல் உனக்கு எல்லாம் சுகமெனவே"* என்று சொல்லுகின்றனர்.

இதைக் கேட்ட கருப்பன் விரைந்து, பல்லக்கில் வந்து சேர்ந்த முனியாண்டியையும் குதிரையில் ஏற்றிக் கொண்டு வெகு வேகமாய் அங்கிருந்து சென்றுவிடுகின்றது. இது கண்ட அரசனும் மிகவும் கோபம் கொண்டு, *"அந்த யாதவனும் நமக்குப் பயந்து விட்டான் என்று நாம் நினைத்திருக்க, அவனோ மிகவும் கர்வத்துடன் நமது குதிரையில் ஏறிச் சென்றுவிட்டானே. அவன் எங்கு சென்றாலும் தேடிபிடித்து, நன்றாகவே உதைத்து, சிறையில் அடைத்திட வேண்டும்"* என்று சொல்லி, படைகளுடன் ஆதிகிழவனைத் தேடிச் செல்கிறார். ஆதிகிழவனைத் தேடி அலைந்து திரிந்து சேதுசமஸ்தான எல்லைக்குள் படைகளுடன் வந்து சேர்கிறார்.

***ஆதிகிழவனைத் தேடி அரசர் இருவரும் வருதல் -*** புதுக்கோட்டை அரசனும் சேதுபதித் துரையைச் சந்தித்து, விபரம் எல்லாம் சொல்லி, ஆதிகிழவனைத் தேடி வந்ததைச் சொல்லுகிறார். இது கேட்ட சேதுபதியும் நகைத்து, *"குலந் தவறி ஓரிடத்தில் பெண்கொள்ள என்றும் கூடாது. அதனாலே, நலங் குறைவதோடு மரியாதை ஒன்று நாடாது"* என்று சொல்லுகிறார். சேதுபதியின் சொற்கேட்டு இனிமேல் நடப்பதாகப் புதுக்கோட்டை மன்னனும் சொல்லிச் சேதுபதியின் தயவை வேண்டுகிறார். அதனை ஏற்றுக் கொண்ட சேதுபதியும் புதுக்கோட்டை மன்னனுடன் சேர்ந்து படை பரிவாரங்களுடன் ஆதிகிழவனைத் தேடி அழைந்து திரிந்து காராங்குளம் கண்மாய்க்கு வந்து சேர்கின்றனர்.

சேதுபதி மன்னனுடன் புதுக்கோட்டையரசன் வருவது கண்டு ஆதிகிழவன் மனம் கலங்கி, சோர்வு அடைகிறார். புதுக்கோட்டை அரசன் என்னிடம் பெண் கேட்டபோது, *"பெண் தருகிறேன்"* என்று நான் வாக்களித்தேன். இதனால்தான் இவ்வளவு இடர்பாடுகளும் வந்து சேர்ந்தன. எப்படியோ துப்பறிந்து இங்கே வந்து என்னைக் கண்டுபிடித்துவிட்டனர். இனி நான் என் செய்வேன்? அந்தக் காஞ்சிவனக் கருப்பன்தான் துணையாய் நின்று காத்தருளவேண்டும் என வேண்டிக் கொள்கிறார். கருப்பன் அப்போது ஓர் உபாயம் சொல்கிறது. அதன்படி ஆதிகிழவன் அயர்ந்து தூங்குவது போல் படுத்திருக்கிறார்.

சேனைகளை ஓரிடத்தில் நிறுத்திவிட்டு, அங்கே சேதுபதி மன்னர் குதிரையில் வந்து, அயர்ந்து உறங்குவதுபோல் பாவனை செய்யும் ஆதிகிழவனைக் கண்டு, *"காராங்குளத்தில் யாரடா, கோன் மகனே, காட்டில் உறக்கம் என்ன, உண்டு களையாமலே தூக்கமோ"* என்று கேட்கிறார். அதுகேட்ட கிழவனும் வாரிச்சுருட்டி எழுந்து, சாஸ்ட்டாங்கமாகக் கீழே விழுந்து சேதுபதியை வணங்கி நிற்க, *"நல்லது கோன்மகனே, வேட்டைக்கு வந்த இடத்தில் களைப்பாக உள்ளோம். தாகம் தீர காராம்பசும்பால் ஒரு கடம் கொண்டு வந்து கொடு"* என்கிறார். ஆனால் அது சமயம் கன்றுகள் எல்லாம் பால் குடித்துவிட்டபடியால் பசுக்களிடம் பால் இல்லாமல் போனது, என்ன செய்வது என்று ஆதிகிழவனும் மனக் கலக்கம் அடைந்து கருப்பனை வேண்டி நிற்கிறார்.

***காராங்குளம் கண்மாய்த் தண்ணீர் பாலாய் மாறுதல் -*** *"காராங்குளம் கண்மாய் இப்போது பாலாய் மாறியிருக்கும் அதில் ஒருகுடம் எடுத்து, வேடுகட்டி அரசன் முன் வைத்துவிடு"* என்று கருப்பன் சொல்ல, அப்படியே செய்கிறார் ஆதிகிழவன். இதுகண்ட சேதுபதியும், *"புண்ணியனே கோன்மகனே, இந்தக் கண்மாய்த் தண்ணீரைப் பொங்க வைத்தாய்ப் பால்போல், நானும் பார்த்திருக்கக் கண்மாய்த் தண்ணீர் காராம்பசுவின் பாலாக மாறிப்போச்சு, கண்கட்டுவித்தை போலே காட்டினாய் இப்போது, இந்தக் கண்மாய்த் தண்ணீரை எல்லாம் சீக்கிரத்தில் பாலாக்கிக் கொடு, என்னுடைய சேனைகளும் தளகர்த்தர் மந்திரி எல்லோரும் இங்கு வந்து உன்னுடைய பாலையெல்லாம் சந்தோஷமாக உண்போம்"* என்றார். சேதுபதியும் குடத்திலுள்ள பால்குடிக்க, சேனைகளும் அங்கே கூடி, சந்தோஷமுடன், கண்மாயில் சென்று இறங்கி, கண்மாய்த் தண்ணீர் காராம்பசுவின் பால்போல் இருப்பதைக் கண்டு திகைத்து, அங்கே பால் அருந்துகின்றனர். தண்ணீர் காராம்பசுவின் பால் போல் மாறியிருந்த காரணத்தினால் இந்தக் கண்மாய்க்குக் ***"காராங்குளம் கண்மாய்"*** என்ற பெயர் உண்டானது.

***சேதுபதி மன்னரின் மாட்சிமை -*** அப்போது சேதுபதியும் புதுக்கோட்டை ராஜனை அழைத்து, "பால் குடிக்காமல் இருப்பது ஏன்?" என்று கேட்கிறார். புதுக்கோட்டை அரசனும் *"நான் செய்த தவறு, அதனால்தான் இப்படியெல்லாம் நடக்கிறது"* என்று கூறி வருந்தித் தனது படைகளை அழைத்துக் கொண்டு புதுக்கோட்டைக்குத் திரும்பிச் செல்கிறார். சேதுபதியும் ஆதிகிழவனை அருகே அழைத்து, *"எனது தாகத்தைத் தீர்த்தாய், உனக்கு என்ன வெகுமானம் வேண்டும்"* என்று கேட்கிறார். மனதில் குறைகள் இருந்தால் கூறு, அவற்றை நிவர்த்தி செய்து வைப்போம் என்றும் கூறுகிறார். ஆதிகிழவனும் பெரிதும் மகிழ்ந்து, இதுநாள் முதலாக எனது பரம்பரைக்கும் கணக்கும் மணியம் உத்தியோகமும் வேண்டும் என்று வணங்கிக் கேட்டுப் பெறுகிறார். சேதுபதியும் படைகளுடன் திரும்பிச் செல்கிறார். சேதுபதி மன்னனின் தயவால் ஆதிகிழவனும் படமாத்தூர் கிராமத்தில் வளமுடன் வாழ்ந்து வருகிறார்.

***ஶ்ரீரங்கக்கோனார் ஆதிகிழவனைத் தேடிவந்து சேர்தல் -*** ஆதிகிழவன் இங்கே சுகமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் நாளில், ஆதிகிழவனின் தங்கையும், மைத்துனர் ஶ்ரீரங்கக்கோனாரும், அவர்களது மகனுடன் பஞ்சம் பிழைக்க வேண்டிச் சிங்கம்புணரி வந்து சேர்ந்து சேவுகப்பெருமாளை வணங்கி, அங்கே தங்கி இருக்கின்றனர். அன்று இரவு ஶ்ரீரங்ககோனாரின் கனவில் சேவுகப் பெருமாள்

தோன்றி, *"படமாத்தூரில் அரசனின் அனுசரணையுடன் உன் மைத்துனன் சுகமாய் வாழ்கிறான், இந்த வழியாகச் சென்றால் அவனை நீ சந்திக்கலாம்"* என்று கூறி மறைகிறார். இது கேட்ட ஸ்ரீரங்கக்கோனாரும் பெரிதும் மகிழ்ந்து விடிந்தபின்னர் படமாத்தூருக்குப் பயணமாகிறார். ஆதிகிழவன் அங்கே பசுமேய்க்கக் கண்டு தங்கை ***உய்யம்மாள்*** ஓடிவந்து, கிழவனின் கால்களைப் பற்றி அழுது புலம்புகிறாள். ஆதிகிழவனும் காஞ்சிபுரத்திலிருந்து படமாத்தூர் வந்து சேர்ந்த கதையைக் கூறித் தன் தங்கையையும் மைத்துனரையும் ஆதரித்து அவர்களது குடும்பத்தையும் படமாத்தூரில் தன்னுடன் தங்கவைத்துக் கொள்கிறார்.

***மருமகன் மாடு மேய்க்கச் செல்லுதல் -*** ஒருநாள் தங்கையின் மகனான கருப்பையா ஆதிகிழவனின் அனுமதி பெற்று மாடுகளை ஓட்டிச் சென்று மேய்த்து வருகிறார். இவ்வாறாக மாடுகளை மேய்த்து வரும் நாளிலே ஒருநாள் கட்டுச்சோறு எடுத்துச் செல்லாத காரணத்தினால், மாடுகளை மேய்த்து ஆய்மரத்தடியில் அயர்ந்து பசியுடன் படுத்துத் தூங்குகிறார். ஆதிகிழவனின் தங்கை உய்யம்மாள், அவளது அண்ணனின் மகளை அழைத்து, இன்று ஒருநாள் இந்தக் கட்டுச்சோற்றை எடுத்துச் சென்று கொடுத்துவா எனச் சொல்லுகிறாள். அதன்படியே அவளும் கருப்பையாவுக்குக் கட்டுச்சோறு எடுத்துக்கொண்டு காட்டிற்குள் செல்கிறாள். இவளைக் கருப்பையாவுடன் சேர்த்து வைக்க விரும்பிய காஞ்சிவனக் கருப்பனும் அங்கே 60அடி பாம்பு (அனகோண்டா பாம்பு) ஒன்று அவளைத் துரத்தும்படி செய்கிறார். அவளும் அஞ்சி ஓடிச் செல்லும்போது, அங்கே அயர்ந்து தூங்கும் கருப்பையா மேல் விழுகிறாள். கருப்பையாவும் விரைந்து எழுந்து பாம்பை விரட்டுவதற்காகத் தடியெடுத்து வீசுகிறார்.

***காட்டில் கருப்பன் நடத்திவைத்த கல்யாணம் -*** அப்போது அங்கே காஞ்சிவனக் கருப்பன் பிரசன்னமாகிறது. கருப்பனைக் கண்ட இருவரும் *"கருப்பனின் பாதமே தஞ்சம்"* என்று வணங்குகின்றனர். கருப்பனும் *"நீங்கள் இருவரும், திருமாலும் லெட்சுமியும் போல் வாழுங்கள்"* என்று கூறி, பூமாலை இரண்டு கொடுத்து, இருவரையும் மாலைமாற்றிக் கொள்ளுமாறு கூறுகிறது. அவர்களும் கருப்பனின் ஆசியுடன் மாலைமாற்றிக் கொள்ள, கருப்பன் மறைந்துவிடுகிறது. நன்றாய் இருவரும் சிந்தை மகிழ்ந்தே இருக்க, சிலநேரம் சென்று சந்தோஷமாய் அவளும் எழுந்து, கருப்பையாவுக்குப் பசியாற்றி, விரைந்து வழிதேடி வீட்டிற்குத் திரும்புகிறாள். கிழவன் மகள் மாலையும் கழுத்துமாகக் காட்டிலிருந்து வருவதுகண்ட படமாத்தூர்ப் பெண்கள், ஏதடி மாதரசே உன்கழுத்திலே மாலை, யாருடைய தாலி? என்று கேட்கின்றனர். அப்போது ஸ்ரீரங்கனுடைய மனைவி உய்யம்மாளும் அங்கே அருகில் வந்து பார்க்கிறாள். ஆதிகிழவனின் மனைவியும் ஓடிவந்து திகைத்து இது என்ன என்றாள்? நடந்த விபரம் எல்லாவற்றையும் குமரி உய்யவந்தாளும் சொல்லுகிறாள்.

அப்போது காஞ்சிவனம் பிரசன்னமாகி, இது கருப்பனுடைய மாலை, இதை யாரும் கழட்ட முடியாது, ஆகையால் இந்த மாலையை அணிவித்தவனுக்கே இவளைத் திருமணம் செய்து வைப்பீர், மறுக்காதீர் என்று சொல்லி, மறைந்தான் ஒரு நொடியில். ஆதிகிழவனும் கருப்பனின் சொற்படியே, தன் தங்கை மகனான கருப்பையாக் கோனாருக்குத் தன் மகளான உய்யவந்தாளை எல்லோரும் அறியத் திருமணம் செய்து வைக்கிறார்.

***ஆதிகிழவனுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறத்தல் -*** சிலகாலம் சென்றபின், சிவபெருமான் கிருபையினால் குலம் தளைக்க என்று, ஆதிகிழவனுக்கு ஆண் ஒன்று, பெண் ஒன்று என இரட்டைக்குழந்தைகள் பிறக்கின்றன. ***ஆண்பிள்ளைக்குக் காஞ்சிவனம்*** என்றும், ***பெண்குழந்தைக்கு உய்யாண்டாள்*** என்றும் பெயர் வைத்துக் கிழவன் தம் மக்களைச் செல்லமாக வளர்த்து வருகிறார். உய்யாண்டாளுக்கு வயது பன்னிரெண்டு ஆகும்போது, பகவான் அருள் பெறவே,

கருப்பையாவுக்கு இரண்டாம் தாரமாகக் கல்யாணம் செய்து வைக்க விரும்பிக் கருப்பனிடம் ஆதிகிழவன் உத்தரவு கேட்கிறார். அப்போது கருப்பன், "இவளுக்குத் திருமணம் செய்து வைத்தாலும், வெகுவாய் பலன் உரைக்க இடமில்லை, புத்திர சந்தானம் அது சொற்பம்" என்று சொல்லிப் புலம்புகிறது.

இருந்தாலும், தனக்கு உதவியாக இருக்கும் என்று கருதியும், மூத்தவளான உய்யவந்தாளுக்குக் குழந்தை இல்லாத காரணத்தினாலும், ஆதிகிழவன் தனது இரண்டாவது மகளான உய்யாண்டாளையும் கருப்பையாக் கோனாருக்கு இரண்டாம் தாரமாகத் திருமணம் செய்து வைக்கிறார். உய்யாண்டாளும் கர்ப்பமுற்று, பத்துமாதம் சென்றபின், பேறுகால நேரத்திலே, பிள்ளை வெளியே வராமல், பரமபதம் சென்று விடுகிறாள். இதைப் பார்த்த அந்தப் படமாத்தூர் மக்கள் எல்லாம் புலம்புகின்றனர். உய்யாண்டாளைக் கொண்டுபோய்ப் புதைக்கும் நேரத்தில் அவளது அக்கா உய்யவந்தாளும் தங்கையின்மேல் விழுந்து புரண்டு அழுகிறாள்.

***சூலாடு பலி கொடுத்தல்-*** உய்யாண்டாளைப் புதைக்கும் நேரத்தில், அக்காளின் மேல் தங்கை இறங்கி, *"நான் வளர்த்த பிருவை ஒன்று என்னைப் போல் கருவுற்று பசுத்தொழுவில் நிற்கிறது. அதையும் என்னோடு சரியாய்ப் புதைத்துவிடுங்கள். பிருவையின் வயிற்றில் குட்டி ஒன்று இருப்பது போல், என் வயிற்றிலும் ஓர் பெண்குழந்தை உயிரோடுதானே இருக்கிறது. எனது வயிற்றைக் கிழித்துக் குழந்தையை வெளியே எடுத்திடுங்கள்"* என்கிறாள். அவளின் சொற்படியே, வயிற்றைக் கிழித்து, பிருவையின் வயிற்றில் இருந்த குட்டியையும், உய்யாண்டாளின் வயிற்றில் இருந்த பெண்குழந்தையையும் வெளியே எடுத்துவிடுகின்றனர். இளையமகள் உய்யாண்டாளின் வயிற்றிலிருந்து, உயிருடன் ஒரு பெண்குழந்தை வெளியே எடுக்கப்படுவதைக் கண்ட ஆதிகிழவன் ஓடிவந்து அந்தக் குழந்தையைப் பெற்று மார்போடு அணைத்து, இதயம் மிகவே கொதித்து, என் உயிரே! இது முதலாய் உய்யாண்டாள் நீயே! தையலே! என்று முத்தமிடுகிறார். உய்யாண்டாளை நல்லடக்கம் செய்து, அவளுடைய பேர் துலங்க, நன்றாய்க் குழந்தையை எடுத்துக் கிழவன் வளர்த்து வருகிறார்.

***பசித்திருந்த பாங்கிழவனைப் புசிக்கச் செய்தல் -*** ஒருதினத்தில், கருப்பையாக் கோனும் மாடு மேய்த்துக் கொண்டிருந்து, மதியம் சாப்பிடக் கட்டுச்சோற்றைப் பிரிக்கும் போது, அதிக வயதான கிழவன் ஒருவன் அங்கே தோன்றித் தனக்குப் பசிக்கிறது என்றும், தனது பசி தீர்த்தால் தன்னால் இயன்ற நன்மையைச் செய்வதாகவும் கூறுகிறார். கருப்பையாக்கோனார் அது கேட்டு, *"அரி கரி"* என்று காதைப் பொத்திக் கொண்டு, கட்டுச்சோற்றை அந்தப் பெரியவரிடம் கொடுத்துச் சாப்பிடச் செய்கிறார். சாப்பாட்டிற்குப் பின் காராம்பசுவின் பால்கறந்து அந்தப் பாங்கிழவன் குடிக்கக் கொடுக்கிறார்.

***பாங்கிழவன் ரகசியப் புதையலைக் காட்டுதல் -*** பசியாறிய அந்தப் பாங்கிழவனும் மனம் மகிழ்ந்து கருப்பையாக் கோனாரைப் பார்த்து, *"வல்லவனே, நீ எனக்கு மகனாக வேண்டும், உனக்கு வயதும் அதிகமடா"* என்று வாழ்த்துகிறார். எனக்கும் ஒரு பிள்ளை இருக்கிறான். ஆனால் அவனோ என் சொல்லைக் கேளாமல், குருட்டுத்தனமான வாழ்க்கை வாழ்கிறான். என்ன செய்வேன் நான்! எனக்கு இப்படியொரு பிள்ளையை ஈசன் கொடுத்தான். சந்தோஷம்தான் பெருக, சுகமாய் வாழத் திரவியம் தேடிட வந்தேன். அதோ தெரியும் தோப்பில், சிறுவனைப்போல் ஓர்முனியும் பொன்குடங்கள் வைத்து இருக்கிறான். வீரதீரம் கொண்ட வாலிபன் ஒருவனைப் பலிகொடுத்தால் அந்தப் பொன்குடங்களைத் தருகிறேன் என்கிறான். நானும், என் புத்தியில்லா பிள்ளையும் நன்றாய்ச் சுகமாய் வாழ்வதற்காக, நீயும் உன்னைப் பலிகொடுத்தால், நானும் அந்தப் பொன்குடங்களைப் பெற்றிடுவேன் என்றான்.

உய்யாண்டாள் இறந்த கவலையில் இருந்த கருப்பையாக் கோனாரும், தன் உயிரை வெறுத்து, உயிருடன் இருப்பதினால் என்ன பலன்?, இந்தக் கிழவனுக்காக உயிரைக் கொடுப்போம் என்று நினைத்து, சம்மதம் தெரிவிக்கிறார். அந்தப் பாங்கிழவனும் கருப்பையாக் கோனாரைப் பலிகொடுப்பதற்காக அழைத்துக் கொண்டு, காட்டுக்குள் வெகுதூரம் சென்று, ஒன்பது பொன்குடங்களில் புதையல் இருக்கும் இடத்தைக் காட்டுகிறார். இதைக் கண்ட கருப்பையாவும் அதிசயித்து, *"என்னுடைய பேர் விளங்க ஒரு குழந்தை எனக்கு இப்போது இருந்தால் போதும்"* என்று மனதில் நினைத்து, கருப்பனை வேண்டிக்கொண்டு, தலையைக் குனிந்து, *"என் தலையை வெட்டிப் பலியிட்டு, இந்தப் பொன்குடங்களை எடுத்துச் செல்லுங்கள்"* என்று அந்தப் பாங்கிழவனிடம் கூறுகிறார்.

இவ்வாறு தலைகுனிந்து நிற்கும்போது, அந்தப் பாங்கிழவனும் அங்கே ஒரு குழந்தையைப் போல், அந்த புதையல் குடத்தின் மேல் குத்தவைத்து உட்கார்ந்து இருப்பதைக் கருப்பையா பார்க்கிறார். தனது உயிர் பலியிடப் போவதற்குமுன்பு, தான் வேண்டிக் கொண்டபடியே, குழந்தை ஒன்று தோன்றி இருப்பதையும், அதுவும் அந்த ஒன்பது பொன்குடத்தின் மேல் இருப்பதையும் கண்டு கருப்பையாவும் வியந்து, என்னைக் காத்த வனதேவதையே, நீ இப்போது, பாதகனாம் என்னை ஏன் இப்படிச் சோதிக்கின்றீர்? எங்களது *"காஞ்சிவனக் கருப்பன சாமியோ இது?"* எனக்கு இப்போது சொல்லிட வேண்டும் என வேண்டி நிற்கிறார். அப்போது காஞ்சிவனச்சாமி இரங்கி அருள்புரிய, நன்றாய்ப் பிரசன்னமாகி, நன்மை சொல்கிறது.

***குமரன் வடிவில் காட்சி கொடுத்ததால் குமாரபட்டி -*** காஞ்சிவனக்கருப்பன் கருப்பையாவிடம், *"உன்னுடைய மாமன் என்னை மறந்தான், என் சொல்லையும் மீறி, உய்யாண்டாளை உனக்கு இரண்டாம் தாரமாகக் கட்டிவைத்தான். இப்போது மகளைப் பறி கொடுத்துவிட்டான். நீயும் இறக்கத் துணிந்தாய். நான் என்றும் உனக்குத் துணையாய் இருப்பேன், இந்த ஒன்பது பொன்குடத்தையும் உனக்குக் கொடுப்பேன். சிவல்பட்டி காட்டினுக்குள்ளே உவர் நிலம் அதிகமாக உள்ளது, இந்தப் புதையல் பணத்தால் அந்த நிலத்தை வாங்கிப் பசுத் தொழுவை அங்கு வைத்து, சாணி பரவி, அதில் விதைத்து விவசாயம் செய். நீ இந்த இடத்தில் வீடு கட்டி, குமாரனுடையபட்டி என்று பெயர்கூறி வாழ்வாயாக. இன்று முதல் உனக்குத் துணையாய்த்தான் நான் இருப்பேன்"* என்று கூறி மறைந்தது.

கருப்பையாக் கோனாரும் காஞ்சிவனக் கருப்பனை வணங்கி, வீட்டிற்கு வந்து ஆதிகிழவனிடம் நடந்தைச் சொல்லுகிறார். கருப்பையாவும் ஆதிகிழவனும் அன்றே மரங்களைத் தயார் செய்து வீடு கட்டி, அந்த ஊருக்குக் ***குமாரபட்டி*** என்று பெயர்கூறி குடும்பத்துடன் அங்கே வாழத் தொடங்கினார். ஆதிகிழவன் பசுத்தொழு அமைத்துச் சாணி கொட்டி வைக்கப் பட்டி ஒன்றும் உருவாக்கினார்[2]. கருப்பையாக் கோனார் தினமும் 'குமாரபட்டிக் கருப்பன் துணை' என்று கூறி, பசுமேய்த்து, அந்த ***சிவல்பட்டி***க்காட்டில் வந்து பசுவடைத்து வந்தார்.

தினமும் அதிகாலையில் எழுந்து சிவல்பட்டி வழியே சென்று பசுமேய்த்துத் திருப்பித் தொழுவத்திற்குக் கொண்டு வந்து பசு அடைக்கத் தினமும் இரவு ஆகிவிடுகிறது. பல நாட்களில் இருட்டில் வரவேண்டியுள்ளது. எனவே சிவல்பட்டிக்கு அடுத்து, ***முல்லை வனக்காடு*** ஒன்று உள்ளது. அந்தக் காட்டிலே இரண்டு மைல் தூரத்தில் மைதானம் ஒன்று உள்ளது. அங்கே சென்று வீடுகட்டி வாழ்ந்திடலாம் என்று ஆதிகிழவனிடம் கருப்பையா ஓர் உபாயம் கூறி அனுமதி கேட்கிறார். அதற்குக் கிழவனும், நாம் குமாரபட்டி வந்து எட்டுவருடம் கழிந்துவிட்டது. நமது காஞ்சிக்கருப்பனுக்கு ஒற்றைப் பனை மரத்தின் அடியில் பீடம் போட்டு, வணக்கி வருகிறோம். உன்மனம் போல் அங்கு சென்றால், காஞ்சிக் கருப்பனை எப்படி வழிபட முடியும்? கூறு எனக் கேட்கிறார்.

---

[2] சாணிபட்டி என்ற பெயரில் உள்ளது.

***கண்டாங்கிக் கோனார் உருவாக்கிய கண்டாங்கிபட்டி -*** *"நமது காஞ்சிவனத்தான் பீடம் உள்ள இடத்திலிருந்து 'பிடிமண்' எடுத்துச் சென்று, புதிதாய்க் குடிபோகும் இடத்தில் வைத்துக் கோயில் கட்டிக் கும்பிடலாம், கருப்பனுக்கும் அங்கே ஓர் ஆலயமும் அமைத்து, கண்டாங்கிக் கோனார் என்ற உங்களுடைய பெயரை அந்த ஊருக்கும் வைத்து வாழ்ந்திடலாம்"* என்று கருப்பையா உபாயம் சொல்லுகிறார். ஆதிகிழவனும் நல்லதொரு சகுனம் பார்த்து, பனைமரத்தடியில் உள்ள பீடத்திலிருந்து பிடிமண் எடுத்து வந்து, முல்லைவனக் காட்டில் வைத்துக் கருப்பனுக்குக் கோவில்கட்டி, வீடும் கட்டி, அந்த ஊருக்குக் ***கண்டாங்கிபட்டி*** என்று பெயரும் வைத்து வாழ்கின்றனர். ஐந்து வருடங்கள் கழிந்தன. சிலர் கண்டாங்கிபட்டிக்கு வந்து குடியாய்ச் சேர்ந்து வாழ்ந்தனர்.

அப்போது மூன்று வருடம் ஏகமழை இல்லாமல், பஞ்சம் உண்டாகிறது. காஞ்சிவனச்சாமி கிழவனைப் பார்த்து, என்மகனே, *"நீ இந்தச் சிவல்பட்டிக் காட்டில் உள்ள அடர்ந்த உவர் நிலத்தில், சம்பா விதைத்து வரப்புகளை உயர்த்திச் சரிப்படுத்திவை"* என்று சொன்னது. கருப்பன் சொன்னபடியே ஆதிகிழவன் செய்து விதைநெல்லை அள்ளி விதைத்தும் வைத்தார். கதைபோல் இருக்குது, இந்தப் பஞ்சகாலத்தில் நெல் எப்படி விளையும்? என்று கிழவன் நினைத்து வீடு திரும்பினார். காஞ்சிவனக்கருப்பன் சொன்னசொல் தப்பாமல், அப்போது, அக்கினிமூலையிலே கருமேகம் எழுப்பி, கிழவன் வயலில் மட்டும் மழை பெய்தது, வயலுக்கு அப்புரத்தில் கண்மாய் துலங்கி இருந்தது. கண்டாங்கிபட்டிக் கோனாரும் பிரமித்து, *"இது கருப்பனுடைய வேலை"* என்று அதிசயித்து கருப்பனைத் துதித்து, வீடு வந்து சேர்ந்தார். அன்று பெய்த மழையானது அடுத்தவர் வயல்களில் பெய்யவில்லை. மூன்று வருடம் பஞ்சம் பொறுக்காமல், மற்ற குடிகள் எல்லாம் பஞ்சம் பிழைக்கச் சில தேசங்களுக்குச் சென்றனர். கண்டாங்கிபட்டியில் கருப்பன் அனுசரணையினால் ஆதிகிழவன் வயல்மட்டும் நன்றாக விளைந்து நின்றது. கூலிக்கு ஆட்களைக் கூட்டிவந்து கதிர் அறுத்து அடித்து, வைக்கோல்தனை ஒதுக்கி, தூற்றி எடுத்து நெல்லையெல்லாம் அழகர்மலைபோல் குவித்து வைத்திருந்தார்.


***அறம் செய்த ஆதிகிழவன் -*** அதுசமயம், வறுமையினால் வருந்திப் பஞ்சத்தினால் மெலிந்தோர் அங்கே திரண்டு வந்து நின்றனர். நம்மள் காஞ்சிவனச்சாமி மனமிரங்கி, அங்கே வந்தவர்களுக்கெல்லாம் மரக்கால் எடுத்து நெல்லை அளந்தளந்து கொடுத்தார். கருப்பன் அருளால் நெல் குன்றாதகுன்றாக விளைந்து கொண்டிருந்தது. ஊரார் அதிசயித்து கண்டாங்கிக் கோனார் குடும்பம் உயர்வு பெருகி, புத்திர சந்தானமுடன் பதினாறு செல்வமும், புண்ணியங்களும் பெருகி, வேந்தன் கிருபையினால் சந்தோஷமாக வாழ வாழ்த்தினர்.

***காஞ்சிவனக் கருப்பன் தயவில் கண்டாங்கிபட்டி -*** அருளுடைய காஞ்சிவனக் கருப்பன் தயவால், நம்மள் ஆதிகிழவன் வகையறாவினர் வளமாக வாழ்ந்திருக்க, வான் இறங்கி சுபமாய் மழை பொழிந்து, பகவான் கிருபையினால் கண்டாங்கிபட்டி பாரில் நலம் பெருகி உள்ளது.

***சுபம்***

--------------------------


**ஏடு 1**




உ
<u>வெண்பா</u>
ஆனைமுகனே, அம்பிகையாள் புத்திரனே,
கோனே, அடியார் குறை அகற்றும் தேனே,
காஞ்சிவனத்தான் கருப்பன் கதை கூற
வாஞ்சையுடன் நின்று துணை வா.

ஏடு 1 பின்பக்கம் ஏதும் எழுதப்பெறவில்லை.

ஏடு 2




உ
<u>சபை வணக்கம்</u>
முற்றும் உணர்ந்தவரே சகலகலை வேதமுரையுந்.(தெரிந்தோரே)
நல் தவத்திலே உதித்து கசடற கற்ற நாவலரே. (பாவலரே)
கானில் மயிலாடத் தானும் அதுபோலக் கண்டிருந்த வான்.(கோழி)
மானிலத்திலே அதுவும் சிறகை விரித்தாடும் மார்க்கம.(துபோல)




தமிழுக்கு அகத்தியராய் வித்தைக் கழஞ்சியம் தா....
முழுதும் தெரிந்தோம் எனவே பிதற்றுவார் கோ....
வாசமில்லா புஷ்பம் என்று வேதம் தெரிந்த வல்....
தசார்களும், ராஜர்களும், வாணி அருள் பெற்ற சத்....

ஏடு 3




(இ).ருப்பார் உலகினிலே நல்லோர்கள் யார்க்கு இனிய உபகாரமென
(வி).ருப்பமுடனே உதவி காசினியில் வாழ்வார், மேலும் அவர்க்கு இடர்கள்
(கொ).டுப் பார்க்கும் நல்வினைகள் செய்யத் துணிவார், சுருதிப்படி தவறார்,
(தவத்).தோர்களை மதித்து மேன்மையுறச் செய்வார், அரனைப் பணிந்திடுவார்,




...பாராட்டிடுவார், துன்மார்க்கம் என்றும் நாடார், இவர்கள் இது
(நல்)உபதேசமதால் நற்புத்தி ஆதரிப்பார், நீதமுள்ளோர்
(சபை)யோர் தனைப் பணிந்து, இன்னும் சிலது பேசுகிறேன் மா சபைக்கே,
(அடி)யேன் உரைத்த மொழி தன்னை ஆட்கொள்வீர், திறமாய் அறிவோரே,

ஏடு 4




உப்புநீர் மேகமதால் உலகில்ப் பிரவாகம் உண்டு, அதன்படியே
இப் புவியோர் முத்திபெற, சர்வ சுத்தி செய்யும் இயற்கை அது போலே,
என்று உணர்ந்தபடி, எங்கள் குருவாம் இராமனருள் பெற்றோங்கும்,
நன்றான சேதுபதி நாட்டில்ச் சிறந்து, நன்மை தரும் யானை



நகரம்[3] அதில் பிறந்து, சரஸ்வதி கடாக்ஷம் நன்றாய்ப் பெருக வென்று
மகரம் தனக்கு வலை வீசி நின்றோன்[4] சென்னி வளரும் வனிதை யவள்[5]
குலமும் சிறப்படைய சுடலைமுத்து எங்கள் குரு கூறினார் இக் கதையை


ஏடு 5



பார்த்து, பிழை திருத்தி, இந்த வர்ணிப்பை யாரும் படிக்கும்படியாக,
நேர்த்தியுடனே சபையை வணங்கி, சுகத்தோடு நின்று கதை கூறிடுவேன்.


ஏடு 5 பின்பக்கம் ஏதும் எழுதப்பெறவில்லை.

ஏடு 6




வல்லவனே, நீதியுள்ள காஞ்சி வடதேசம் வந்து அமர்ந்த புண்ணியனே,
சல்லாப சுந்தரனே, எங்கள் துயர் அகற்றும் சாந்தகுண சந்தனமே,
தேடாத் திரவியமே, தெள்ளமுதே[6], தேனே, திகட்டாக் கனிரசமே,
வாடா மரிக்கொளுந்தே, வற்றாத செல்வமே, எங்கள்குடி காக்கவந்த
மரகதமே, பொன்மலையே[7],

[3] சேதுபதி நாட்டில் உள்ள யானை நகரம் என்பது திருவாடானை.
[4] சிவபெருமான் (திருவிளையாடற்புராணம் - 57 வலைவீசின படலம்)
[5] சிவபெருமானிள் தலையில் உள்ள கங்கை (வனிதை = பெண், மனைவி)
[6] தெள்ளமுதே = தெள் + அமுதே = தெளிந்த அமுதமே.
[7] பொன்மலை = இமயமலை




நீதியுள்ள தெய்வமே, நல்லோர் அகத்தில் நின்று தரும் சுகமே,
ஆதிகருணாநிதியே, அலைகடலே, கற்றோர்க்கு அருமைக் கவித்துணையே,
கார்மேகம் போன்றதொரு வடிவுடைய ஞானக் கழஞ்சியமே, பாற்க்கடலே,
பார்முழுதுமே மணக்கும் பக்திக்கு வித்தே, பரமசுகமே அருளே.

ஏடு 7




நம்பினோர் உள்ளமதில் குடிகொண்டு நின்ற நன்மைக்கொரு முதலே,
சம்பரம[8] தயாநிதியே, குறைவற்ற செல்வமே, தருவே, திருவுருவே,
ஏழைக்கு இரங்கும் ஐயா, நல்வாக்குத் தந்து என்றும் துணையிருந்து
வேளைக்கு உதவி செய்யும் எங்கள் வட நாட்டுச்சாமி, வீராதி வீரனே வா,



தருமத் துரையே வா, வடநாட்டுத் தேவா, சாமி இப்போதே வா,
திருமால் வடிவே வா, காஞ்சிவனச்சாமி, எங்கள சித்தா, கருணை செய் வா,
காங்குருமால்[9] கட்டே வா, கோப்பாலம்[10] இட்ட நம்மள் கதம்பமணி[11] பொட்டேவா,
பாங்கு உடைய சீலா[12] வா, எங்கள் ஆதிகிழவன் ஆண்ட பகவான் பரிந்தேவா,


ஏடு 8



கருணை புரிந்தே வா, கட்டாணி[13]முத்தே, கண்ணே, மணியே வா,
தருணம் தெரிந்தே வா, எங்கள் மன மாசு அகற்றும் சாமி விரைந்தே வா,
காக்கும் துணையே வா, எங்கள் காஞ்சிவனச்சாமி கருப்பா கருணை செய் வா,
ஏற்கும்படியே வா, எங்கள் ஆதிகிழவன் ஆண்ட எஜமான் கிருபை செய் வா,


---

[8] சம்+பரம = பூரண பரமனே
(சம்பரம் = நீர், ஆடை, சரபம் என்னும் எட்டுக்கால் பறவை)
[9] காங்கு = நீலப்புடவை, உருமால் = தலைப்பாகை, முண்டாசு
[10] ॥ ஶ்ரீகி$^{3}$ரிதா$^{4}$ர்யஷ்டகம் ॥
த்ர்யைலோக்யலக்ஷ்மீமத$^{3}$ப்$^{4}$ரு'த்ஸுரேஸ்வரோ யதா$^{3}$ க$^{4}$னைரந்தகரைர்வவர்ஷ ஹ ।
ததா$^{3}$கரோத்$^{3}$ய: ஸ்வப$^{3}$லேன ரக்ஷணம் தம் ***கோ$^{3}$பபா$^{3}$லம்*** கி$^{3}$ரிதா$^{4}$ரிணம் வ்ரஜே ॥
[11] கதம்ப + மணி = பல்வேறுவகையான மணிகள் ஆன மாலை
[12] சீலம் = ஒழுக்கம்
[13] கட்டாணி = கட்டு + ஆண், சமர்த்தன், பலசாலி




வெள்ளிப்புடி அருவாள், எங்கள் காஞ்சிவனச் சாமிக்கு வெங்கலத்தால் வீச்சருவாள்,
அள்ளி கொடுத்த அருவாள், வடநாட்டுச் சாமிக்கு அதிக பலம் கொண்ட அருவாள்,
காலன் கொடுத்த அருவாள், நம்மள் காஞ்சிக் கருப்பனுக்கு கைலயங்கிரி மெச்ச அருவாள்,
கோலப்புடி அருவாள், ஆதிகிழவன் குணத்துக்கு உகந்த அருவாள்,

ஏடு 9




தேடிக் கொடுத்த அருவாள், அந்த வடநாடு விட்டு சீராட்ட வந்த அருவாள்,
காராகுளங்கண்மாய் பால்சுரக்க வைத்த[14] அருவாள்,
பாடிக் கறந்த அருவாள், நம்மள் ஆதிகிழவன் பசு காக்க வந்த அருவாள்,
வினைகள் தெரிந்த அருவாள், நம்மள் காஞ்சிவனச்சாமி வீரனுடைய வீச்சருவாள்,
முனைமுகத்துக்கு ஏற்ற அருவாள், நம்மள் குடி காக்க என்று முன்னாடி வந்த அருவாள்,




அருபது அடிச் சாட்டை, நம்மள் கருப்பனுக்கு அவனியத்தில் பொன்சாட்டை,
திருவுற்றவன் சாட்டை, எங்கள் காஞ்சிவனச் சாமி சீமானுடைய சாட்டை,
ஆனாலவன்[15] சாட்டை, திக்கு விசயம் அது புரியுமே சாட்டை,
மேனாலது சாட்டை, காசி வடநாடு வீற்றிருந்து பொன்சாட்டை,

ஏடு 10




பசுக்களுடன் சாட்டை, அந்தக் காவேரி நீந்தி[16] பரிந்து வந்துமே சாட்டை,
விசுவாசமாய்ச் சாட்டை, நம்மள் கிழவனுடனே வெகுமதியதாயச் சாட்டை,
துணை புரிந்துமே சாட்டை, அந்தச் திருச்சி நகரம் சுற்றிவந்த[17] பொன் சாட்டை,
அனைவோர் அதிசயிக்கும் காஞ்சி கருப்பன் அவனுடைய கைச் சாட்டை,

[14] காஞ்சிவனக் கருப்பனின் அருளால், காறாங்குளக்கண்மாய்த் தண்ணீர் பால்போல் மாறியுள்ளது. இச் செய்தி ஏடு எண் 88இல் உள்ளது.
[15] ஆனாலவன்? ஆறாலவன்?
[16] காவேரி வெள்ளத்தை நீந்திக் கடந்த செய்தி ஏடு எண் 19இல் உள்ளது.
[17] திருச்சியில் மாடுகளை அடைத்து வைத்த செய்தி ஏடு எண் 23இல் உள்ளது.




மண்டியிடுங் கால்களுக்கு நம்மள் கருப்பனுக்கு மகிளம்பூ சல்லடமா
அண்டினவரைக் காக்கும் காஞ்சி கருப்பனுக்கு அழகு பணியோ துலங்க
தூக்கிவைக்கும் கால்களுக்கு நம்மள் வடநாட்டுச் சாமிக்கு துத்திப்பூ சல்லடமாம்
சிலாக்கியமுள்ள[18] பாதம் அதில் மாணிக்கம் சேர்ந்த தங்க மெருவடியாம்[19]

ஏடு 11




அறுத்த கடகம்[20] பதைக்கம் ரத்னக் குல்லாவும் ஆரமுடன் சோதிமின்ன,
விஸ்தார மாரினிலே[21] முத்துச் சரங்கள் வெகு ஒலிபரப்ப,
காதில் இரு குண்டலங்கள் நம்மள் காஞ்சிவனச் சாமிக்கு கதிரவன் போலே ஜொலிக்க,
மேதினியிலே நமது கருப்பய்யாவுக்கு வீச்சருவாள் சோதிமின்ன,



கட்டினான் கச்சையது[22] புண்ணியனும் அங்கே கருங்கச்சை தொங்கலிட்டான்,
அட்டி[23] இல்லாதே நமது காஞ்சிவனச்சாமி அழகான மேனியிலே,
கபாயிவுடன்[24] அங்கியிட்டு[25] கருப்பனுட தோளில் கனத்த முத்துக் கோர்வை யிட்டு
சுபாசுபங்கள் தான்பெறவே, வல்லவேட்டா[26] துரையும்[27] துகில்[28] அணிந்து,

ஏடு 12




சாய்ந்த கொண்டை தான் முடித்து, முத்துசரங்கள் சரியாய் அதில் பொருத்தி,
பாய்ந்து புரவியின்மேல் நம்மள் ஆதிகிழவனுடன் பரிந்து வந்தோன் தன் கதையை

---


[18] சிலாக்கியம் = புகழத்தக்கது.
[19] மெருவடி = மருவடி, ".... மருவடி வாண வதனங்க ளாறும்..." - கந்தர் அலங்காரம்.
[20] கடகம் = நண்டு
[21] மாரினிலே = மார்பினிலே, நெஞ்சிலே
[22] கச்சை = கோவணம், கௌபீனம், கவசம், நாடாவால் கட்டப்பட்டது
[23] அட்டி = தாமதம், தடை
[24] கபாய் = நிலையங்கி, தோளில் இருந்து கால்வரை உள்ள சட்டை
[25] அங்கி = நீண்ட சட்டை
[26] வல்லவெட்டு = பூணூல் அணிவது போன்று, தோளில் அணியப்படும் சரிகைப் பட்டுத் துண்டு.
[27] துரையும் = கருப்பசாமியும்
[28] துகில் = பட்டினால் நெய்யப்பெற்ற துண்டு

நன்றாக கூறிடவே, சொற் கொண்ட குற்றம்நாடி இதில் இருந்தால்
இன்று பிழை நீக்கி, காஞ்சிவனச் சாமி இருப்பீர் துணையாக.
ஏடு 12 பின்பக்கம் ஏதும் எழுதப்பெறவில்லை.

ஏடு 13




மாலைக் கழுத்தி, எங்கள் குடிகாக்க வந்த மாது, சிரோண்மணியே,
சோலைக் கிழி மொழியே, காசிப் பிராமணத்தி[29], சுந்தரி, உய்யவந்தாள்,
சோதிமணி நிறத்தி, சர்வ ஆபரணம் துலங்கும் துடி இடைச்சி,
ஜாதிப் பிராமணத்தி, எங்கள் ஆதிகிழவன் ஆண்ட சத்திகுண நிறத்தி,




சாந்துக் கழுத்தி, குங்குமப்பூ மேனி சந்தனம்மே மறத்தி,
பூந்துகில் பூமணத்தி, எங்கள் குடிகார்க்க வந்த பொற்றாமரை நிறத்தி,
சமத்தி, பராபரத்தி, நித்ய கல்யாணி, தற்பரத்தி, அற்புத அத்தி,
மறத்தி, குணகாரி, நீ மாணிக்கவல்லி, மாசற்ற மா நிறத்தி,

ஏடு 14




சக்தி, மகா சமத்தி, ஆனந்தவல்லி[30] தாயே, வகை நிறத்தி,
பத்தினி, வீரசத்தி, ஆதி வடதேசம் விட்டு பரிந்துவந்த காரணத்தி,
வேளைக்கு உதவும் மயிலே, நல்லோர் குலத்தில் வீற்றிருந்த பெண்மயிலே,
காளை பசு மந்தையுடன் ஆதிகிழவனுடன் வந்த காரணி, இவ் வேளையிலே



கட்டணும் பட்டாடை, எங்கள் காசிப் பிராமணத்தி காலிலே பாதசரம்,
திட்டமுடன் பொன் ரவிக்கை, எங்கள் உய்யவந்த சத்தி தேவி, மிக அணிந்து,
மார்பில் சரப்பளியும், நம்மள் குடிகாக்கும் தேவிக்கு வயிரக்கல் சோதி மின்ன,
பார் முழுதுமே ஜொலிக்க ரத்ன மூக்குத்தி, நம்மள் பத்தினியுமே அணிந்து,


ஏடு 15



கைக்குக் கணையாழி, கண்டோர் மயங்க கைதனிலே பொன்வளையல்,
பக்குவமாய்த்தான் அணிந்து நம்மள் உய்யவந்தாளும் பல பணியுமே[31] பூண்டு,
சந்திரப் பிறையுடனே சூரியப்பிறையிட்டு சரியாய் சடையினிலே

[29] பிராமணகுலம், பிராமணசாதியில் பிறந்த பெண்
[30] ஆனந்தவல்லி = மானாமதுரை அப்பாளின் பெயர்
[31] பணி = ஆபரணம்


இந்திரவர்ண புஸ்பம் எல்லாம் நம்மள் ஈஸ்வரிதானும் இனிதாய் சடைக்கு அணிந்து,



குங்குமத்தாலே திலகம்[32] நம்மள் உய்யவந்தாளும் குமரி மிக அணிந்து,
சிங்காரப் பூ மடந்தை, அடியேனுடைய சிந்தை தனிலிருந்து,
ஏது குற்றம் சொற்ப் பிழைகள் இந்த ஏட்டில் ஏதுவும் இருந்தாலும் நீ பொருத்து,
தோது துணை புரிவாய், நம்மள் ஆதிகிழவன் ஆண்ட சுந்தரி உய்யவந்தாள்.


## ***காஞ்சிவனக் கருப்பன் தென்னாடு வந்த கதை***

ஏடு 16



ஹரி ஓம்
நன்றாக குருவாழ்க
குருவே துணை

ஐந்து கரத்தோனே, உமையாள் தனக்கு அருமைத் திருமகனே,
கந்துக மாமுகனே, உலகை வலஞ் சுற்றி வந்த கர்த்தனே, மெய்ப்பொருளே,
காஞ்சி வனக் கருப்பன் தென்னாடு வந்த கதையை இனிது உரைக்க
நான் சிறியேன் இன்று மிக உன்னைப் பணிந்து நன்மை பெறவே இதுவை[33]
வர்ணிப்பாய் கூறுகிறேன், அடியேனுடைய வாக்கில் குடியிருப்பாய்,




சொர்ணக் கணபதியே, எந்தன் கவிக்குத் துணைபுரிய வேணும் ஐயா,
நாடு விளையாமல், கருப்பனுட சீமை நல்லமழை பெய்யாமல்,
பாடுபலனில்லாமல், காஞ்சி வன நாட்டில் பஞ்சம்[34] அது வந்ததினால்,


---

[32] திலகம் = நெற்றித் திலகம், நெற்றியின் மத்தியில் குங்குமப் பொட்டு வைத்தல்,
[33] இதுவை = இதை, இவைகளை.
[34] இங்கே குறிப்பிடப்படுவது தாதுவருடப் பஞ்சமாக இருக்கலாம். 1876-78 ஆம் ஆண்டுகளில் கடும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. இது சென்னை மாகாணப் பஞ்சம் என்றும் அழைக்கப்படுகிறது. https://ta.wikipedia.org/s/iys

இருபத்தோர்[35] பந்தி, அறுபத்தொரு[36] சேனை தளம்,
ஒருமிக்கவே கூட்டி, பாண்டியன் தேசம் உறுதியுடன் செல்லவென்று,
ஏடு 17




ஆதிகிழவனும் கட்டினான் பெட்டி[37], தூக்கினான் தென்முகமாய்[38],
நீதி தவறாத துரை நம்மள் 'காஞ்சிவனக் காளை' நெஞ்சமகிழ்ந்தே இனிதாய்,
அஞ்சாதே என்மகனே, இந்த கருப்பன் உன்னோடு ஆதரவாய் உன்னுடைய
சஞ்சலத்தை மாற்றி வைக்க வருவேன், மகனே தயங்காதே பிள்ளாய் நீ,



பசுக்களும் கன்றுகளும் காளைகளும் எல்லாம் பாங்குடனே தென்னாடு
விசுவாச மாகவே நீ சென்றால், வருவேன் இந்த வீரன் பயணம் என்றான்,
நல்லது என்றுமே, கிழவன் காஞ்சி கருப்பனை நாடி அங்கே சொல்லுகிறான்,
வல்லவனே காஞ்சிவனம் என்னுடனே நீயும் வாரும் என்றுதான் பணிந்து,


ஏடு 18



காஞ்சிவனத்தை விட்டு ஆதிகிழவன் கருப்பன் துணையெனவே
ஈஞ்சி[39] புதர்களையும் சுனைகள் எல்லாம் தாண்டி நம்மள் எஜமான் கிருபையினால்
வரும்போதுமே, கிழவன், காவேரி வெள்ளம் வரக்கண்டு மெய்பதரி,
ஒரு முகமாய் பசுக்களையும் ஓட்டிவந்து, அங்கே உரைப்பான் கிழவன் அப்போ[40]


---

[35] இருப்பத்தோர் = 21 , இருபத்தி ஒன்று,
21 பந்தி என்பது,
சந்தனக் கருப்ப னொன்னு, சங்கிலி கருப்பன் இரண்டு, காளாங்கிக் கருப்பன் மூணு, உச்சிக் கருப்பன் நாலு , ஊமைக் கருப்பன் அஞ்சு, உருளு தேரடிக் கருப்பன் ஆறு, ஆறு கருப்பனுக்கு ஏழாவதாக பெரிய கருப்பன் எசமானாக ஏழு கருப்பனும் பிறக்க. அந்திமாடன் சந்திமாடன் ஆகாயமாடன் சுடலைமாடன் லாடனென்ற சந்நியாசி ஆக மாடன் வகையில் ஐந்தும். அஞ்சும் ஏழும் பன்னிரண்டு. சங்கன், சமயன் பனிரெண்டும் இரண்டும் பதினாலு. சப்பாணி சோனை சமர்த்தர்கள் காவல் ஆகப் பதினாலு ரெண்டும் பதினாறு. வீரபத்திரன் என்னும் அக்னி வீரன், அடங்காத இருளன் வீரன் வகையில் இவர்கள் இணைப்பு பதினெட்டு. அந்தப் பராசக்தியின் துர்க்கை என்ற ஒன்பது பிறவியிலே, மூணு பிறவி, ஆத்தா பரமேஸ்வரி படிவாசல் சக்தி வல்லிபராபரி, அவள் பேச்சி யென்றும் இருளாயி யென்றும் ராக்காயி எனவும் ஆக இவர் பிறவி மூணு வகை. பதினெட்டு மூணுங் கணக்கு பந்தி இருபத்தியொன்னு.
(18ஆம்படிக் கருப்பன் வர்ணிப்பில் உள்ளபடி - தகவல் வழங்கியவர் திரு. பெ.சொ. சீனிவாசன் அவர்கள், பழையூர்பட்டி, கோட்டநத்தம் பட்டி அருகில், மேலூர் வட்டம்.)
[36] அறுபத்தொரு = 61, அறுபத்தி ஒன்று,
[37] பெட்டி = வழிபாட்டுப் பொருட்களைப் வைத்திருக்கும் பெட்டி.
[38] தென்முகமாய் = தென்திசை நோக்கி, தெற்குத் திசையைப் பார்த்து,
[39] ஈஞ்சி = ஈச்சஞ் செடி
[40] அப்போ = அப்பொழுது




வகைமோசம் வந்ததுவே, இந்தக் காவேரி வெள்ளம் வழிமடக்கி கொண்டதுவே, நகை புரிவார் எல்லோரும், கருப்பய்யா உன்னை நம்பி வந்தேன், நான் பாவி, ஆனால் சதம்[41] என்பேன், இதில் அக்கரை போய்ச் சேர யார்எவரை தஞ்சம் என்றே, சீரைக் குறைத்திடவோ, அடா பாவி, தெய்வமே செய்துவைத்த கோலமிதோ,

ஏடு 19




உன்னை நம்பி வந்த பலன் இதுதானோ ஐயா, ஓகோ, விதிவசமோ, என்னையும் பசுக்களையும் இந்த ஆற்றிலே தள்ள ஏனோ வருதி[42] சொன்னாய் என்று மனம் பதரி, கண்ணீர் சொரிய, நம்மள் எஜமான் மனமிரங்கி, இன்று வருந்துவது ஏன், பதறாதே பிள்ளாய், இரைந்து[43] வரும் வெள்ளம் அதை,




தள்ளிக் கரைசேர்த்து, நம்மள் பசுக்களை ஓட்டித் தான் வருவேன், அஞ்சாதே, துள்ளி வரும் மாடுகளை இப்போ அக்கரை போகச் சொல்லுகிறேன், பாரும் என்று, சாட்டையினாலே வீச, அந்தப் பசுக்கள் எல்லாம் நீரில்தான் பாய்ந்து நீந்திவர, மாட்டைக் கடத்தி விட்டு, நம்மள் காஞ்சிவனக் கருப்பன் வாரும் என்று கிழவனையும்,

ஏடு 20




அவனுடைய தேவியையும், சூராவளி போல் அந்தரத்திலே தூக்கி, கவனமுடன் வெள்ளமதைக் கடந்து, வெகுதூரம் நம்மள் கருப்பன் இறக்கி விட, பொழுது மறைந்ததினால் இந்த இடத்தில்ப் போக்குவீர் இன்றிரவை[44] பழுதொன்றும் வாறாமல் காத்திடுவேன் இப்போ படுத்து உறங்கும் என்று சொல்லி,




[41] சதம் = 100 (நூற்றுக்கு நூறு)
[42] வருதி = வாய்க்கேள்வி கேட்பவருக்கு உத்தரவு கொடுத்தல்
[43] இரைந்து = இரைச்சலுடன், சப்தத்துடன்.
[44] இன்றிரவை = இன்றைய இரவுப் பொழுதை

ஐயன் விடை கொடுக்க, நம்மள் கிழவனும் அங்கே அயர்ந்து நித்திரை போகையிலே,
வையத்தில் கீர்த்தி பெற்ற, சிற்றூர் கிராமம் வாழும் பிரபலத்தான்[45], காராளன்[46] வைத்திருந்த செங்கரும்பு தோட்டம் கண்டு பசுக்களெல்லாம் நேராகச் சென்று அங்கே சந்தோஷமாக நின்று கொடிவால் முறுக்கி,

ஏடு 21




ஓடிவந்துமே கரும்பை ஒடித்து, மிதித்து, ஒன்றும் இல்லாதபடி,
நாடி அதைத் தின்று கொண்டு, கரும்பை அழித்து, நடுநடுங்க சத்தமிட்டு,
தவ்வாளி[47] போட்டு நிற்க, தூக்கம் தெளிந்துதான் பார்த்தானே கிழவன்,
எவ்வாறு போனதுவோ, நம்முடைய மாடு எந்த இடம் சென்றதுவோ,




போனவழி தெரியேன், என்ன செய்வேன் என்று, புலம்பி, அந்த மே கிழவன்
கானகத்திலே கதற, நம்மள் காஞ்சிவனச்சாமி கருப்பன் மனமிரங்கி,
ஏண்டா கிழப்பயலே, இப்போ வருத்தமடைய என்னகுறை உனக்கு,
வேண்டாமடா, நீயும் நம்மள் பெட்டியுடனே விரைவில் பயணமிடு,

ஏடு 22




போறேன்[48] பசு மேய்க்க, உன்னுடைய மாட்டை பொழுது விடியுமுன்னே
தாரேன், எழுந்திறடா, கருப்பன் இருக்கும்வரைதான் மயங்க வேண்டாமே,
என்று சொல்லத்தான் கேட்டு, நம்மள் கோனார்மகனும் எழுந்து அந்த ராத்திரியில்,
சென்றானே தென்முகமே, கருப்பன்துணை யென்று சிறந்த வனந்தனிலே,




சிற்றூர்க்கு அதிபதியாம் காராளன் தானும் செங்கரும்பை பார்த்துவர,
முற்றும் அழிந்துவிட்டு நம்மள் கோனார் பசுக்கள் மூச்சுவிட்டுமே உறங்கி
படுத்திருக்கவே பார்த்து, காராளனங்கே பரிந்து விரைவினிலே
அடுத்துப் பசுமந்தைகளை அடித்து விரட்டி, ஆக்ரமித்து கோபமுடன்

45 பிரபலத்தான் = பிரபலமானவன், famous
46 காராளர் = பயிரிடும் உரிமை உடையோர், உழுதுண்போர், கருங்களமர், வெள்ளாள சமூகத்தினர்,
47 தவ்வாளி = தவ்வி விளையாடி
48 போறேன் = போகிறேன்

ஏடு 23




நாலு திக்குமே பார்க்க மாட்டுக்குரியவரை நாடியங்கே காணாமல்,
மேலும் மனங் கொதித்து, இந்த பசக்கள் எல்லாம் இங்கே விரட்ட முடியாது, எனவே
கூலி கொடுத்து நல்ல வீரர்களைப் பார்த்து குணமாய் அழைத்து வந்து,
வேலிதனைத் தாண்டி கரும்பை அழித்த நம்மள் வீரன்பசுவை யெல்லாம்




பவுண்டில்[49] அடைக்க வென்று, அந்த திருச்சிநகரம் பத்திரகாளித் தெருவில்
கவுண்டருட வீதியிலே நம்மள் கோனார் பசுக்கள் கனைத்து வருகுது அங்கே,
ஓட்டி வந்துமே பசுவைப் பவுண்டில் அடைத்தான், உறுதியுடனே அவனும்,
நாட்டில் இதை ஓட்டவரும் பசுக்காரனையும் நன்றாகவே பிடித்து,

ஏடு 24



அடித்து, மிதித்தது, அவனை நல்ல கரும்புக்கு உரிய ஆஸ்த்தியைதை[50] வாங்கி,
பிடித்த பிடியோடே கட்டி வைய்யும்[51] என்று போனான், பதிவு சென்றான்[52],
காராளன் சொன்னபடி, அந்த பவுண்டுக்கு அதிகாரி கதவை அடைத்தும், அங்கே
யாராலுமே உடைக்க கூடாத பூட்டு ஆறிரண்டு[53]தான் போட்டு




பூட்டிவிட்டு, வீட்டில் வந்து பவுண்டுக்கு உரியோர் போஜனம்[54] செய்தே இருக்க,
நாட்டிலுள்ள ஜனங்கள் எல்லாம் நம்மள் பசுக்களைப் பார்த்து நாணி, அதிசயித்து
இருக்கும் அந்த நேரமதில், நம்மள் ஆதிகிழவன் ஏகி நெடுந்தூரம்
அருக்கன்[55] மறைவானதினால். இவ்விடத்தில்தானே அமர்ந்து பின்னால்
போவோமேன்று,


ஏடு 25

---

[49] பவுண்டு = ஆங்கிலச் சொல். தண்டைக்குரிய ஆடு மாடுகளை அடைத்து வைப்பதற்கான அரசு இடம். இங்கே அடைக்கப்பட்ட ஆடுமாடுகளை உரிமையாளர் அவர்களது ஆடுமாடுகளால் உண்டான சேதத்திற்கு உரிய தண்டத்தொகையை அரசுக்குச் செலுத்தி ஆடுமாடுகளை மீட்டுச் செல்வார்கள்.
[50] ஆஸ்த்தியத்தை = சொத்துமதிப்பை, இழப்பீடு.
[51] கட்டி வைய்யும் = கட்டி வைக்கவும்
[52] பவுண்டில் மாடுகளை அடைத்து வைத்துள்ளதைப் பதிவு செய்திடச் சென்றான்.
[53] ஆறிரண்டு = 12
[54] போஜனம் = உணவு, சாப்பாடு
[55] அருக்கன் = ஞாயிறு, சூரியன்,




கருப்பனுட பெட்டி தன்னை அந்தக் காட்டில் இறக்கிக் கவனமுடன் வைத்து விட்டு,
விருப்பமொன்றும் இல்லாமல் நம்மள் பசுக்கள் வராத விசனமுடனே, கிழவன்
விசுவாசமாக நம்மள் காஞ்சிக் கருப்பன் மேதினியிலே யிருக்க,
பசுக்களெல்லாம் காணோமே, கருப்பையா என்று பதரி வருந்தயிலே,




மனம் இரங்கி, காஞ்சிவனம் காத்தவரை என்றும் மறவாமல் காப்பது என்று
தனமிகுந்த செல்வமெல்லாம் தழைத்து மணமோங்கும் தாழை மகிழ்[56] கொன்றை
பலா
சோலை பூங்காவுகளும் நருமத்தை[57] யோடே[58] துலங்கு எலுமிச்சமுடன்
சாலைதனில் உயர்ந்த தேக்கு வகையும் சரிந்த கமுகு தெங்கு

ஏடு 26




சீரும் திருவழகும், அந்த திருச்சி நகரம் சிறந்து விளங்கிடவே,
யாரும் அதிசயிக்க, செந்நெல் விளைந்து, அருமைப் பெருமை யெல்லாம்
கண்டு, கழி கூர்ந்து, கருப்பன் குதிரை கால் நடனம் செய்யுது,
குண்டு பரியுது, நம்மள் காஞ்சிவனச் சாமிக்கு கோபமிகக் கொள்ளுது,



பவுண்டு தனைக்கண்டு கருப்பன் குதிரை பாயுது வேகமுடன்,
கவுண்டருட வீதியிலே அன்று இரவு கப்புது[59] செந்தூசி,
பஞ்சவர்ணப்[60] புரவியது, அந்த பவுண்டு தனைக் கண்டு பலத்த கதவுதனை
அஞ்சாமல்தான் மிதிக்க, பூட்டுகள் எல்லாம் தெரித்து அவனியதில் உதிர,


ஏடு 27



பவுண்டுக்கு அதிகாரியையும் காலால் மிதித்துப் பாரில் மடியவிட்டு,
கவுண்டருட வீதியிலே நம்மள் கருப்பன் குதிரை கால் நடனம் கொள்ளுது,


[56] மகிழ் = மகிழம் அல்லது வகுளம் அல்லது இலஞ்சி மரம்
[57] நருமத்தை = நார்த்தை?
[58] யோடே = உடன்
[59] கப்புது = கவ்வுது, அடர்ந்து பரவியது
[60] பஞ்சவர்ணம் = ஐந்து நிறங்கள்

கோனார் பசுக்கள் எல்லாம் கொடிவால் முருக்கி குமுறுது வீதியிலே,
யேனோ[61] புதுமையிது என்று எவரும் பேச, நம்மள் எஜமான் கிருபையினால்




கோவுகளுமே பரிந்து நம்மள் கிழவனைக் கண்டு குணமாய் வனம் தனிலே
மேவுகையில், காஞ்சிவனம் ஆதிகிழவனுக்கு விளம்புவான் ஓர்வசனம்,
போடா மகனே, நம்மள் பசுக்களை ஓட்டிப் புகுந்து நீ தென் முகமாய்,
வாடா, மயங்காதே அந்த <u>சிங்கம்புணரி</u> வந்திடுவாய் அங்கே தான்,

ஏடு 28




<u>சேவுகன்</u>[62] என்றே ஒருவன், என்னைப் போல் வீரன் திறமை குறையாதோன்,
காவுகள்[63] பூஞ்சோலை பல நறுமணங்கள் வீசும் காட்டில் அவன் மேட்டிமையாய்[64]
காசி[65] வடதேசம் அதில் பஞ்சங்கள் வந்த காரணத்தினால்ப் பலரும்
பேசி இந்தத் தென்னாடு வருபவரை யெல்லாம் பிடித்தும் அந்த சேவுகனும்,



குலதெய்வமான அதுவின் குணத்தை அரிய கோமான் மனதில் எண்ணி,
பலம் உடைய கொப்பரையில் பசுவ நெய் ரெப்பி[66] பரிந்து அனல் மூட்டி[67]
மரக்கால் தனை எடுத்துக் கொதிக்கின்ற நெய்யை வாரி <u>மழுவை</u>[68] எல்லாம்
கரக்கின்ற பாலது போல் சுடாதபடியாய் கணக்காய் அளந்து சொன்னால்,

ஏடு 29



போகலாம் தென்னாடு, இல்லாது போனால், பிறந்த உங்கள் தேசம் அது
ஏகலாம்[69], என்று சொல்லி, அவர் சாமியுட[70] பெட்டி யெல்லாம் பறித்தும், அவன்
அடித்து விரட்டி, அங்கே, உங்கள் குலசாமியை ஆதிரிக்க சொல்லும் என்று

---

[61] யேனோ = ஏனோ, ஏது காரணத்தினாலோ
[62] சேவுகன் = சேவுகப் பெருமாள் (சிங்கம்புணரியில் உள்ள தெய்வம்)
[63] காவு = சுங்கவரி, பாதைவரி, உயிர்க்காவு, உயிர்ப்பலி,
[64] மேட்டிமையாய் = உயர்குடி ஆட்சியாய், சர்வாதிகாரியாய்,
[65] காசி = காஞ்சி, காஞ்சிபுரம்
[66] ரெப்பி = நிறைத்து
[67] அனல் மூட்டி = தீ மூட்டி, தீ வைத்து,
[68] மழு = பழுக்கக் காய்ச்சிய இரும்பு
[69] ஏகலாம் = போகலாம்,
[70] சாமியுட = சாமியுடைய

தடித்தனங்கள்[71] செய்திருக்கும் அந்த சேவுகனை, மற்றசாமி குலசாமி யெல்லாம்

கண்டு மனம் பதறி, காளிகளும் மற்ற காட்டேரி துர்க்கை யெல்லாம்
அண்டாமல்[72] ஓடிடவே, அந்த சிங்கம்புணரி அரசு புரிந்திருக்கும்
சேவுகன் ஆலயத்தில், நம்மள் பசுக்கள் எல்லாம் ஓட்டி, தீரன் வனத்திலே நீ
கோவுகளைத்தான் மேய்த்து கொண்டிருப்பாய், ஏதும் குற்றம் சிறிது வந்தால்

ஏடு 30

வருவேன், பயணமிடு, நம்மள் பசுக்களுடனே மகனே பயணம் என்றான்.
திருமங்கை, கோதை, வல்லி, சிங்காரி, ரத்தினம், செங்கமலம் பூ மடந்தை,
மாணிக்கவல்லி, சிறாவேங்கை[73], ஒயிலால், வாருதி[74], கோதாபுரியாம்
பாணி[75] கமலமதி[76], லட்சுமி, சந்தானம், பார்வதி, ஏகாம்பாளும்,


நடையழகி, கட்டழகி, சந்திரபிறை, சிந்து, நாராயணி, அழகு,
படை கூட்டி, வேணியம்மா[77], சங்குவதி[78], தந்தி[79], பத்தினி, சிங்காரம் என
என்று சில நாமம் இட்ட நம்மள் கோனார் பசுக்கள் எல்லாம் ஒருமுகமாய்
சென்று, விரைவினிலே நம்மள் சிங்கம்புணரி சேவுகன் ஆலயத்தில்

ஏடு31

முன்பாகவே பசுக்கள், அந்த சோலை தனிலே முண்டுப் புதர்களுமே
தன் காலாலே கிளப்பி, செடிகொடிகள் எல்லாம் தாறுமாறாய் மிதித்து,
கற்பக பூஞ்சோலையிலே, நம்மள் கிழவன் பசுக்கள் காலாலும் கொம்பாலும்
அற்ப்பரு[80] செல்வம், அது அழிவது போலே, ஆக்குது[81] தோப்பு தன்னை,


---

[71] தடித்தனங்கள் = அடாவடித்தனம்
[72] அண்டாமல் = அணுகாமல், சேராமல்
[73] சிறாவேங்கை = குட்டிப் பெண்வேங்கை (சிறா = சிறிய, குழந்தை)
[74] வாருதி = கடல்
[75] பாணி = தனித்தன்மை (style), அவனுடையபாணியில் பதில் சொன்னான்
[76] கமலம் = தாமரை, மதி = சந்திரன் (கமலமதி = மகாலெட்சுமி)
[77] வேணி = சடை, தலைமுடி
[78] சங்குவதி = சங்கில் இருந்து பிறந்தவள், தடாதகைப் பிராட்டி,
[79] தந்தி = தந்தம்
[80] அற்ப்பரு = அற்பர்களுடைய, சிறுமை புத்தி உடையவர்களுடைய
[81] ஆக்குது = ஆக்கியது




கண்டான் பெருமாளும்[82], இந்த சிங்கம்புணரி காட்டிலே இப்புதுமை,
அண்ட ஒண்ணாக் கோபமுடன் சேவுகப் பெருமாள் அர்ச்சகனை அழைத்து,
மந்தைப் பசுக்கள் எல்லாம் நம்மள் சிங்கம்புணரி வளத்தை அழிப்பது போல்,
விந்தை யுடனே நமது சோலைதனில் வந்து மேலும் இதுவனத்தை

ஏடு32




அதம்[83] ஆக்கிரபடியால்[84] இந்த மாட்டு இடயனுக்கு அறிவு கெட்ட காரணமோ,
விதமாக சென்று, அவனை விரைவில் அழைத்து, வெகுமானம் தாரோம்[85] என்று
கொண்டுவா, என்று அனுப்ப, அர்ச்சகனும் ஓடி, கூரிய தெல்லாம் உரைக்க,
கண்டு மனம் பதறி, நம்மள் ஆதிகிழவன் கருப்பன் துணையென்று சொல்லி,




எண்ணாது எண்ணி, நம்மள் காஞ்சிவனச்சாமி இருக்கப் பயமில்லை யென்று,
கண்ணாரக் கண்டு, அந்த சேவுகன் பாதம் பணிந்து சரணம் என்றான்,
அப்போ[86] பெருமாளும்[87], ஏண்டா, நமது அடர்ந்த பூங்காவுகளும்,
இப்போ[88] உனது பசுக்கள் எல்லாம் வந்து எனக்குரிய புஸ்ப்பம் முதல்

ஏடு 33




சோலை யெல்லாம் அழித்து, நிர்த்தூளி[89] செய்ய, துரை போல மமதை கொண்டு
வேலையில்லாதோர் எனவே என் வனத்தை அழித்தாய், வீரமோ ஆணவமோ,
காட்டை அழித்ததினால், என்கொப்பரையில் மழுவு காயுது, நீயும் இப்போ
சேட்டை செய்த காரணத்தால், நம்மள் மரக்கால் எடுத்து, சிந்தாமலே மழுவை




[82] பெருமாள் = சிங்கம்புணரி சேவுகப்பெருமாள்
[83] அதம் = அழிவு, நாசம் · கொலை · தாழ்வு.
[84] ஆக்கிரபடியால் = ஆக்குகின்ற செய்கையால்
[85] தாரோம் = தருகிறோம்
[86] அப்போ = அப்பொழுது, அந்த நேரத்தில்
[87] bபருமாளும் = சேவுகப் பெருமாளும்
[88] இப்போ = இப்பொழுது, இந்த நேரத்திலே destroy utterly
[89] நிர்த்தூளி = அழித்தல், destroy

இரு கரத்தினால் வாரி, இந்த மரக்காலை ரெப்பி[90], எண்ணித் தொகை கூறி,
ஒருமிக்கவே[91] மழுவை அளந்தால், இதுநேரம் உயிர்கொண்டு போவாய் நீ,
சுடுது என்று நீ பயந்தால், இந்த மழுவிலே உன்னைத் துவைப்பேன் எனப் புகல[92],
கடுங்கோபமாய் உரைத்த காரணத்தைக் கண்டு, நம்மள் கிழவன் கலங்கும்
அதுநேரம்,

ஏடு 34




நல்ல அது வேளையினில், நம்மள் காஞ்சிவனச்சாமி நாடி மிக சன்னதமாய்[93],
வல்லபமாய்த்தான்[94] இரங்கி, அடா சிங்கம்புணரியனே, வாரேன் கருப்பன், இன்று
பங்கமொன்றும்[95] இல்லாத என் குழந்தையை உன்னால் பணிந்தும் மழுவை அள்ள,
சிங்கம்புணரியனே, சேவுகா, உனக்குத் திறமோ, யாது தரமோ,



கொப்பரையில் மழுவை யெல்லாம் மரக்கா**ல் எ**டுத்துக் கோதுகிறேன்[96], பாரும்
என்று
தப்பாமலே வாரி[97] நம்மள் காஞ்சிவனச்சாமி தானே மழுவை யெல்லாம்
அள்ளி, மரக்காலில் அளவு செய்து, நம்மள் ஐய்யன் தொகை கூறி,
தள்ளி விரைவினிலே கருப்பனும் அங்கே சாற்றுகிறான் கோபமுடன்,


ஏடு 35



சாட்டையடி[98] செய்ததினால் உன் பூசாரிக்கெல்லாம் தானே இதுமுதலாய்
பொட்டையெனவே[99] ஒருகண் போகும் என்று நம்மள் புண்ணியனுமே கூற,
திடுக்கிட்டுமே பயந்து, அந்த சேவுகப் பெருமாள் செப்புகிறார் கருப்பனிடம்,
அடுக்காத வார்த்தை சொல்லக் கூடாது என்று, ஆதரவாய்ச் சேதி சொல்ல,


---

[90] ரெப்பி = நிறைத்து
[91] ஒருமிக்க = ஒருசேர , ஏகமாய்
[92] புகல = சொல்ல
[93] சன்னதமாய் = ஆவேசமாய், கடுங்கோபமாய், வீறாப்பாய்
[94] வல்லபம் = வன்மை, வலிமை, திறமை
[95] பங்கமொன்றும் = பாதகம் ஒன்றும்
[96] கோதுதல் = சிறிது சிறிதாக வாரி விடுதல் (தலைமுடியைக் கோதுதல் = தலைமயிரை வாரிச் சிக்கெடுத்தல்),தோண்டுதல்,
[97] வாரி = வாரி எடுத்தல், சிதறாமல் அள்ளி எடுத்தல்,
[98] சட்டையடி = சாட்டையடி?
[99] பொட்டை = குருடு, பார்வை இல்லாமல்,




வலதுகரம் பிடித்து, நம்மள் காஞ்சிவனச் சாமியை வாரும் என்று கோவிலுக்குள் பலவந்தமாய் அழைத்து, என் தழுகையில்ப்[100] பாதி பங்கு எடுத்துக் கொள்ளும் என்றான்,
சேவுகனைத்தான் பார்த்து நம்மள் காஞ்சிவனச்சாமி செப்பியது நல்லதென்று,
கோவுகளைத் தான் திரட்டி கோனார்மகனை “கொண்டுபோ” என்று சொல்லி,

ஏடு 36




வையகத்திலே சிறந்த நம்மள் முனியாண்டி தன்னை வாகுடனே தான் கூட்டி,
உய்யவந்த அம்மனையும் நம்மள் கிழவனுடனே உத்தமியைத் துணையாக,
கோலப் பிராமணத்தி ஆதிகிழவனுடன் குணமாய்த் துணைவரவே,
சீலமுடன் ஆண்டியுமே[101] நம்மள் பசுக்களை சாய்த்து செல்ல, அது நேரம் அதில்,




மறைவாய் கிழவனுடன் கருப்பன் குதிரை வருகுது பின்னாலே,
துரையும்[102] அந்த காஞ்சிவனம் ஆதிகிழவனுக்குத் துணையாகவே வரவே,
புதுக்கோட்டைச் சேகரம் அந்த <u>பொன்னமராபதி</u> புகுந்தான் நம்மள் கிழவனுமே,
எதுவும் பயம் இல்லாமல், அந்த பொன்னமராபதியில் இருந்தான் பசுமந்தையுடன்.

ஏடு 37



அப்போ கிழவனுக்கு ஜலதோஷங் கொள்ள, அதிக சுரமானதினால்[103]
எப்பவும் போலப் பசுவை மேய்க்க முடியாமல், என்ன செய்வேன் என்று சொல்லி,
கருப்பன் தனை நினைத்து, நம்மள் கிழவனும் அங்கே கருதி வருந்தயிலே,
உருக்கமுடனே கருப்பன் சன்னதமாய் வந்து உரைப்பான் நம்மள் கிழவனிடம்,




மயங்காதே பிள்ளாய், நீ இப்போ பொன்னமராபதியில் உன் மாடுகளைத் தான் மேய்த்து,


[100] தழுகை = தளிகை, இறைவனுக்குப் படைக்கும் உணவு,
[101] ஆண்டி = முனியாண்டி தெய்வம்
[102] துரையும் = கருப்பசாமியும்
[103] சுரம் = ஜுரம், காய்ச்சல்

தயங்காமல் காஞ்சிவனம் வருவேன், மயங்காதே சிறுவா[104] என மொழிந்து,
பாற்ப் பசுவைத் தான் திரட்டி, நம்மள் காஞ்சிவனச்சாமி பரிந்தான் வனந்தனிலே,
ஏற்கனவே பொன்சடையும் சோனையுடனே[105] எழுந்தார் பசுமேய்க்க,

ஏடு 38




அதுநேரமே, நமது கிழவனுட பாரி[106], அழகு சவுந்தரியாள்
புதுமையெனவே துலங்க லட்சுமியைப் போலே பெற்றாள் ஓர் பெண்குழந்தை.
குழந்தை பிறந்திடவே, பிரசவ வேதனையால் அந்தக் குமரி அயர்ந்து உறங்க,
உழந்தான்[107] மனமகிழ்ந்து நம்மள் கிழவனும் அப்போ ஓடிவந்து சில பெண்களிடம்,




என்னுடைய தேவியர்க்குப் பெண்துணையாய் சற்று இருக்கணும் என்று சொல்ல,
தன்னால் முடியாதென்று அந்த பொன்னமராபதி பெண்கள்தான் உரைக்கவே கேட்டு,
ஆதிகிழவனும் கொஞ்சம் கவலை யுடனே, ஆனாலும் நல்லதென்று,
நீதியுள்ள தெய்வம் என்றால், 'இப்போ நமக்கு நிற்கும் துணை' என்று சொல்லி

ஏடு 39



வாரான்[108] கிழவனுமே நம்மள் உய்யவந்தம்மாள் வகையும் மனம் அறிந்து,
சீராய்க் கிழவனுட குழந்தை தன்னைக் காக்க தேவி கிருபையுடன்,
கட்டினாள் தொட்டி அங்கே, நம்மள் கோலப் பிராமணத்தி கையில் குழந்தை தன்னை
அட்டியில்லாதே[109] எடுத்து, அங்க சுத்தி[110] செய்து, அன்பாக தொட்டிலிட்டு,




மாலைக்கழுத்தி, நம்மள் உய்யவந்த சத்தி, வாலை வடிவு இடைச்சி,
சோலைக் கிளி மொழியாள், நம்மள் குடிகாக்க வந்த சுந்தரி, நிரந்தரியும்

---


[104] சிறுவா = சிறுவனே
[105] சோனை = சோணைச்சாமி
[106] பாரி = பாரியாள் = மனைவி
[107] உழந்தான் = உளந்தான் = உள்ளம்தான்
[108] (வாறான் என்று ஏட்டில் உள்ளது) வாரான் = வருகிறான்
[109] சீர்கெடாமல், சரிநுட்பமாக.
[110] அங்கசுத்தி = (பிறந்த குழந்தையின்) உடலைச் சுத்தம் செய்து

ஆட்டினாள் தொட்டி, நம்மள் கிழவன் குழந்தை ஆடுது ஊஞ்சலிலே,
நாட்டில் புதுமையென, உய்யவந்தாளும் நங்கை மனமகிழ்ந்து,

ஏடு 40




அனுராகமாகிடவே[111], "*யாரிவரோ ராறாரோ யாறாரோ ஆறாரோ
சனுவே [112] உறங்காயோ, இந்த உய்யவந்தாள் பேரைத்தானே நீ சொல்வாயோ,
எந்தன் பெயர் உனக்கு வைத்தால்த் தகுமோ*" என்று தாலாட்டுவதை,
சந்தோஷமாய் கேட்டு நம்மள் கிழவனும் அங்கே சல்தியில்[113] ஓடிவந்து,




யாரோ நமக்கு இரங்கி, குழந்தையைத் தானே ஆட்டுகிறாள், தொட்டிலிட்டு[114]
பேரோ தெரியவில்லை, ஆனாலும் இப்போ போய்த் தெரிவோம் என்றுவர,
அதுநேரமே நமது உய்யவந்தம்மன் அன்புடனே தான் மறைந்து,
புதுமையுடன் தொட்டி தன்னை பிடித்து மவளாட்ட[115] பெருமையெனவே கிழவன்,

ஏடு 41



ஓடி வந்துமே பார்க்க, ஒருவருமில்லாமல் ஊஞ்சல் அசைந்து நிற்க,
தேடிவந்து நம்முடைய குழந்தை தனக்கு சீராட்டும் தெய்வமே, நீ,
ஏழைக்கு இரங்கி வந்து, அடியேன் தனக்கு ஏவல் புரியவந்தீர்,
வேளை இதுநேரம் உன்னுடைய பேரை[116] விளம்புவீர் என்று உரைத்தான்.




அப்போது சத்தியுமே உய்யவந்தாளும் அன்புடனே கூறுகிறாள்,
எப்போதும் உன்பிறகே துணையாய் இருந்த ஈஸ்வரி உய்யவந்தாள்
பிறந்தேன், சிவகுலத்தில் பிராமணத்தியானேன், பின்னும் விதிவசத்தால்
அறந்தான் மிகப் புரிந்து, பெண் குழந்தை யொன்று அவனியதிலே விளங்கப்


ஏடு 42

---

[111] அனுராகம் = அன்பு, காமப்பற்று
[112] சனு = தயை, பிறப்பு (சனுவே = தயவே, பிறப்பே)
[113] சல்தி = ஜல்தி = வேகமாக
[114] தொட்டிலிட்டு = தொட்டியில் இட்டு, தொட்டியில் போட்டு
[115] மவளாட்ட = மகளாட்ட, மகள் ஆட்ட,
[116] பேரை = பெயரை




பெற்றேன், அது தினமே முப்பதாம் நாளில், பிரஜோப[117] வேதனையால்
சுற்றம் பல இருக்க, பரமபதம் சென்றேன், துலங்கும் இது உலகில்,
காஞ்சிவனக் கருப்பன் என்னை அழைத்து வந்து, காரணமாய் ஆலயத்தில்
ஈஞ்சி மருது கொன்றை கதலி பூஞ்சோலை இருக்கும் அவன் சன்னிதியில்,




இருபத்தொரு பந்தியுடன், சப்த கன்னிமார்கள் இருக்கும் இடத்தில் என்னை
விருப்பமுடன் எனக்கு "தகுந்த தளுகை வேண்டுவது என்ன" சொல்லும் என,
*"பச்சை மருந்தான வகை பூடு வெல்லம் பாலும் பசுவநெய் காயமுடன்*
*மிச்சம் என வேண்டும்"* என்றேன், அந்தப்படியே வெகுவாய் அது முதலாய்,

ஏடு 43




என்றும் எனக்கு நல்ல காயம்[118] அது சேர்த்து இனிதாய் படைத்து, மிக
நன்றாகவே குடிகள் வணங்கி வரும்போது நாட்டில் மழையில்லாமல்
வருந்த, அது நேரமதில் காசி வடதேசம் வளரும் குடிகளெல்லாம்
பெருந்துயரமாகி அவர் பஞ்சம் பிழைக்க போனார் பலதிசையும்,




அஞ்சாமல் உன்னிடத்தில் காஞ்சிவனக் கருப்பன் என் அண்ணன் துணைவரவே,
பஞ்சம் அது நீக்கி, உன்னைக் காப்பாற்ற எண்ணி, பத்தினி உய்யவந்தாள்
வந்தேன், உனைக் காக்க, இந்த பெண்குழந்தை தன்னை வளர்க்க, மனது
கொண்டேன்,
சந்தேகமில்லாமல் இந்தக் குழந்தைக்குச் சார்பாய் எனது பெயர்

ஏடு 44




வைப்பாய் எனப் புகன்று, நம்மள் உய்யவந்தாளும் மறைவாய் துணையிருக்க,
செப்பியது எல்லாங் கேட்டு ஆதிகிழவன் தேவிதனைப் பணிந்து
இருக்க, சில நாள் வரைக்கும் நம்மள் கிழவனுக்குத்தானே இனிதாய் மனமகிழ்ந்து,
விருப்பமுடனே கருப்பன் சோணை முனியாண்டி மேவிப் பசுமேய்க்க,

[117] பிரஜோப = பிரசவ, மகப்பேறு
[118] காயம் = பிரசவித்த பெண்களுக்குக் கொடுக்கும் மருந்து? பெருங்காயம்?




சந்தோஷமாகி நம்மள் கிழவனுந்தானே சரீர சுகமான பின்பு,
விந்தை எனவே பசுவை அந்த பொன்னமராபதி வீதிதனில் நடத்தி,
வந்து கிழவனுந்தான் பசுக்கள் எல்லாம் ஓட்டி வனத்திலே மேயவிட்டு,
சிந்தை மகிழ்ந்தே அவனும் ஒரு வேங்கை மரத்தில் நம்மள் சீமான கிழவனுமே

ஏடு 45




படுத்து நித்ரைபோகையிலே, அந்த புதுக்கோட்டை ராஜன் பங்களா தன்னில் வந்து,
துடுக்காய், அது வனத்தில் சேனாச பானியங்கள்[119] சூழக் கொலுவிருந்தான்[120],
வேட்டைக்கு சென்று, வந்து அந்த சிங்கார மண்டபம் வேந்தன் இருக்கையிலே,
காட்டில் பலதிசையும் நம்மள் கிழவன் பசுக்கள் கடுக இரைமேய்த்து,




சாய்ந்து வந்து[121], மண்டபத்தை கொம்பினால் குத்தி தாறுமாறாக்கியேதான்[122],
மேய்ந்து பசுவுகளும் சுவரில் உரசி வீரமுடனே குமுர,
கண்டு அரசனுமே கண்கள் சிவந்து, கடுங்கோபமாய் அவனும்,
கொண்டு பசுமந்தைகளை நம்மள் உத்திரவில்லாமல், கோனார் பசுக்களையும்

ஏடு 46



சாய்ந்து வந்த யாதவனை சித்ரவதை செய்யதான் நினைந்து, ராஜனுந்தான்
வாய்த்தது என்று, “மாடுகளை எல்லாம் மடக்கி வாரும்” என்று தூதர்களை
ஓட்டி வரவேணும் என்று தூதர்களைப் பார்த்து உருமினான், கண்சிவந்தான்,
தாஸ்ட்டிகமாய் தூதர்களும் ராஜன் குறிப்பை தானே அவர் அறிந்து,




வந்தார் பசுமடக்க, நம்மள் காஞ்சி வனச்சாமிக்கு வருகுது கோபம், அப்போ
முந்தாமல் தூதர்களை விழிகள் தெரியாமல் முன்னேயிருக்க வைத்தான்,

---


119 சேனாசபானியங்கள் = சேனைகள், படைகள்
120 கொலுவிருத்தல் = கொலுமண்டபத்தில், அமைச்சர் தளபதி முதலியோருடன் அரசர் இருந்து ஆட்சி செய்தல்
121 சாய்தல் = ஒட்டுமொத்தமாகத் திரண்டுசெல்லுதல், ஒதுங்குதல், சுயமாக நேரே நிற்காமல் மற்றொன்றின் மேல் சாய்து நிற்பது.
122 தாறுமாறு = ஒழுங்காக இல்லாமல், குளறுபடி

விழிகள் தெரியாமல் மாடு ஓட்ட வந்த வீரர் அது நேரம்
பலிகாரர் ஆகிவிட்டோம், தெய்வமே, இந்தப் பாரில் பழுதடைந்தோம்,

ஏடு 47




இதுவிபரம் ராஜனுக்கு யார்தான் போய் சொல்வார், என்ன செய்வோம் என்று அவர்கள்,
அது வனத்திலே புலம்பி வெகுநேரமாக அலரிப் புலம்பயிலே,
மாடு ஓட்டச் சென்ற நம்மள் தூதர்கள் வராத மார்க்கம் என்ன என்று, அரசன்
பாடோ[123] பெரிதாகி, மற்றும் சிலது பலவான்களைத்தான்[124] அழைத்து,




புதுக்கோட்டை ராஜன் அன்று நம்மள் பசுக்களை ஓட்டிவர, புனிதன் விடைகொடுக்க,
அதுநேரம் காஞ்சிவனக் கருப்பன் எழுந்து அடைவாய் மறைவில் நிற்க,
சந்தோஷம் ஆகி அங்கே ராஜனுட தூதர் சாய்க்கப் பசுக்களையும்
முந்தி வந்த தூதர்களும் விழிகள் தெரியாமல் முண்டுப் புதர்களிலே,

ஏடு 48




விழுந்து மவுனமுடன், கைகளைத்தானே மோதி வலிபிடித்து
அழும் துயரம் கண்டும், அவர் இது என்ன கோலம் ஆனால்த் தெரிவோம் என்று,
வந்து அவரிடத்தில், ஏன் ஐயா இந்த வாதை, இது யார் செயலால்,
இந்த விதி வந்தது என்று கேட்க, அதுநேரம் இயம்புவார் குருடர் எல்லாம்,




அரசனுட வார்த்தைதனை கேட்டபடியால் அவதி மிக அடைந்தோம்,
புற சனங்களும் நகைக்க கண்கள் இழந்தோம், புண்ணியவான் மாட்டையிட்டு
இழந்தோம் விழிகள் இரண்டும், இதுவிபரம் எல்லாம் இனிதாய் அரசருக்கு
உளம் தான் வருந்தாமல் உரைப்பீர், இனிமேல் ஓகோ பசு மந்தைபாதை,

ஏடு 49

123 பாடோ = இடர்பாடான நிலைமையோ
124 பலவான்களைத்தான் = பலசாலிகளைத்தான்




மடக்க வென்று நீங்கள் சென்றால், உங்களுக்கும் இந்த வகையாய் முடியும் இனி
நடக்காது, நம்மாலே இந்த வீரன் பசுவை நாடினால் மோசம் என்றார்,
என்று சொல்லவே கேட்டு வந்தவர் எல்லோரும், இந்தப் புதுமை எல்லாம்,
இன்று கொஞ்சம் பார்ப்பது என்று, கிழவன் பசுக்கள் எல்லாம் ஒரு முகமாய்,




திரட்டி அதுநேரம் நம்மள் கிழவன் பசுவையெல்லாம் சீராக முன் **ந**டத்தி,
விரட்டி மிகச் சாய்த்து வரவே, நமது வீரன் முனியாண்டியுமே
கருப்பனைக் கண்காட்ட, அப்போ காஞ்சிவனச்சாமிக்கு கண்ணில் பொரி பறக்க,
விருப்பமுடனே கருப்பன் நம்மள் பசுக் கவர வந்த வேந்தனுட தூதர்களை,

ஏடு 50




சாட்டையினாலே அரைந்து, உங்கள் அரசரை சல்தி[125] வரச் சொல்லும் என்று,
காட்டைக்கடத்தி விட்டு, நம்மள் பசுவோட்ட வந்த காரணத்தினால் அவரை
நாக்கைப் பிடித்தே இழுத்து, நம்மள் காஞ்சிவனச்சாமி நறுக்கித் துரத்தயிலே,
ஆக்கை மிகப் பதரி ராஜனுட தூதர் அலரியது வனத்தில்




வாயில் குருதி பொங்க, திரும்பிப் பார்க்காமல் வந்த வழிபிடித்து,
தாயில்லா சேய் எனவே மயங்கி, அவர்கள்தான் ஓடி ராஜனிடம்,
பூமிதனில் புரண்டு, நாவுதனை காட்டி புரண்டார், அது நேரம்
தேமி[126] அரசனுந்தான், பசுமடக்க சென்ற தீரர்களையும் இப்போ

ஏடு 51




மாட்டுக்குரியவனும் நம்முடைய பேரை மதியாமல் இன்று தினம்
நாட்டுக்குடிகள் எல்லாம் நகைக்கும்படியாய் நாவுதனை அறுத்தான்,
மேலும் இது முன்னமே சென்றவரையும் வீழ்த்தினானோ அறியோம்,
எழும், அவன் பலத்தை நேரிலே பார்ப்போம், எனவே வெகுண்டு, அரசன்

[125] சல்தி = விரைவாக, விரைந்து, வேகமாக
[126] தேமி = தேமித் தேமித் அழுதல்




சேனைகளைக் கூட்டிப் புரவி தனில்ப் பாய்ந்து சென்றான் நம்மள் கிழவனிடம்,
தாணய[127] மாயக்கிழவன் நித்திரை நீங்கி தான் எழுந்துதான் பார்க்க,
ராஜன் வரவுகண்டு, ஓடி அங்கே வந்து நன்றாய் வணங்கி நின்றான்,
ரோசமுடனே அரசன் கடுங்கோபமாகி, நோக்கிச் சிலது[128] சொல்வான்,

ஏடு 52




காள கூடவிஷம்[129] போல் என் புரவிதன்னை கொன்றாய், காரணம் ஏன், இன்றும் இங்கே
மாளவோ[130], நீயும் இந்த மார்க்கம் எல்லாம் செய்தாய், மடையா என, அரசன்
சொல்லும் அந்த நேரம் அதில் நம்மள் கிழவனுக்குத் தோன்றாமலே அரசன்
நல்லுரை கேட்டே கிழவன் அந்த ராஜனைப் பார்த்து நமஸ்கரித்துக் கூறுகிறான்,



எல்லாம் சிவன் செயலால் ஆனது, இதனால் இன்று என்னால் நடந்தது அல்ல,
வல்லவனே, தார் வேந்தா, என்மேல் சந்தேகம் வைப்பதுவும் ஞாயமில்லை,
எல்லாம் இது சமயம் நடந்த விபரம் நான் அறியேன் என்று சொல்ல,
வல்லவனாம் ராஜனுந்தான் இந்தக் கிழவன் மாறாட்டம்[131] செய்திருக்கிறான்,

ஏடு 53



என்று மனதில் எண்ணி, அந்த புதுக்கோட்டை ராஜன் இரக்கம் சிறிதும் இல்லா
தன்று, அவன் பதியில் குலதெய்வமான தன்மையுள்ள வீரசின்னை
வருந்தி அழைக்கையிலே, அந்த மலையாளச் சின்னு[132] வருகிறான் வேகமுடன்,
பெருந்துயரம் என்ன, பிள்ளாய் சொல்லும் என்று கேட்க, பிசகுதனை[133] அறிந்து,

---

[127] தாணய = ? தானய? (தானைத் தலைவன் = சேனை, படைத் தலைவன்).
[128] சிலது = சில சொற்கள்
[129] காளகூட விஷம் = பாற்கடலைக் கடையும் போது வெளிப்பட்ட நஞ்சு,
[130] மாளவோ = இறக்கவோ, சாகவோ,
[131] மாறாட்டம் = ஆள்மாறாட்டம்
[132] சின்னு = ஜின்னு ( ஜின=வென்றவன், வென்று வாழ்பவன்),
தமிழில் சினன் அல்லது சின்னு.
[133] பிசகு = பிழை, தவறு,

ராஜன் உரைத்து நிற்க, நம்மள் கிழவனுக்குத்தானே நடுங்குது திரேகம்[134] எல்லாம்,
ரோசமுடனே நம்மள் கருப்பன் இதை யெல்லாம் நொடியில் தெரிவதென்று,
வீரசின்னு ஏறிவந்த வெள்ளைப் புரவிதன்னை வீசினான் வாளாலே,
தீரன் முனியாண்டியுமே அவன் ஏழுவண்டிச்[135] சடையால் திரமான வீரசின்னை

ஏடு 54

கட்டினான், வீரசின்னை நம்மள் முனிப்யாண்டி அங்கே கதையால் அடிப்பதென்று
அட்டியில்லாதே வீச, அந்த வீரசின்னு கொஞ்சம் அச்சம் பெரிதாகி,
ஆண்டவனே, பொன்முனியே, என்னை அடிக்காதே, ஆனால் இது முதலாய்
வேண்டி உன்னைப் போற்றி செய்தேன், விட்டு விடும் என்று விளம்பினான்
வீரசின்னு,

சொல்லுவதைத்தான் கேட்டு நம்மள் காஞ்சிவனச்சாமி துரையும் மனம் இரங்கி,
வல்லவனே பொன்முனியே, இந்த மலையாளச் சின்னை வதைக்காதே, விட்டுவிடு,
ஆனால் இது முதலாய் இந்தக் கிழவனை நீயும் அனுகாதே, மீறி வந்தால்,
வானோர்கள் வந்தாலும் உன்னைவிட மாட்டேன், மறவாதே என்று சொல்லி,


ஏடு 55

கட்டை அவிழ்த்தே விரட்ட, அந்த மலையாளச் சின்னு கடுகி விரைவினிலே
பொட்டெனவேதான்[136] பரிந்து, அந்த புதுக்கோட்டை நாடிப் போனான், ஆது நேரம்
குதிரை இழந்தே அரசன் சேனைகளைக் கூட்டிகொண்டு, அதிவிரைவாய்,
விதிவசமோ என்று அவனும் அந்தப் புதுக்கோட்டை போக, வீரன் பயணமிட்டு


போகவே, ராஜனுந்தான் புதுக்கோட்டை சென்று புண்ணியனுமே யிருக்க,
வேகமுடனே நமது ஆதிகிழவன் வீரன் பசுமந்தைகளை
காட்டில் பலதிசையும் மேயவிட்டு, நம்மள் கருப்பன் துணையென்று சொல்லி,
தாஸ்ட்டிகனும் அங்கு ஒருநாள் அந்த பொன்னமராபதி விட்டுதானே பசுக்களும்

ஏடு 56

[134] திரேகம் = தேகம், சரீரம், உடல்.
[135] ஏழுவண்டிச் சாட்டை ?
[136] பொட்டெனவே = சட்டெனவே,




தொண்டமான் புதுக்கோட்டை பட்டணத்தில் சென்று சூரன் பசுமந்தைகளை,
அண்டர்களும் தான் வியக்கும் அந்த புதுக்கோட்டை தன்னில் அமர்த்தி, சிலநாள் இருக்க,
கண்டு அந்த ராஜனுந்தான் முன்னால் நடந்த காரணத்தினால் அவனும்,
வண்டன்[137] இவன் மாடுகளை கண்டாலுங்கூட 'மடக்காதீர்' தூதரென்று




சொல்லி அவன் இருக்க, நம்மள் ஆதிகிழவன் சுகமாய் சிலகாலம்
வல்லவனாம் ராஜனுக்கு நித்தியமாக வழங்கும் சுரபியின்பால்
கொடுத்து, சிலகாலம் ராஜனுடனே தொடர்ந்த சிநேகிதன் போல்,
அடுத்து இருக்கையிலே, நம்மள் கோனார் மகளும் அழகு மிகத் துலங்க

ஏடு 57




இருக்க, ஒரு தினத்தில், அந்த புதுக்கோட்டை ராஜன் எண்ணினான் பேதகமாய்,
உருக்கமுடனே அவனும், ஒருநாள் இரவு ஒரு ஜாமம் ஆகி, மறு
ஜாமமதில்[138] எழுந்து, நம்மள் ஆதி கிழவன் தன்னை எழுப்பி, அவன்
நேயமுடன், உன்னுடைய குமாரத்தி தன்னை நிச்சயம் செய்தே எனக்கு




கொடுத்தால், நலம் பெருவாய் என்று இவன் கூற, நம்மள் கோனார் சரியனெவே
தொடுத்து, இன்னம் சிலது நாள் சென்றதன் பின், சுந்தரியை உந்தனுக்கே
மேவி மணம் சூட்டி வைப்போம், போய்வாரும் என்று வேந்தன்தனை அனுப்பி,
பாவி இவன், நீதியில்லா ராஜன் என எண்ணி, பரிந்து அந்த ராத்திரியில்,

ஏடு 58




மனதில் கிலேசமுடன் நம்மள் கிழவன் வருந்தி, அன்று காலையினில்
சினமுடனே, ராஜனிடம் வழக்கம் போல் போக, தீரன் மனதில் எண்ணி
பாற்க்குடத்தைத் தான் தூக்கி, அந்த ராஜன் மனையில் பரிவுடனேதான் இறக்கி,
தீர்க்கமுடனே கிழவன் நிற்கும் அந்த நேரம், நம்மள் சீமான் கிழவனிடம்

137 வண்டன் = வலிமையானவன்
138 2 சாமம் = 4 முகூர்த்தம் = 8 நாழிகை = 192 நிமிடம் = 3மணி 12 நிமிடங்கள். (இரவு மணி 8.00 க்கு மேல் 9.00க்குள் உள்ள நேரத்தில்)




வந்து அரசனுந்தான் நம்மள் கிழவனிடத்தில் வம்பான வார்த்தை ஒன்று
சந்தோஷமாகிடவே அந்த புதுக்கோட்டை வேந்தன் சாற்றுகிறான், அப்போது,
வாரும் ஐயா, கோன்மகனே, இன்று தினம் ரெம்ப[139] மார்க்கமுள்ள வேளை யதால்
சீருடைய உன்மகளை விவாகமது செய்யும் தினம் இதுவே என்று சொல்ல,

ஏடு 59




கேட்டுக் கிழவனுந்தான், இந்த புதுக்கோட்டை ராஜன் கெடுமதியை தான்
நினைந்து,
நாட்டுக் குடிபடைகள் எல்லோரும் அறிய, நன்மையுடன் சொல்லுகிறான்,
வேலி பயிரை மேய்ந்தால், ராஜர்களுக்கு என்ன வெற்றி கிடையாது ஐயா,
சாலியாய்[140] என்மகளை மணம்புரிய நீரே சம்மதி கொண்டீர், அதனால்




என்ன நான் சொல்லுவது, தாங்கள் மனம்போலே, இன்று இரவினிலே,
சொன்னபடியே உமக்கு மணஞ்செய்து வைப்பேன் சுந்தரியை, இன்றுதினம்
ராத்திரியில், உம்முடைய சேனைதளத்தோடு நாடி எந்தன் வீடுவந்து,
பாத்தியமாய்[141] என்மகளை மணம் செய்து கொண்டு, பல் வாத்தியங்களுடன்

ஏடு 60



அதிர்வேட்டு மத்தாப்பு எங்கும் பிரகாசிக்க ஆனதொரு தீபமெல்லாம்
சதிர்களுடனே வருவீர், உந்தன் மணம்போல் சம்மதமாய் என்மகளை
கூட்டி அனுப்பி வைப்பேன், வாரும் என்று சொல்லி, நம்மள் கோனார் அதிவிரைவில்
தாஸ்ட்டிகனும் வீட்டில் வந்து, ராஜனால் வந்த சங்கடத்தினால் அவனும்,




காஞ்சிவனக்கருப்பர் அந்தக் காவேரி வெள்ளம் நடத்தி விட்ட சீமானே,
அஞ்சாதே என்று சொல்லி என் குழந்தைக்கு தாலாட்டும் ஆச்சியே உய்யவந்தாள்,
ஏழுவண்டி பொன்சடையே, சப்தகன்னிமார்களே, எங்கள் எஜமானே காஞ்சி ஐயா,


139 ரெம்ப = நிறைய
140 சாலியாய் = ஜாலியாய், உல்லாசமாய்
141 பாத்தியமாய் = உரிமையாய்

நாளும் இது வரைக்கும் என்னை மயங்கவிடாமல் நடத்தி வந்த காஞ்சிவனம்,

ஏடு 61




ராஜனக்கு பெண்கொடுக்க நான் சம்மதிக்க ஞாயமோ[142] உங்களுக்கு,
ரோசம் உண்டோ இன்று தினம், எனக்கென்ன சொல்வீர், நுட்பமென்ன செய்வதய்யா
என்று வருந்தயிலே, நம்மள் காஞ்சிவனக் கருப்பனுக்கு இரக்கம் பெரிதாகி,




இன்று வருந்தாதே, இந்த கருப்பன் உள்ளமட்டும் என்னகுறை உனக்கு,
ஆனால் இதுநேரம் ராஜனால் நீயும் அடைந்தாய் பெருந்துயரம்,
ஏனோ வருந்துகிறாய், சொல்லுவேன் கேளும், இனிதாய் இது இரவில்,

ஏடு 62




வெறிகொண்டு வீதிவழி திரிகின்ற நாயை விரட்டி அங்கேதான் பிடித்து,
சரியான தும்புமிட்டு, அருந்துபோகாமல், சாக்ரதையுடனே நாயை
வீட்டிலே கட்டி வைத்து, தீபமொன்றை ஏற்றி, வெகுவாய் பசுமந்தையுடன்,
தாஸ்ட்டிகமாய் உன்னுடைய குமாரத்தியோடு தானே பயணமிட்டு,




சேதுபதிச் சீமை இராமநாட் ஜில்லா சேகரத்திலே சிறந்து,
ஏதுவுடன் பேர் துலங்கும் அந்தப் படமாத்தூர் தன்னில், இனிதாய் பசுக்(களுட)ன்
போகலாம், அங்கு தங்க இன்று இரவே புறப்படு என்று சொல்ல,
பாகமுடனே கேட்டு, நம்மள் காஞ்சிவனச் சாமியை பணிந்து அதன்படியே,

ஏடு 63




சூரியனுமே மறைய, நம்மள் ஆதிகிழவன் சுவாமி வருதியைப் போல்,
காரியமும் நன்று எனவே, வெறிகொண்ட நாயைக் கண்டு, அதைக் கொண்டு வந்து,
நடுவீட்டில் கட்டிவிட்டு, புதுக்கோட்டைவிட்டு நாடினான் தென்முகமே,
கடுகப்[143] பயணம் வைத்து, அந்த இரவே காட்டிலே மாட்டுகளை

[142] ஞாயமோ = நியாயமோ
[143] கடுக = கடுகி, விரைந்து




சாய்த்து, பயணமிட்டு, அன்று இரவில் தங்காமலே விரைவாய்,
வாய்த்து தென்றுமே பரிந்து, காளையார்கோவில் வந்து, அது இரவே
தங்கி, அதிலிருந்து படமாத்தூர் சென்று[144], நம்மள் சாமி துணையென்று சொல்லி,
பொங்கமுடனே கிழவன் அந்த படமாத்தூர் தன்னில் புகுந்து பசுமந்தையுடன்

ஏடு 64




யிருக்கலாம் என்று சொல்லி, அன்று இராத்திரியில் எதுவும் பயமில்லாமல்,
பெருக்கமுள்ள பாற்ப்பசுவை[145] திரட்டி கிழவன் புகுந்தான் வனத்திலே,
கருப்பன் உரைத்தபடி, நம்மள் கிழவன் கடுகி வழிகூடி,
விருப்பமுடனே வரவே, இனிமேல் அரசன் விபரம் சிறிது சொல்வோம்,




கோனார் உரைத்தபடி, அந்தப்புதுக்கோட்டை ராஜன் குணமாய் மனம் மகிழ்ந்து,
வானோர் அதிசயிக்க, அரண்மனைகள் எல்லாம் வைகுந்தன் ஆலயம்போல்
சிங்காரம் செய்து, அவனும் தளகர்த்தர்[146] மந்திரி தீரர் பல வீரர்களை
பொங்கமுடனே அழைத்து, அந்தக் கோனார் மகனைப்போய்க் கூட்டி வாரும்
என்றான்.

ஏடு 65




நல்லதென்று வீரரெல்லாம் மேளவகையோடு நாடினார் நம்மள் கோன் மனைக்கு,
எல்லாம் தெரிந்திருக்கும் நம்மள் காஞ்சிவனச்சாமி ராஜன் மனமறிந்து,
மங்கையினால் வாடுகிற இந்த புதுக்கோட்டை ராஜன் வல்லபங்கள்[147] உள்ளது
எல்லாம்
பங்கப்படுத்த[148] என்று, நம்மள் காஞ்சிவனச்சாமி பரிந்து மிக எழுந்து,




[144] புதுக்கோட்டை-71கி.மீ-காளையார்கோயில்-31கி.மீ-படமாத்தூர் =102கி.மீ
[145] பாற்ப்பசுவை = பால்ப்பசுவை
[146] தளகர்த்தர = தளபதி
[147] வல்லபங்கள் = வலிமைகள்
[148] பங்கப்படுத்த = சீர்குலைக்க

கோனார் இவர் எனவே, காஞ்சிவனச்சாமி கோப்பால்ந்தானும்[149] இட்டு,
ஏனோ புதுமையென, மடி சோடித்திட்டு[150] இந்திரவர்ணப் பட்டு உடுத்தி,
காதில் கடுக்கன் இட்டான், காஞ்சி கருப்பய்யா கையில் தங்க(க்)காப்பு அணிந்தான்,
சோதி மிகத் துலங்க, கைக்கு கணையாளி சுடரெரி[151] போலே ஜொலிக்க,

ஏடு 66




வாடை புனுகு கந்தம் நம்மள் வடநாட்டுச்சாமி வகையாய் அவன் மார்பில்
சேடையென[152] அணிந்து, அங்கவஸ்த்திரம் மார்பில் சிறப்பாய் துலங்கிடவே,
முடி மீதில் வாங்குருமால்[153] கட்டினான், நம்மள் முராரி முகுந்தனைப் போல்,
படி மீதிலே துலங்க கையில் பிரம்பு பாங்குடனே தான் பிடித்து,




கோனார் மனையினிலே காஞ்சிவனச்சாமி குத்தவைத்தான் நம்மள்
கிழவனைபோல்,
போனார்கள் வீரரெல்லாம், கோனாரைப் போல புண்ணியனும் அங்கிருக்க,
கண்டு களிகூர்ந்து, அய்யா கோனார்மகனே, காரியம் இன்றே உமக்கு
உண்டு, யாதுநேரம் எங்கள் அரசனும் உம்மை உடனே இதுவேளை

ஏடு 67



விரைவில் அழைத்து வர வேணுமென்று சொன்னார், வேந்தன் விடைப்படியே
வரவேணும் என்று சொல்ல, காஞ்சிவனச்சாமி மனதில் கனிவு கொண்டு
சொல்லுகிறார் தூதரிடம், இப்போது நானும் சொல்லும் வயணம்[154] எல்லாம்
வல்லவனாம் உங்களுட ராஜன் தனக்கு மாமனார் ஆன என்னை,




கால்நடையாய்த்தான் வரவே சொன்னதும் என்ன, காரணங்கள் தோன்றவில்லை,

---


149 கோப்பால் = ? வேடம்??
150 மடிசோடித் திட்டு = மடி ஜோடித் திட்டு, மடி ஜோடனை செய்து, மடி அலங்காரம் செய்து,
151 சுடரெரி = சுடர் + எரி, எரிசுடர், சூரியன்,
152 சேடை = மணமக்கள்மீது அட்சதை தூவுதல், சேடைநல்கி = அட்சதையிட்டு, சேடையென அணிந்து = அட்சதை தூதுவதுபோல் தூவி அணிந்து கொண்டு
153 வாங்குருமால் = வாங்கு உருமா,
உருமா- திருமணத்தின் போது மணமகனின் தலையின் கட்டும் துணி
154 வயணம் = நிலைமை, விவரம், நல்லமைப்பு, காரணம்,

பால் கொடுத்து, ராஜருக்குப் பெண்ணும் கொடுத்து, பாரில் அவன் மேன்மை பெற வைப்பது நீதியல்ல, ஆனால் அரசனுக்கும் மாமனார் மீதினிலே
எப்பவுமே தன்மனதில் இரக்கம் ஒன்றும் இல்லை, இனியாகிலும் அவரை,

ஏடு 68




பஞ்சகலியாணி[155] கொண்டு வந்தால் அதன்மேல் பவனி கொண்டு நான் வருவேன்,
வஞ்சகம் ஒன்றில்லை, இந்த புதுக்கோட்டை ராஜன் வந்தால் வருவேன் நான்,
சொல்லியதோர் வார்த்தை எல்லாம் ராஜனுக்கு கூறி, சுணங்காமல்த்தான் அவரை
பல்லியங்கள்தான்[156] குமுர சதுராட்டத்தோடு[157] பரிந்து வரச் சொல்லும் என்று




ஐயன் விடை கொடுக்க, தூதர்களுந்தானே அப்படியே சொல்வோம் என்று,
வையகத்திலே சிறந்த அந்த புதுக்கோட்டை ராஜன் மனையில்ப் புகுந்து, அவரும்
கோனார் உரைத்தது எல்லாம் சிறிதும் விடாமல் கூறினார் வேந்தனிடம்,
தானாகவே நமது கருப்பன் உரைத்த சங்கதியைத் தான்கேட்டு,

ஏடு 69



அரசன் மிக நகைத்து, ராஜ குடும்பத்தில் அனுசரனை[158] பெற்றோம் என்று,
திரமுடனே[159] யாதவனும் பெண் தருவதாலே செப்பினான் அப்படியே,
காரியத்தைத்தான் முடித்து, அவனுடைய பெண்ணைக் கலந்து மணமானபின்பு,
வீரியங்கள் சொன்ன தெல்லாம் பின்னாலே கேட்டு விதிப்போம், இது சமயம்




அவனுடைய சொற்ப்படியே செய்யலாம் என்று, அரசன் புரவி[160] தன்னை
கவனமுடனே கொணர்ந்து சீனி[161] மிக வைத்து கடிவாளம்தானும் இட்டு

---


155 பஞ்சகலியாணி = ஐந்து மங்களங்களும் கொண்ட குதிரை
156 பல்லியம் = பல்வகை வாத்தியங்கள் சேர்ந்து ஒலிக்கும் இசை.;
யாழொடு பல்லியங் கறங்க (புறநா. 281).
157 சதுராட்டம் = சதுரம் + ஆட்டம். கோவில்களின் மையப்பகுதிகளில் ஆடப்பட்டதால் இவ்வாறு அழைக்கப்பெற்றது. சிலர் இதைச் சதிராட்டம் எனவும் அழைப்பர்.
158 அனுசரனை = ஆதரவு
159 திரம் = ஸ்திரம், உறுதி
160 புரவி = குதிரை = பஞ்சகலியாணி
161 சீனி = குதிரையின் மீது உட்கார்வதற்குப் போர்த்தப்படும் போர்வை போன்ற இருக்கை.

பெண்ணழைக்கப் போரதினால்[162] அரண்மனைப் பெண்கள் பூராவுமே[163] அழைத்து வண்ணமட மாதர்களை வருக வென்று சொல்லி வந்து அரசனுமே,

ஏடு 70




தடாகம் அதில் குழித்து, அந்தத் தரணிபதி தானும் சல்லா[164] மிக அணிந்து
சடாரெனவே தான் எழுந்து இந்திர வர்ணப்பட்டு தானே அவன் தரித்து,
ஆபரணம் மேல் துலங்க சரியா அணிந்து, அம்ஷம்[165] அதுவே சிறந்து
கபாயி[166] முதல் அங்கியிட்டு ரத்னக் கிரீடம் காசினியிலே ஜொலிக்க,




வாடை மணமானது[167] எல்லாம் திரேகம் அதில் பொருத்தி வல்லவனும் அப்போது,
சாடை செய்ய, வீரருடன் மேள தாளங்கள் தானே முழங்கிவர,
வீதிதனில் மாதர்களும் ஆலாத்தி[168] செய்ய, வீரன் பயணமிட்டு,
சாதியிலே யாதவரின் பெண்ணை மணக்கத்தானே, நம்மள் கிழவனுந்தான்

ஏடு 71



சவ்வாரி செய்து வர பட்டத்துப் புரவி தன்னை அலங்கரித்து,
ஒவ்வும்படி எனவே குதிரை தன்னை கொண்டு உத்தமனும் அந்நேரம்,
யானை அலங்கரித்து பாகர் அவர் கொண்டுவர, ராஜன் பரிந்து ஏறி,
சேனை தளங்களுடன் சதுராட்டத்தோடே தீவட்டியோ அனந்தம்




சிங்காரமாகிடவே, சேடியர் சூழ, தீரன் அந்த ராஜனுமே,
மங்களங்கள் இன்று வென்று, பலவாத்தியத்தோடு மன்னன் எழுந்தருளி
வரும்போது, அன்றிரவு நம்மள் காஞ்சிவனச்சாமி மன்னன் செயல் அறிந்து,
நருந்துளவோன்[169] முன்னாளில் மோகினி சொரூபம் நாடி எடுத்தது போல்,


ஏடு 72

---

162 போரதினால் = போகின்றபடியால், போகின்ற காரணத்தினால்,
163 பூராவும் = அனைவரையும்
164 சல்லா = மெல்லிய துணி வகை
165 அம்சம் = காட்சி நிலை, தோற்றம்
166 கபாய் = நிலையங்கி, மேற்சட்டை.
167 வாடை மணமானது = வசனை நிறைந்த
168 ஆலாத்தி = ஆராத்தி
169 நருந்துளவோன் = மகாவிஷ்ணு




ஏழுவண்டி பொன்சடையான் முனியாண்டி தன்னை எடு என்றான் பெண்வடிவம்,
நாளும் இவன் கூறாமலே, நம்மள் முனியாண்டிய தானும் நன்றெனவே அன்றிரவே,
பாலியப் பெண்ணாகி, நம்மள் கோனார் மனையில் அது மனது கொண்டு,
காலிலே பாதசரம் காலாலி பீலி[170] கைய்யினில் பொன்வளையல்




சூரியனைப் போல் துலங்க கணையாளியிட்டு சுந்தரியின் அந்தமுள்ள
பாரியெனவே விளங்க, முத்துச்சரங்கள் பரிந்தும் அவள் தோள் புரள,
காதில் சிமிக்கி இட்டாள், நத்து மூக்குத்தி காரிகையுமே அணிந்து,
சோதி மிகத் துலங்க, ரவிக்கை அதில் வர்ண துடர்கள்[171] ஒளிபரப்ப,

ஏடு 73




விலைமதியா பொன்னாடை மெய்யில் அணிந்து, நம்மள் வீரன் முனியாண்டியுமே
கலைமாது போலிருக்க, ஆதிகிழவனைப் போல் நம்மள் கருப்பனும் அங்கே இருக்க
அப்போதுமே அரசன் நம்மள் கோனார் மனையில் அணுகினான், அந் நேரம்,
செப்பமுள்ள யாதவனை அந்தப் புதுக்கோட்டை ராஜன் தீரமுடன் கைபிடித்து,



பஞ்சகலியாணி இன்று உனக்காக கொண்டு பரிந்து வந்தது ஆகையினால்,
சஞ்சலம் ஒன்றும் இல்லாமல் புரவி தனிலே சவாரி கொண்டு, என் மனையில்
வந்து இது முதலாய் தளகர்த்தராக[172] வருவீர், உறுதி என்று,
சந்தோஷமாய் அரசன் அங்கு சில பெண்களைத்தானே அருகே அழைத்து,


ஏடு 74



யாதவர் பெண்ணை இங்கே அலங்காரம் செய்து அழைத்து நம்மள்
தண்டிகையில்[173]


[170] பீலி = மயில் இறகு
[171] துடர் = சங்கிலி
[172] தளகர்த்தர் = தளபதி
[173] தண்டிகை = பள்ளக்கு

சாதகமாய் நம்மளுட அரண்மனையில்த்தானே தங்குதற்குமே அவளை
கூட்டி வருவீர் எனவே ராஜனுரைக்க, கோதையர்கள் நம்மள் கோன்மனையில்,
தாஸ்ட்டிகமாய் வீட்டினிலே நுழைந்து சில பெண்கள்தானே அவர் பார்க்க




பூலோக ரம்பையைப்[174] போல் அங்கொரு பெண் தோன்ற, பொற்க்கொடியைத்தான் பார்த்து,
மேலான கற்புடைய மங்கை இவள் என்று மிகவும் பயந்தவர்கள்,
வாருமம்மா ராஜனுட பத்தினியாய் இன்று வடிவு துலங்கிடவே,
கோரும் எங்கள் சொற்ப்படியே, ராஜனுடைய குணம்போல் அவனுடைய

ஏடு 75




சம்மதம் போல் நீயும் இப்போ, அவருடைய ஆடை தரித்து இந்த ஆபரணம்
நிம்மதியாய்த்தான் தரிப்பாய் தேவியே என்று நேரிளைமார் கூறலுமே,
கேட்டு அந்த பெண்மணியும், அவராடை[175] முதல் எல்லாம் கெடாமல் அவர் மனையில்
வேட்டல் நடந்த பின்பு சர்வாபரணம் வெகுமதி யெல்லாம் பெருவோம்,




என்றும் இவள் கூற, ராஜனுடைய பெண்கள் இதுவும் சரியெனவே,
நன்றாகப் பெண்ணையுமே வலதுகரம் பற்றி நாரியரைத்தான்[176] கூட்டி
வந்து, நல்ல தண்டிகையில் ஏறும்படி செய்து, வந்து அரசனிடம்
சந்தோஷமாய் உரைக்க, ராஜனும் கேட்டு சரியெனவே, மாமனைப் போல்

ஏடு 76



வந்த கருப்பனையும் புரவிதனில் ஏற்றி, மன்னன் ....(ர)தத்தில்
சிந்தை மகிழ்க்ஷியுர, அந்தப் புதுக்கோட்டை வீதி நம்மள் தீரன் பவனிவர,
காஞ்சிவனச்சாமி நம்மள் ஆதிகிழவனைப் போல் கனிந்து குதிரையின் மேல்
கொஞ்சங் குணமுடனே அரன்மனை முன்பாக நம்மள் கோமான் குதிரைவர,




பட்டணத்திலே எவரும் நம்மள் காஞ்சிவனச்சாமியைப் பார்த்து சிலது உரைப்பார்,
சட்டமுடன் கோன்மகனே ராஜனைப் போல் நீயும் சரியா பரியில்வர,

---


[174] ரம்பை = இந்திரலோகத்துப் பெண்
[175] அவராடை = அவருடைய ஆடை, அவருடைய உடை
[176] நாரி = பெண்

என்ன தவம் செய்தாயோ, இனிமேல் உனக்கு எல்லாம் சுகமெனவே,
சொன்ன சொல்லைத்தான் கேட்டு, நம்மள் கருப்பன் துருசாய் குதிரைவிட்டு

ஏடு 77




அரண்மனை முன்பாய் இறங்க, பெண்மணிபோல் வ(டிவாய்) ஆண்டியு(ம் அங்கேவர)
திறமாய் இருபேரும் குதிரை தனில்ப்பாய்ந்து சிவ்வெனவேதான்[177] ஏறி
கடிவாளம் கைபிடித்து நம்மள் காஞ்சிவனச்சாமி கனைத்தான்[178] குதிரையின் மேல்,
இடியேறு[179] போல்த் தெரிய, கருப்பன் சவாரி வந்த இந்திர வர்ணப் புரவியது




குதித்துக் கும்மாளமிட்டு கருப்பன் குதிரை கூடுது தென்முகமே,
எதிர்த்தோர் மடிவது என கேசரி[180] போல் கொண்டு ஏகுது வேகமுடன்,
பொன்சடையும் நம்மள் கருப்பனுந்தான் ராஜன் புரவிதனில் புனிதர் பயணமிட்டு,
சண்பகப் பூங்காவுகளும் பலநதிகள் எல்லாம் தாண்(டிய)வர் போக,

ஏடு 78




கண்டு அரசனுந்தான் கோபமிக்க, கொண்டு (சிறிது ப)யமும் (இல்லை எ)னவே
கொண்டு நகைபுரிந்து சேனைகளைப் பார்த்து கோபமுடன் கூறுகிறான்,
நமக்குப் பயந்தும் அந்த யாதவனும் இங்கே நாடினான் என்றிருக்க,
தமக்குள் கெருவமுடன்[181] நம்மள் குதிரைதனை சற்றும் பயமில்லாமல்




சென்றதினாலே, அவனை எங்கு சென்றாலும் தேடிபிடித்து வந்து,
நன்றாகவே உதைத்து, சிறையில் அடைத்து, நன்மை பெருவோம் எனவே,
ராஜன் விடை கொடுக்க, அந்தப்படியே நாடினார் சேனை யெல்லாம்,
ரோசமுடனே அவர்கள் ராஜனுடனே நோக்கினான் தென் முகமாய்,

177 சிவ்வெனவே = அதிவிரைவாக
178 குதிரை கழுதைகள் கனைக்கும். அதுபோல் மனிதர்கள் செருமுவார்கள், இந்த ஒலியைக் குதிரைகள் கட்டளையாக ஏற்றுச் செயல்படும்.
179 இடியேறு போல் = இடி தன் மேல் ஏறியதைப் (விழுந்ததைப்) போன்று
180 கேசரி = சிங்கம், (கஜ கேசரி யோகம் = யானையின் பலமும், சிங்கத்தின் பலமும் சேர்ந்த யோகம்)
181 கெருவம் = கர்வம், மண்டைக் கனம், இறுமாப்பு, செருக்கு,

ஏடு 79




பரிந்தான் அரசனுமே புரவிதனில், பாய்ந்து படைகள் புடைசூழ,
திரிந்தே[182] பலதிசையும் தேடியலைந்து. சேதுசமஸ்த்தானம் என்ற
பெரிதான நாடு அதிலே, நம்மள் புதுக்கோட்டை ராஜன் புகுந்தான் ஒரு தினத்தில்,
துரிதமுடனே அவனும் இராமநாட்ப்[183] பூமி துரையாம் அவனிடத்தில்,




சென்று விபரம் எல்லாம் சேதுபதியிடத்தில் அந்தத் தீரன் புகன்றிடவே,
நன்றாகவே கேட்டு, நம்மள் சேதுபதியும் நகைத்துச் சிலது சொல்வார்,
குலந் தவறி ஓரிடத்தில் பெண்கொள்ள யென்றும் கூடாது அதனாலே,
நலங்குறைவதோடு அவர்க்கு மரியாதை ஒன்று நா(டாது)வேயது போல்,

ஏடு 80



பிறர்க்குரிய மாதர்களை பெற்ற தாய்போலும், பிற(ர் மகளைத் தன் மகளென்றும்)
பிறர்க்குரிய சங்கடமும் தன்னுதென்று[184] எண்ணி, பிசகாய்[185] பிறர் எவரும்
வசைபுரிந்தாலும் நம்மை, அதுவும் நமக்கு வாய்த்த பெருமை யென்றும்,
திசை அடங்கலும் மதிக்க, அரசுபுரிவோர் செய்கை இது போலே




உலகாதிபர்[186] நினைக்க வேண்டும், அதை விட்டு ஊமை கனாக்[187] கண்டது போல்
கலகம் பலபுரிந்து, ஒரு யாதவனால் இந்தக் கஷ்ட்டம் அடைந்து என்னிடத்தில்
ஓடி வந்தாய், உன்னுடைய ராஜமுறை[188] இந்த உறுதிப்படி தானோ,
நாடி அந்த யாதவனை கண்டு பிடிப்பேன், நன்றாய் அவனிடத்தில்


ஏடு 81

---

[182] திரிந்தே = சுற்றித் திரிந்தே, அலைந்து திரிந்தே,
[183] இராமநாட்ப் பூமி = இராமநாடுப் பூமி, இராமநாதபுரம் பூமி
[184] தன்னுதென்று = தன்னது என்று, தன்னுடையது என்று
[185] பிசகாய் = தவறாய்,
[186] உலகாதிபர் = உலக அதிபர் = அரசர், ஆட்சியாளர்,
[187] கனா = கனவு
[188] ராஜமுறை = ராஜதர்மர், அரச தர்மம், ஆட்சிமுறை




செய்ததொரு குற்றமெல்லாம் மன்னிப்புக் கேட்டு, தீரன் விடைப்[189] படியே வையகத்திலே எதுவும் செய்தால் உனக்கு வழித் துணையாய் நானும் இப்போ வருவேன், பயணமிடு[190] என்று சொல்லக் கேட்டு. மன்னன் சரியிடவே[191] ஒருநிமிஷ நேரமதில் நம்மள் சேதுபதியும் உடனே பயணமிட்டு,




புதுக்கோட்டை ராஜனுடன் நம்மள் சேதுபதியும் புகுந்தார் படையுடனே, எதுவும் பயமில்லாமல் தங்குமிடம் தங்கி, இருவர் அந்த ராஜர்களும் படமாத்தூர்ப் பாதைவழி இராஜர் சையினியங்கள்[192] பலமாய் இரைச்சலுடன் திடமாய் வரும் பொழுது, **காராகுளங் கண்மாயில்[193]** நம்மள் சீமான் பசுக்கள் எல்லாம்,

ஏடு 82




ஜலம்[194] பருகியே பசுக்கள் அந்தக் கரைமேல்ப் புளியும் சரிந்த கமுகு தென்னை (வள)மான பாங்குடனே கற்பகம் சோலை நாடி அதிலே உரசி, இளங்கன்றுமே தனது தாயிடத்தில் சென்று இனிதாகப் பால் பருக, உளங்கனிந்து ஓடிவந்து எருதுகள் எல்லாம் தனது உறவினரின் கூட்டமுடன்,




சந்தோஷமாய் **நயனபாசை**யினால்ப்[195] பேசி சற்றே களைப்பார, இந்த விதமாய் இருக்கும் புதுமை தன்னை, வந்த ராஜர் அவர் சேனை யெல்லாம் கண்டார்கள், அப்போது அந்தப் புதுக்கோட்டை ராசன் கவலை ஒழித்தது என்று அண்டாத[196] சேணையுடன் சேதுபதியோடு அந்த அரசன் துருசுடனே[197]

ஏடு 83

[189] விடை = சிக்கலுக்கான தீர்வு
[190] பயணமிடு = பயணம் இடு, பயணம் செய்
[191] சரியிடவே = சரி என்று செல்லிடவே
[192] சைனியம் = படை, சேனை
[193] காறாங்குளங் கண்மாய் = படமாத்தூர் அருகே யுள்ள கண்மாய்
[194] ஜலம் = சலம், தண்ணீர்
[195] நயனபாஷை = கண்சாடையால் பேசிக்கொள்ளுதல், கண்பார்வையால் பேசிக் கொள்ளுதல், Language of the Eyes,
[196] அண்டாத = அணுக முடியாத
[197] துருசு = துரிதம், துரிசம், விரைவு.
துருசா வசப்படுத்தும்(விறலிவிடு.), ஆத்திரம்.




வருவதைக் கண்டே, நமது ஆதிகிழவன் மனங்கலங்கி, மெய் சோர்ந்து,
தருணம் இது வேளையினில், அந்தப் புதுக்கோட்டை ராஜன் தானே (யிது தூ)ரம்
வாரான், அவனிடத்தில் பெண் தாரோம் என்று வாக்களித்தேன் ஆனதினால்
மாறான செய்கை எல்லாம் செய்து வந்ததாலே, மன்னன் மனங் கொதித்து,




துப்பறிந்து, இவ்விடத்தில் இருப்பது அறிந்து, தொடர்ந்து அவன் சேணையுடன்
தப்பாமல் இங்கு வந்தான், அரசனால் என்ன சங்கடங்கள் நேர்ந்திடுமோ,
என்ன செய்வேன், இப்பொழுது எங்கள் காஞ்சிவனக்கருப்பு
இருப்(பானா)ய்யானால்[198]
சொன்ன வருதி யெல்லாம் சரியாக இன்று சுவாமி மனம் இரங்கி,

ஏடு 84




கார்த்து இதுநேரம் என் கவலை எல்லாம் மாற்றி, காரணங்கள் உள்ள தெல்லாம்
தீர்த்து, இனிமேலே இந்த ராஜனால் ஏதும் தீங்குகள் வராதபடி
செய்வாய், கிருபையுடன் காஞ்சிவனச்சாமி, சீமானே என்று சொல்ல,
தெய்வம் மனமிரங்கி, ஆதிகிழவனுக்கு செப்புகிறான் காஞ்சிவனம்,




வருவேன் துணையாக, நம்மள் கோனார்மகனே, வருந்தாதே, இப்போது
வருவர் அந்த ராஜர்களும், வருவார் வரட்டும், ஏதும் பயமில்லாமல்
இருப்பாய் எனப் புகல, நம்மள் ஆதி கிழவன் இதயம் மிக மகிழ்ந்து,
கருப்பன் துணையெனவே, அந்த காராகுளங் கண்மாயில் நம்மள் கண்ணனைப்
போல் பள்ளிகொள்ள,

ஏடு 85

198 இருப்பானாய்யானால் = இருப்பான் என்றால்




சேதுபதியுடனே அந்த புதுக்கோட்டைராஜன் சேனைகளை ஓரிடத்தில்
வாதுகள் வராதபடி நிறுத்தி விட்டு, அங்கே மன்னர்க் குதிரையினில்
வருகிறார், நம்மள் கோனிடத்தில் அந்த சேதுபதியும் வந்து, காராகுளத்தின்
அருகே வரும்போது, நம்மள் ஆதிகிழவன் அயர்ந்தவன் போலே உறங்க,




கண்டு இருமன்னர்களும், யாரடா, கோன் மகனே, காட்டில் உறக்கம் என்ன,
உண்டு களையாலே தூக்கமோ என்றார், உடனே கிழவனுந்தான்
சமஸ்த்தானம் சேதுபதி தன்னை வணங்கி, சாஸ்ட்டாங்கமாக[199] ரெம்ப[200]
நமஸ்க்காரம் செய்து நிற்க, சேதுபதியும் நகைத்துச் சிலது சொல்வார்,

ஏடு 86



நல்லது கோன்மகனே, வேட்டைக் களையால்[201] நாடினோம் உன்னிடத்தில்,
வல்லச் சுரபிகள்தான் அனேகமாய் இங்கே வந்தபடியாலே,
தாகம் தணிந்திடவே ஜலம் அருந்த வந்தோம், தற்பரன்[202] அற்புதமாய்
ஏகப் பசுமந்தைகளை காட்டினார், இப்போ என்னுடைய தாகம் அதும்




தீரவே, எங்களுக்கு காராம்[203] பசும்பால் சீக்கிரத்தில் ஓர் குடந்தான்
வீரனே நீ கொடுத்தால் வெற்றி அடைவாய், விரைவில் கரவும் என்றான்,
அப்போதுமே கிழவன் பசுமந்தை தன்னில் அவன் புகுந்து, நீதமுடன்
செப்பியது போல் கொடுக்க வேணும் என்று, நம்மள் சீமான் குடமெடுத்து,


ஏடு87

---

199 சாஸ்ட்டாங்கமாக = சாஷ்டாங்கமாக = அங்கம் எல்லாம் விழும்படியாக, நெடுஞ்சாண்கிடையாக, கைகால்கள் தோள் மார்பு நெற்றி ஆகியவை தரையில் படும்படியாக.
200 ரெம்ப = நிறைய
201 களையால் = களைப்பால்
202 தற்பரன் = பரம்பொருள்.
203 காராம்பசு= கார் (கருமை)+ ஆம் + பசு = நாக்கும் மடியும் கருநிறமாக உள்ள ஒரு வகைப் பசு; கரும்பசு




பசுக்களிடத்தில் வந்துபார்க்கக் கிழவன், பரிந்து இளங்கன்றுகளும்
விசுவாசமாகவேதான் பாலைச் சிரிதும் விடாமல்ப் பருகிடவே,
என்ன செய்வோம் என்று நம்மள் ஆதிகிழவன் ஏங்குமது நேரம்,
வின்னம்[204] இல்லாக் காஞ்சிவனம் கிழவனிடத்தில் விளம்புவான் காதினுக்குள்,




காராகுளம் கண்மாய் கருப்பய்யா, இப்போ பாலாய்க் கரவும் என்று
வீரா குடம் எடுத்து, கண்மாய்த் தண்ணீரை வேந்தனவன் முன்பாக
வேடுகட்டு, தண்ணீரைக் குடத்திலே ரெப்பு, வெகுவாய் இதுநேரம்
காடுதனில் பால்குடித்து வேந்தன் களைப்பாற காரியங்கள் செய்யும் என்றான்,

ஏடு 88




நல்லது என்றுமே கிழவன், சேதுபதிபார்க்க நாடிக் குடமெடுத்து,
வல்லவனும் அந்நேரம் மாசில்லா வஸ்த்திரம் வரிந்து குடந்தனிலே
கட்டினான், கோன்மகனும் கருப்பன் துணையென்று கருதி விரைவினிலே,
அட்டியில்லாதே[205] நமது காராகுளம் தண்ணீர் அள்ளினான் புண்ணியனும்,
பொங்குது பாற்க் குடந்தான், நம்மள் ஆதிகிழவன் பூரித்தான் அப்போது,



காராம்பசும்பாலை குடத்தோடே தூக்கி, கருப்பன் தனை துதித்து,
சீறாகவே நமது சேதுபதி யிடத்தில் நம்மள் சீமான் கிழவனுமே,
மன்னனே பாலருந்தும் சொன்ன படியே, மகிழ்ந்து இதுநேரம்
என்னையும் இப்போது கொஞ்சம் சுணங்கினதுனலே[206] மனைபொருப்பீர், இப்பிசகு


ஏடு 89



பொருப்பீர், எனப் புகல, நம்மள் சேதுபதியும் புண்ணியனுமே மகிழ்ந்து,
விருப்பமுடனே வெகுவாய் சந்தோஷமாகி, வேந்தன் சிறிது உரைப்பான்,
புண்ணியனே கோன்மகனே, இந்தக் கண்மாய்த் தண்ணீரைப் பொங்கவைத்தாய்ப்
பாலதுபோல்,


[204] வின்னம் = மாறுபாடு, வேறுபாடு, சிதைவு, பிளவு, தடை, கேடு
[205] அட்டி = தாமதம், தடை
[206] சுணக்கம் = காலதாமதம்

கண்ணியமாய் நானும் இப்போ பார்த்திருக்கத் தண்ணீர் காராவின் பாலாச்சு,




பால் அருந்தும் என்று சொன்னாய், கண்கட்டு போலே காட்டினாய் இப்போது,
சீலமுடனே நீயும் இந்தக் கண்மாய்த் தண்ணீரை எல்லாம் சீக்கிரத்தில் பாலாக்கி,
என்னுடைய சேனைகளும் தளகர்த்தர் மந்திரி எல்லோரும் இங்குவந்து
உன்னுடைய பாலையெல்லாம் சந்தோஷமாக உண்போம், அதன்படியே

ஏடு 90




செய்வாய் எனப்புகல, ஆதிகிழவன் தெய்வம்தனை நினைத்து,
கையில் குடத்தை வைத்து, பகவானே, இந்தக் கண்மாயில் நீரை யெல்லாம்
நிறமுடைய பாலாக இந்த நிரூபன்[207] பருக நேர்மையுடன் செய்யும் என்றான்,
திரமுடனே சொன்னதுபோல் நம்மள் வடநாட்டுச்சாமி சீமான் மனமிரங்க,



பச்சைமால், அச்சுதன், பரமசிவன் மைத்துணன், நமக்குப் படியளக்கும் காயாம்பூ,
இச்சகத்திலே உதித்து பால் தயிர் மோர் வெண்ணை எல்லாம் இன்பமுடனே புசித்த
கார்மேக வண்ணன், கமலாசனிகணவன்[208], காகுத்தன், பைந்துளவோன்,
ஆர்வமுள்ள கஞ்சனுயிர்[209] வதைத்தோன், முராரி, நம்மள் ஆதிமகாமூலம்,


ஏடு 91



பாற்க்கடலைப் போலாகி, ஆணலையும் பெண்ணலையும்[210] பரிந்து வந்துமே மோத,
தீர்க்கமுடன் சேதுபதி சேனைகளும் அங்கே செல்ல, அது நேரத்தில்
கண்டு, அரசனுந்தான் நம்மள் கிழவனைப் பார்த்து காரியம் நன்றே, எனவே
உண்டு[211] களை தீர[212] வேணும் என்று சொல்லி, உண்மையுள்ள சேதுபதி


---

[207] நிரூபன் = உருவமற்றவன், கடவுள், அரசன்
[208] கமலாசனி = கமல ஆசனி = தாமரையில் வீற்றிருப்பவள், மகாலெட்சுமி
[209] கஞ்சனுயிர் = கஞ்சன் உயிர் = கஞ்சன், கம்சன், கம்சராஜன்,
[210] ஆண்அலை பெண்அலை என இரண்டு அலைகள் உண்டு. மேலே எழும்பி வரும் அலைகளை ஆண்அலைகள் என்றும், தரையில் படர்ந்து வரும் அலைகளைப் பெண்அலைகள் என்றும் சொல்லுவர்.
[211] உண்டு = உணவாக உட்கொண்டு
[212] களை தீர = களைப்புத் தீர




குடத்திலுள்ள பால்குடிக்க, சேனைகளும் அங்கே கூடி, சந்தோஷமுடன்,
திடத்துடனே, கண்மாயில் சென்று இறங்கி, திகைத்தும் அங்கே பால் அருந்த,
சேதுபதி பார்த்து நம்மள் புதுக்கோட்டை ராஜனுக்கு செப்புகிறார் அப்போதே,
ஏது இதுநேரம் பாலும் குடிக்காமல் இருப்பதென்ன, என்று சொல்ல,

ஏடு92




நாணித் தலைகுனிந்து, நான் செய்த குற்றம் நன்றாய் இதுநேரம்
தான் இப்படி ஆச்சு, நான் போய்வருவேன் என்று தானே அவன் எழுந்து,
சேனைகளை கண்காட்டி, அந்தப் புதுக்கோட்டை நாடிச் சென்றான் விரைவினிலே,
கோனை அருகழைத்து, நம்மள் சேதுபதியும் குணமாய்ச் சிலது சொல்வார்,




வாறாய் நீ யாதவனே, இந்த காராகுளம் கண்மாயில் வல்லபமாய் பால்சுரக்க,
சீராய் இதுநேரம் எந்தன் விடாய்[213] தணித்த சீமானே இப்போது,
வேண்டுவதை நீ கேட்டால் அந்தப்படியே வெகுமானம் தாரோ**ம் எ**ன்றார்,
மீண்டும் மனதிலுள்ள குறைகள் எல்லாம் சொன்னால் வெற்றி செய்து வைப்போம் என்றார்,

ஏடு 93



மன்னன் உரைத்த மொழிகேட்டுக் கிழவன் மனமகிழ்ந்து சொல்லுகிறான்,
நன்னயமாய் என்னிடத்தில் சித்தம் இரங்கி நன்றாகச் சொன்னபடி,
என்றும் எனக்குரிய புத்திரர் பரம்பரைக்கு இதுநாள் முதலாக
நன்றாக <u>உத்யோகம் கணக்கும் மணியம்</u> நாளும் இதுமுதலாய்




கொடுப்பீர், இதுபோதும் என் சந்ததிக் கெல்லாம், கோதுகள்[214] வராதபடி
தடுத்துப், பிழைபொருத்து, எங்கள் புத்திர பரம்பரையை தற்காத்து இன்னும் உங்க
அனுசரனை எப்போதும் கிடைத்தால் அதுவே ஆகும் இது போதும்,
மனுநீதியில்ச் சிறந்த மன்னனே, என்று வணங்கினான் கோன்மகனும்,


---

[213] எந்தன் = என்னுடைய, விடாய் = தாகம்,
[214] கோதுகள் = சங்கடங்கள்

ஏடு 94




சொன்னபடியே அதுபோல் நம்மள் சேதுபதியும் சொல் தவறாது, அன்று தினம்
மன்னன் சரியெனவே, இன்று முதல் உனக்கு மணியம் கணக்கதுவும்
தருவேன், என உரைத்து, நம்மள் சேதுபதியும்தானே படைகளுடன்
ஒருமுகமாய் சேனைகளை கூட்டி, அரசன் உடனே வழிபிடித்து




சென்றார் குதிரையினில், நம்மள் இராமநாதபுரத்தில் சேது சமஸ்தானபதி
நன்றாகவே யிருக்க, நம்மள் ஆதிகிழவன் நன்மை சிறிது சொல்வோம்.
படமாத்தூர் தன்னிலேதான் நம்மள் கோனார் மகனும் பாற்ப்பசுக்கள் தன்னுடனே,
திடமாகத்தான் இருக்**க,** சிலகாலம் சென்று, நம்மள் சீமானுட மாமன்
தேவிதனை கூட்டி, பெண்பிள்ளை ஒன்றும், சிறுவன் என்றுந்தான் அழைத்து

ஏடு 95




பஞ்சம் பிழைக்க என்று, பல **இ**டமும் சென்று, பாரில் வருமையுடன்
வஞ்சகம் ஒன்றானது ஒன்று, மனிதர்க்கு உண்டான மார்க்கம் அது விலக்கி,
சிங்கம்புணரி வழி பெண்சாதி பிள்ளையுடன் அந்த ஸ்ரீரங்ககோனாரும்
தங்கும் அதுநேரம், சேவுகப்பெருமாள் சற்றே கிருபை செய்து,




ஸ்ரீரங்ககோனிடத்தில், கனவுதனில் வந்து செப்புகிறார், அப்போது
பகிரங்கமாகவே[215] நீ எங்கிருந்து வந்தாய், பாலனே சொல்லும் என,
அப்போ ஸ்ரீரங்கனுமே சேவுகனைப் பார்த்து, ஆண்டவனே நாங்களுந்தான்
எப்பவுமே காசியது காஞ்சி நகரம் எங்கள் பதியதிலே

ஏடு96




இருந்து வருங்காலம், அதில் பன்னிரண்டு வருஷம் ஏகமழை யில்லாமலே
வருந்திக், குடிகள் எல்லாம் பல இடமும் சென்றார் வயிறுபிழைக்க வென்று,
என்னுடைய பெண்சாதி தமயன்[216] ஒருவன் ஏகப் பசுமந்தையுடன்
தன்னாலே மாடுகளைத் திரட்டி வனவாசம் தானேதான் போனதுபோல்,

[215] பகிரங்கமாக = எல்லோருக்கும் தெரியும்படி வெளிப்படையாக
[216] தமயன் = அண்ணன், மூத்த சகோதரன்




போனாது நேரம் என்னுடைய தங்கை பிரஜோபமாம் தருணம்[217],
ஆனால் வருமையுற்று காவேரி மார்க்கம் ஆவுகளை ஓட்டி அவர்
சென்றார், அவர் நிலைமை ஒன்றும் எனக்குத் தெரியவில்லை சீமானே,
நன்றாக நீயும் இந்த வழிதனிலே இப்போ நாடி அவர்களையும்

ஏடு 97




கண்டால் உரையும் என்றான், அப்போ சேவுகப் பெருமாள் காரணங்கள் தான் அறிந்து,
உண்டான காரணங்கள் தன்னை உரையாமல் ஓதுகிறான் ஸ்ரீரங்கனுக்கு,
இந்த வழியே ஒருவன் பாற்பசுக்களோடு ஏகினான், படமாத்தூர்
வந்தே, சுகத்துடனே ராஜன் வெகுமதியில் வாழ்ந்திருக்கான் இப்போது,




இப்போது யாதவனும் சேமமே என்று**,** இனிதாய்ப் புகன்றிடவே,
செப்பினது போலக் கனவு, ஸ்ரீரங்கன் கண்டு தேவியிடமே கூற,
நல்லது என்றுமே அவர்கள், அந்தப்படமாத்தூர் செல்ல நாடிப் பயணமிட்டு
செல்ல, அதுநேரம் ஸ்ரீரங்கன் தன்னுடைய செல்வன் மனமகிழ்ந்து,

ஏடு 98




தகப்பனைப் பார்த்தே அவனும் ஏனப்பா இந்த சங்கடமே என, இப்போது
மிகவே மனதில் **ரெ**ம்ப பக்தியுடனே நம்மள் வீரன் கருப்பனையும்
துதி செய்தால், மாமனுட சேதி தெரியச் சொல்லுவார் காஞ்சிவனம்,
<u>(என் மாமன்)</u> விபர மெல்லாம் நம்மள் காஞ்சிக்கருப்பன் விளம்புவான் என்று சொல்ல




**(மகன் உரைத்)**த சொற்படியே ஸ்ரீரங்கன் அங்கே மனதில்க் கனிவு கொண்டு
**(காஞ்சிவ)**ன கருப்பனையும் பக்தியுடனே பரிந்து வருந்துகிறான்,
ஏழைக்கு இரங்கும் ஐயா, காஞ்சிபுரத்புரத்தை விட்டு எங்கள் எஜமான் எழுந்திரு நீ,
வேளைக்கு உதவி செய்யும் கருப்பய்யா, இந்த வேளை வருதி செய்யும்,

ஏடு 99

[217] பிரஜோபமாம் தருணம் = கருவுற்றிருந்த நேரம்




என்று வருந்தயிலே, கருப்பனும் அங்கே இனிதாய் மனமிரங்கி,
நன்றாக சன்னதமாய், ஏண்டா, மயங்காதே, நாடி படமாத்தூர்
சென்றால், உனதருமைச் செல்வனுடனே சீக்கிரத்தில் அங்கேதான்
இன்றே உன் மைத்துணனை கண்டு கொள்வாய் என்று நம்மள் எஜமான்
உரைத்திடவே,




உடனே ஸ்ரீரங்கனுந்தான் தன்னுடைய தேவி <u>உய்யம்மாள்</u> தன்னுடைய
திடமுடய தன் <u>புதல்வன் கருப்பையா</u> யென்ற செல்வன்தனைக் கூட்டி,
தங்காமலே விரைவில் <u>மேலூர்</u>ப் பாதை தானே வழிகூட்டி
எங்கும் புகழ் மணக்கும் அந்தப் படமாத்தூர்க் காட்டில் இனிதாய் அவர்கள் வர,

ஏடு 100




ஆதிகிழவனங்கே பசுமந்தை தன்னை அதிகக்கவனமுடன்
சேதுபதி நாட்டில் படமாத்தூர் வந்த நம்மள் சீமான் பசு மேய்க்க,
கண்டான் ஸ்ரீரங்கனுமே, தங்கை மணவாளன் காட்டிலே மாட்டுடனே,
அண்டர்களும் வியக்க நம்மள் முராரி வைகுந்தன் ஆவினங்கள் மேயப்பது போல்



நிற்பதுவைத்தான்[218] புரிந்து[219], ஸ்ரீரங்கன் தேவி[220] நிமிஷமதில் ஓடிவந்து,
அற்புதமாய் அண்ணனுட காலில் விழுந்து அலரினாள், கோதையரும்
புலம்ப, அதுநேரம் தங்கையைத்தானே புண்ணியனும் ஆதரித்து,
ஜலம்புரண்டு காவேரிவந்த விபரமுடன் சாமி செயலும் கூறி,


ஏடு 101



குணமாய்க் கிழவனுமே ஸ்ரீரங்க கோனாரை கூட்டி வர, தங்கையுடன்
மணமாய் இவர்களையும் தன்மனையில்த்தானே வாசமுடனே குடியாய்
வைத்திருக்கும் நாளையிலே, ஸ்ரீரங்கன் பெற்ற வடிவழகன் அப்போது
பக்தி விசுவாசமுடன் நம்மள் கிழவனிடத்தில் பக்ஷம்[221] எனக் கூறுகிறான்.


---

[218] நிற்பதுவை = நிற்கின்றதை
[219] புரிந்து = அடையாளம் கண்டுகொண்டு, அறிந்துகொண்டு,
[220] ஸ்ரீரங்கன் தேவி = ஸ்ரீரங்கனின் மனைவி, ஆதிகிழவனின் தங்கை
[221] பக்ஷம் = பக்கம், கொள்கை, அணிவகுப்பிற் சேனையின் பிரிவு, (இங்கே மாடுமேய்த்தல் தொழிலில் ஒரு பிரிவு மாடுகளை மேய்த்தல்)




நானே சுரபி இனத்தை இன்று முதலாக நாடி, இந்தக் காடு அதிலே
தானே திரட்டி வந்து மேய்த்துத், தொழுவில்த்தான் அடைத்துமே தினமும்
வருவேன், அதன்படியே மாடுகளை மேய்ப்பேன், வகையாய் இது முதலாய்
சிறுவனுட[222] வேலை, இந்தப்படி செய்வேன் என உரைத்தான்,

ஏடு 102




அந்தப்படியே கிழவன் தங்கை மகனுக்கு ஆதரவாய்ச் செய்தி சொல்லி,
சந்தோஷமாய் பசுக்கள் தன்னைத் திரட்டித் தானே அவனிடத்தில்
மேய்த்து வருவீர் எனவே ஆதிகிழவன் விடைகொடுக்கவே, அது போல்
சாய்த்துப் பசுமந்தைகளை அன்று முதல் சிலநாள் தானே அவன் மேய்க்க,




ஒருநாள்தினம், அவனும் சுரபி எல்லாம் ஓட்டி ஊரைவிட்டு மேய, கன்று
தருவும் பலந்தியும் தாண்டிப் பசுவை சார்பாக ஓரிடத்தில்
விட்டும், அங்கே கோன்மகனும் ஒரு ஆயி[223] மரத்தடியில் வீரன் படுத்து உறங்க,
கட்டுவர்க்கம்[224] உண்ணாமல் கருப்பய்யாக் கோனார் காட்டிலே சென்றதினால்,

ஏடு 103



சாதம் கரிசமைத்து ஸ்ரீரங்கன்தேவி, தயிரும் பழவகையும்
மோதகமும் பாயாசம் வத்தல் வடகம் முழுதும் அருசுவையும்
எடுத்தும் அவள் விரைவில் பொற்ப்பாத்திரத்தில் இனிதாய் இலையுமிட்டு
கொடுத்து அனுப்ப என்று, நம்மள் கிழவன் குமாரியிடம் கோதை சிலது சொல்வாள்,




அற்புத சுந்தரியே, கற்பு அலங்கார அபரஞ்சி பொன்மணியே,
தற்பரன் மெய்த்தவமே**,** வற்றாத செல்வமே, தங்கமே, என் தயவே,
அண்ணன் குறை அகற்ற பெண்வடிவாய் வந்த அணங்கே, மரகதமே,

---


[222] சிறுவனுட = சிறுவனுடைய
[223] ஆயி மரம் = ஆய மரம்
[224] கட்டுவர்க்கம் = கட்டுச்சோறு (சோறு, குழம்பு, தயிர், வெஞ்சனம், துவையல், ஊறுகாய் முதலானவற்றைத் தனித்தனியாகக் கட்டிக் கொடுப்பது)

வண்ண மடமயிலே, உய்யவந்தாளே, மணியே கனிரசமே,

ஏடு 104




இப்போது உன் மைத்துணற்குப் பசியாகும் நேரம் இதுவே, அதனாலே
தப்பிதம்[225] என்று எண்ணாமல் இந்த கட்டுவர்க்கத்தைத் தானே அவனிடத்தில்
கொண்டு போய் நீ கொடுத்து, சீக்கிரத்தில் வாராய் குணவதியே, என்று சொல்ல
கண்டு, சந்தோஷமுடன் நம்மள் கிழவன் மகளும் கட்டமுதுதான் எடுத்து




போனாள், வனத்தினிலே பத்தினியும் அங்கே புகுந்து, பலதிசையும்
கோனார் மகனைத்தேடி நம்மள் ஆதிகிழவன் குமரி வருகையிலே,
வடநாடு விட்டுவந்த நம்மள் காஞ்சிவனச்சாமி மங்கை வரவு கண்டு,
உடனே ஸ்ரீரங்கமகன் கருப்பய்யாக் கோனுக்கு உத்தமியை சேர்த்துவைக்க
ஐயன் நினைவு கொண்டு, அறுபது அடி நாகம்[226] ஆனான், அது வனத்தில்

ஏடு 105




பைஅரவைப்[227] போலாகி, நம்மள் உய்யவந்தாள் பின்னே பரிந்தான் கருப்பனுமே,
படமெடுத்து நாகமது மங்கையின் பின்னே பார்த்து துரத்திடவே,
விட அரவைக்[228] கண்டு நம்மள் கிழவன் குமாரி வெகுவாய் மனங்கலங்கி
ஓடினாள் கானகத்தில், உய்ய வந்தாளும் உள்ளம் பதரியேதான்
வாடி, மனது நொந்து, பல திசைகளும் ஓடி, மங்கை விரைவினிலே




ஆயி மரத்தடியில் நம்மள் கருப்பய்யாக் கோனார் அயர்ந்து உறங்குமிடம்,
சேய் இழந்த மங்கையைப் போல், நம்மள் உய்யவந்தாளும் தேவி, அவன்மேல்
விழுக,
கண்டான் ஸ்ரீரங்கன் மகன் மாமன்மகளை கருநாகமே துடர[229],
அண்ட ஒண்ணாக் கோபமுடன் தடியெடுத்து வீச, அப்போது காஞ்சிவனம்

ஏடு 106

225 தப்பிதம் = தவறான செயல்
226 அறுபதடி நாகம் = 60அடி நீளம் உடைய யானைகொண்டான் பாம்பு,
(அனகொண்டா பாம்பு, anaconda snake)
227 பைஅரவம் = விஷப்பை உடைய பாம்பு
228 விட அரவம் = விஷம் கொண்ட பாம்பு
229 துடர = தொடர, தொடர்ந்துவர,




பிரசன்னமாகிடவே[230], ஸ்ரீரங்கன் பெற்ற பிள்ளை அதிவிரைவில்
அரசனைப்போல எழுந்து, நம்மள் கருப்பய்யா பாதம் ஆண்டவனே தஞ்சம் என்றான்,
வாலை வடிவுடைய நம்மள் உய்யவந்தாளும் மாது வணங்கி நின்றாள்,
சோலை கிளிமொழியாள், அந்த சுந்தரி தன்னை, சுவாமி மனம் இரங்கி,




மங்கையே, இன்று முதல் ஸ்ரீரங்கன் பெற்ற வடிவழகன் உந்தனுக்கே,
கங்கை அணிந்தோன் அருளால், மணவாழ்க்கை கருப்பன் விருப்பமுடன்,
இருவரையும் இன்று தினம் மணம் செய்து வைக்க எடுத்தேன் இது ரூபம்,
திருமாலும் லெட்சுமியும் சிறந்த வகைபோல் தேசம் அதிலே நீங்கள்,


ஏடு 107



இருப்பீர் எனப் புகன்று, நம்மள் காஞ்சிவனச் சாமி இதயம் மகிழ்ந்து உடனே,
விருப்பமுள்ள மாலை இரண்டு இருவரது கையில் நம்மள் வீரன் கொடுத்தும் அப்போ
ஒருவரது கழுத்தில் ஒருவர்க்கு ஒருவர் உண்மையுள்ள மாலை தன்னை
இருவர் கழுத்தினிலே போடும்படி செய்து, நம்மள் எஜமானும் காஞ்சிவனம்




மறைந்தான் அதுநேரம், நம்மள் ஸ்ரீரங்கன் பெற்ற வடிவழகன் தான் மகிழ்ந்து
விரைந்து கருப்**பன் இ**ன்று மணம்[231] செய்துவைத்த விதமும் புதுமை என்று
இருந்தான், அதுநேரம் கட்டுவர்க்கத்தை இனிதாய்ப் புசியாமல்
வருந்தும் வகையறிந்து, நம்மள் கிழவன் தவத்தால் வந்த அபரஞ்சிதமும்[232]
ஏடு 108




எண்ணுகிறாள், யோசனையாய், நம்மள் உய்யவந்தாளும் இதுவும் விதிப்பயனே,
உண்ணாமல் சாதம் அதை கருப்பய்யாக் கோனார் ஒன்றும் அருந்தாமல்
இருப்பது என்ன காரணமோ, என்ன செய்வோம் என்று எழுந்து விரைவில் வந்து,
கருப்பய்யாகக் கோனிடத்தில் நம்மள் கிழவன் குமாரி கன்னி சிறிது சொல்வாள்,

[230] பிரசன்னமாகிடவே = நேரில் காட்சியளித்திடவே
[231] மணம் = திருமணம்
[232] அபரஞ்சிதம் = கலப்படு இல்லாத தூயதங்கத்திற்கு அபரஞ்சிதம் என்று பெயர். இங்கே ஆதிகிழவனின் மகளானவள் அபரஞ்சிதம் போன்றவள் என்று வர்ணிக்கப்படுகிறாள். (அழகர்கோயில் கள்ளழகர் உற்சவர் திருமேனி அபரஞ்சித தங்கத்தால் செய்யப்பெற்றது)




எல்லாம் அவன் செயலால் நடந்தபடியாலே எண்ணுவதால் என்னபலன்,
வல்லவரே இன்று உமக்கு பாரியாள்[233] ஆனேன், வையகத்தில் இன்று முதல்
உமக்குப் பணிவிடைகள் சரியாய் நடத்த உண்மை தவறாதபடி,
நமக்குள்ள லாபம் அதை தெய்வம் சரியாய் நடத்தியதாய் இப்பொழுதே,

ஏடு 109




அன்னம் புசியும் என்று நம்மள் உய்யவந்தாளும், ஆதிகிழவன் மகள்
வண்ண மடமயிலும், இலைபோட்டு சாதம் வடித்து நிற்கையிலே,
கருப்பய்யாக் கோனாரும் சாதம் அருந்தி, கையலம்பி, கை துவட்டி,
விருப்பமுடன் இருக்க, நம்மள் உய்யவந்தாளும் வெகுவாய் விரைவினிலே,
வெற்றிலை கமுகுடனே[234] ஏலரிசியோடு விதமாய்க் கொடுத்திடுவார்,




நல் தவத்திலே சிறந்த மாணிக்கம் போலே, நன்றாய் இருவர்களும்
சிந்தை மகிழ்ந்தே இருக்க, சிலநேரம் சென்று தீரன் விடைகொடுக்க,
சந்தோஷமாய் அவளும் எழுந்து, விரைவில்தானே வழிகூட்டி,
பொங்கமுடனே விரைவில் நம்மள் உய்யவந்தாளும் புகுந்து படமாத்தூர்
மங்கையும் சென்றிடவே, அந்தப் படமாத்தூர் பெண்கள் வந்து சிலது சொல்வார்,

ஏடு 110



ஏதடி மாதரசே உன்கழுத்திலே மாலை, யாருடைய தாலி என்றார்,
மாது மனது நொந்து, மாலை கழட்ட வரவில்லை, மாலை அது
அப்போது ஸ்ரீரங்கனுடதேவியும் அங்கே அருகில் வந்து பார்க்கயிலே,
செப்பமுள்ள லட்சுமி போல் உய்யவந்தாள் நிற்க, திகைத்து இது என்ன என்றாள்,




அப்போதுமே நமது கிழவனுட பாரிஅழகும் அங்கே ஓடி வந்தது,

---


233 பாரியாள் = மனைவி
234 கமுகு = பாக்கு

ஒப்பனை இல்லாது மாலை உனக்கு இட்டார், ஓதடி[235] என்றே உரைக்க,
நடந்த விபரம் எல்லாம் நம்மள் உய்யவந்தாளும் நன்றாய் உரைக்கயிலே,
திடமான காஞ்சிவனம் அங்குள்ளார் யாரும் தெரியும்படி உரைப்பான்,

ஏடு 111




கருப்பனுட மாலை இது, யாராலும் இங்கே கழட்ட முடியா மாலை,
விருப்பமுள்ள பூமாலை, நம்மள் கருப்பய்யாக் கோனாரும் அங்கே கொடுத்தது இம்மாலை,
உய்யவந்தாள் இம்மாலை நன்மையடைய ஓடிவந்த பூமாலை,
வையகத்திலே மாலை, நம்மள் ஸ்ரீரங்கன் பெற்ற வடிவழகன் பூமாலை,




ஆகையால் இன்று தினம், தாய் தந்தையர்கள் அவனியதிலே தெரிய,
தோகை இளமயிலை, இம்மாலை அணிந்தோனுக்கு சுபமணமே செய்து வைப்பீர்,
மறுக்காதீர் என்று சொல்லி, வடநாட்டுச்சாமி மறைந்தான் ஒரு நொடியில்,
சிறக்க அதுபோல் முகூர்த்தம், நம்மள் ஆதிகிழவன் திறமை அந்த வேளையினில்,

ஏடு 112




கருப்பய்யாக் கோனார்க்கு நம்மள் உய்யவந்தாளை கருப்பன் துணை எனவே,
விருப்பமுடனே கிழவன் மணம் சூட்டி வைத்தான் மேதினியிலே தெரிய,
விசுவாசமாகவுமே, நம்மள் கிழவன் மனையில் வீற்றிருந்தார், எல்லோரும்
பசுக்களும் கன்றுகளும் ஒருகுறைவும் இன்றி பட்சமுடனே வாழ்ந்தார்.




சிலகாலம் சென்றதற்பின், நம்மள் ஆதிகிழவனுக்கு சிவனார் கிருபையினால்
குலமும் தளைக்க என்று, இரட்டைக்குழந்தை குணமாய்ப் பிறந்திடவே,
ஆண்பிள்ளையானதற்க்கு காஞ்சிவனம் என்றும், அருமை பெயருமிட்டு,
பெண்தனக்குமே கிழவன் உய்யாண்டாள் என்று பெயரும் அருமையுடன்

ஏடு 113




235 ஓதடி = சொல்லடி, (அடி என்பது பெண்ணை அதட்டும் சொல். அடா, டேய் என்பன ஆணை அதட்டும் சொற்கள்)

வைத்து, வளர்த்துவர, வயது பணிரெண்டுவாக, இருபிள்ளைகளில் பத்தினியாள் உய்யாண்டத்தாளைக் கிழவன் பகவானருள் பெறவே கருப்பையாக்கோன் தனக்கு இரண்டாங்குடியாய்[236] பரிந்து மணம் சூட்டவென்று விருப்பமுடனே கிழவன் மாங்கல்யம் செய்து வெகுவாய் கருப்பனிடம்




உத்திரவு கேட்கையிலே, நம்மள் காஞ்சிவனச்சாமி ஓதுகிறான் அப்போது, *"பத்தினிக்குமே மணமும் மணவாழனென்றும் பாரில் கிடைத்தாலும், வெகுவாய்[237] பலன் உரைக்க இடமில்லை"* என்று விளம்பினான் காஞ்சிவனம், தகுவாய் உரைத்த மொழி தன்னைக் கிழவன் சாற்றாமல்த் தானேவற்றாம்

ஏடு 114




புத்திர சந்தானம் அது சொற்பம் என்று எண்ணி புலம்பினான் காஞ்சிவனம், இத்தினத்திலே நமது கருப்பய்யாக்கோனுக்கு இரண்டாவது மணமாய் முடிந்தால், நமக்கு உதவி இருக்கும்படியே முன்னடத்த வேணும் என்று, கடிகை[238] தவறாமல், நம்ம உய்யாண்டாள் தன்னை கருப்பய்யாக்கோன் தனக்கே



கல்யாணம் செய்ததற் பயன் பத்துமாதம் சென்று காரிகையும் **கர்**ப்பமுடன் நல்ஓரை வேளையினில் பிரஜோப**ம் ஆ**காமல், நங்கை உய்யாண்டாளும் பரமபதம் சென்றிடவே, அந்தப் படமாத்தூர் தன்னில் பலரும் மிகப்புலம்ப திறமாய் மயானம் அது கொண்டு, போய் நம்மள் சீமான்மகளையுமே

ஏடு 115




புதைக்கும் தருணம் அதில், அந்த உய்யாண்டத்தாளும் புகுந்து தமக்கையின்மேல் கதைகூற என்று சொல்லி, சன்னதமாய்[239] வந்து, கன்னியும் அங்கே ஏது[240] சொல்வாள்,

---


236 இரண்டாங்குடியாய் = இரண்டாவது குடித்தனமாக, இரண்டாவது மனைவியாக
237 வெகுவாய் = சிறப்பாய், கூடுதலாய், அதிகமாய்,
238 கடிகை = நாழிகை, நேரம்
239 சன்னதமாய் = ஆவேசமாய், கடுங்கோபமாய், வீறாப்பாய்
240 ஏது = எங்கிருந்து, எப்படி, காரணம்,

நான் வளர்த்த பிருவை[241] **ஒ**ன்று என்னைப் போல் சூலாய்[242] நாடிபசுத் தொழுவில்
தான் கட்டியே யிருக்கும், அதையும் என்னோடு சரியாய் புதைத்துவிடு,




என்வயிற்றில் ஓர்குழந்தை உயிரோடுதானே இருக்கிறது பெண்வடிவாய்,
நன்மை பெறவே, எனது வயிற்றை கிழிப்பது போல், நன்றாய் பிருவை தன்னை
வயிற்றை கிழித்திடுவீர், பிருவை ஒன்று அங்கே வடிவுதுலங்கி நிற்கும்,
கயிற்றால் பிடித்தும் அதை வளர்த்து, எனக்கு காலன் வந்த காலம் அதில்,

ஏடு 116




சூலாடு குத்தயிலே[243], அப்போ பிருவை துலங்கும் அது வயிற்றில்,
மேலாகவே எனது சோதனையைப் பாரும், மெல்லி[244] நான் இன்று முதல்
காசிப் பிறாமணத்தி உய்யவந்த சத்தி கன்னியிடமே சேர்ந்தேன்,
பேசி என் பெண்குழந்தை தானே வளரும், பிதற்றாதீர் எல்லோரும்,



உய்யாண்டாள் என்று சொல்லி குடிசை ஒன்றுகட்டி[245], ஊரில் சிறப்புடனே,
வைய்யகத்தில்தான் தெரிய வைப்பீர், பரணிமேல் வகையா நடத்தும் என்றாள்,
இவ்வுரை கேட்டே பலரும், பிருவை கொண்டு வந்து, இதமாய் அதன் வயிற்றை
ஒவ்வும்படி[246] அறுத்து பார்க்க, வயிற்றில் ஒரு பிருவை தூங்குவதை

ஏடு 117



கண்ணாலே கண்டார்கள், உய்யாண்டாள் தன்னைக் கடுகி, அதுபோலே

---

[241] பிருவை = பெண் ஆடு.

[242] சூல் = கர்ப்பம், சூல்கொண்ட, கருவுற்ற


[243] சூலாடு குத்துதல் = நிறைமாத கர்பிணியாக இருக்கும் பெண்ணையும் அவளது கருவையும் காக்கும் பொருட்டு நேர்ந்து கொள்ளும் வழிபாட்டு முறை. (நிறைசினை ஆடு ஒன்றைக் கொண்டு வந்து, பெண் தெய்வத்தின் முன் நிறுத்தி, வேல் போன்ற கருவியினால் அந்த ஆட்டின் வயிற்றைக் குத்திக் கிழித்து, அதன் உள்ளே இருக்கும் குட்டியை எடுத்து பலிபீடத்தின்மீது வைப்பர்.)

[244] மெல்லி = மெலிந்தவள்

[245] உய்யாண்டாள் தன் பெயரில் குடிசை ஒன்று கட்டி வழிபடச் சொல்லுதல்


[246] ஒவ்வும்படி = இணங்கும்படி , பொருந்துக்கொள்ளும்படி,

எண்ணாமல் மானிடர்கள் வயிற்றைச் சோதிக்க, இலங்கும் கதிரொலிபோல்
அழகு துலங்குது பெண்குழந்தைதானே, அலறிப் புரளயிலே[247],
தளம் மேதினில்[248] இருந்த நம்மள் ஆதிகிழவன் சடாரெனவே[249] தான்குதித்து,




இரு கரத்தினால் வாரி, மார்போடு அணைத்து, இதயம் மிகவே கொதித்து,
தருவே[250], திருவுருவே, உய்யாண்டாள் தன் வயிற்றில் ஜனித்த நவரெத்தினமே,
மானே, மரிக்கொழுந்தே, உன்னைச் சுமந்திருந்த மாதாவை என் உயிரை
த்தானே, இது முதலாய் உய்யாண்டாள் நீயே தைய்யல் என்று முத்தமிட்டான்,

ஏடு 118




அன்று, உய்யத்தாண்டாளை நல்லடக்கம் செய்து, அவளுடைய பேர் துலங்க[251],
நன்றாய்க் குழந்தைதன்னை எடுத்துக், கிழவன் நாடி மனையில் வந்து
யிருக்கும் தருணம் அதில், படமாத்தூர்க் காட்டில் எங்கும் சிறப்புடனே
தருக்களுடனதியும் செழிப்புற்றிருக்கத் தானே ஒருதினத்தில்



கருப்பய்யாக் கோனும் அங்கே மாட்டுடன் சென்று, காரணமாய் ஓரிடத்தில்
கருவேல் மரத்தடியில் வந்து உட்கார்ந்து, கட்டமுதுதான் அருந்த,
அதுவேளை, ஓர் கிழவன் அதிக வயதானவர் போலாகி, அது இடத்தில்
புதுமையுடன் வந்து நின்று, பசியால் மெலிந்து, புண்ணியனும் ஏது சொல்வான்


ஏடு 119



பொதுவர்[252] குலத்து அரசே, இப்போது எனக்குப் புண்ணியனே, என்பசியை
இது சமயமே தணித்தால், என்னால் இயன்ற இதம் புரிவேன் என்று உரைத்தான்,
கருப்பய்யாக்கோன் கேட்டு, அரிகரி என்று காதில் கரம்புதைத்து,
விருப்பமுடனே, அவர்முன் கட்டுவர்க்கத்தை வீரன் மிகக் கொடுத்து,


---

247 அலறிப் புரளயிலே = வருந்தி அழுது கீழேவிழுந்து புரளுதுதல்,
248 தளம் மேதினில் = தளத்திற்கு மேலே (பரண் மேலே இருந்த ஆதிகிழவன்)
249 சடாரென = தீடிரென, விரைவாக,
250 தரு = விருட்ச மரம் (சந்தனம்,பாரிசாதம், மந்தாரம்,மாமரம், வன்னி, வில்வம், பாதிரிமரம்)
251 பேர் துலங்க = பெயர் துலங்க, பெயர் விளங்க,
252 பொதுவர் = இடையர்




காராவின்[253] பால் கறந்து, கிழவனுக்குத்தானே கண்டமட்டுமே கொடுத்து,
சீர் ஆயினைப்[254] பாரும் என்று, ஸ்ரீரங்கன் பிள்ளை செப்பினான் அப்பொழுதே,
நல்லதென்றுமே கிழவன் பாலுங்குடித்து, நாடி அவனிடத்தில்,
வல்லவனே, நீ எனக்கு மகனாக வேண்டும், வயதும் அதிகமடா,

ஏடு 120




இப்போது என் சொற்ப்படியே சாதம் கொடுத்து, இனிதாய் உபசரித்தாய்,
எப்போதுமே எனக்கு உன்னைப்போல் பிள்ளை இருக்கான், அவனுடைய
இருவிழியுமே குருடாய், வருவது அறியாமல், எல்லாம் சரியெனவே
வருவார், கெடாதே என்றால் மறந்துவிடுவான், வரும்போது அறிந்து கொள்வான்,




இந்தவிதமான பிள்ளை ஈசன் கொடுத்தார், என்ன செய்வேன் நான் அவனை,
சந்தோஷம்தான் பெருக, ஒரு குழந்தை என்று தானே சுகமடைய
திரவியம் தேட வந்தேன், அதோ தெரியும் தோப்பில், சிறுவனைப்போல் ஓர்முனியும்
வரம்பில்லா[255] பொன்குடங்கள் வைத்து இருக்க, வழியில் புதுமைகண்டு,

ஏடு 121



அய்யனே, பொன்முனியே, இந்த புதையல் குடத்தை அனுசரித்துத் தாரும் என்று
செப்பினதற்கே, முனியும் சீரி எழுந்து, தீரன் ஒரு வாலிபனை
பலிகொடுத்தால், பொன்னை யெல்லாம் கொடுப்பேன் எனவே, பயந்து
விரைவினிலே
சலித்து, இது நேரம் வாய்க்கு எட்டியதுதான் பலிதமில்லை என்று




வந்தேன், இதுவழியில் கண்ணனைப் போலும் உந்தன் வரவுகண்டேன்,
ஆகையினால்
சந்தோஷமாய், எனக்கு சாதம் கொடுத்த தர்மம் பலிக்க என்றால்,


[253] காறாவின் = காராவின் = காராம்பசுவின்
[254] சீர் ஆயினை = சீர் ஆகினாய் = நன்றாக ஆகி விட்டாய்,
[255] வரம்பில்லா = அளவில்லா

நானும் சுகமடைய, புத்தியில்லா பிள்ளை நன்றாய் இருக்க, இன்று
தானும் உனது உயிரைக் கொடுத்து, எனக்கு தகுந்த சேமம் பெருக,

ஏடு 122




முனிக்கு சந்தோஷமுடன் பெலியாய்[256] நீ வந்தால், முழுதும் நலம்பரவும்,
இனித்தான் கிருபை, என்ன சொல்லுவாய் என்று இரக்கமுடனே கேட்க,
கருப்பய்யாக் கோன் தனக்கு உய்யாண்டாள் தான் இறந்த கவலை, அதனாலே,
இருப்பதினால் என்ன பலன், என்று ஒருமித்து எழுந்து, கிழவனையும்




பார்த்து, சந்தோஷமுடன், ஐய்யா பெரியவரே பகர்ந்தபடியே வருவேன்
தீர்த்துவிடும் இன்று என்னை, சீமானே யென்று தீரன் எழுந்தவுடன்,
மனதில் சந்தோஷமுடன் ஸ்ரீரங்கன் பெற்ற வடிவழகனை **அ**ழைத்து,
தனம் இருக்குது என்றுசொல்லி, அந்தப் படமாத்தூர் காடுதானே வெகுதூரம்

ஏடு 123




நடந்து, சந்தோஷமதாய் அந்த காட்டினுக்குள் செல்ல, நன்மையென ஓர்புதுமை,
அடர்ந்த வனச்சோலையிலே, ஒன்பது பொன்குடத்தில் ஆண்டவன் தன் செயலால்,
திரவியமும்தான் இருக்கக் கருப்பய்யாக்கோனும் தீரமுடனே அது சொல்வான்,
வரம் மிகுந்த புண்ணியனே, காட்டுவழிப்பாதை வருவார் பலர், எவரும்




கண்ணாரக் காண்பது முன், என் சிரத்தை வெட்டி காட்டிலே போட்டுவிட்டு,
எண்ண ஒண்ணா[257] பொன்னை யெல்லாம் மறைத்து வைத்து, இன்று இரவில் கொண்டு போவீர்,
என்று சொல்லத்தான், கேட்டு நரைத்த கிழவன் இதுவும் சரியெனவே,
இன்று தலை குனிந்தால் வெட்டலாம் என்றான், இரக்கம் இல்லாதவர் போல,

ஏடு 124

[256] பெலியாய் = பலியாய், (நீ சந்தோஷத்துடன் உன்னைப் பலி கொடுத்தால்)
[257] எண்ண ஒண்ணா = நினைத்துக்கூடப் பார்க்க முடியாத, எண்ணி அளவிடமுடியாத




சொன்னவுடனே நமது சுந்தரனுமங்கே துயர்[258] முடிந்தது என்று,
தன்னுடைய பேர்துலங்க ஒருகுழந்தை இப்பதான் இருந்தால் போதும் என்று,
தலைகுனிந்து நிற்கயிலே[259], கிழவனும் அங்கேதானே குழந்தையைப் போல்
கொலைபுரிவதை தவிரித்து, அந்த புதையல் குடத்தில் குத்தவைத்துமே[260] இருக்க,




கருப்பையாக் கோனும் அங்கே, சிரத்தை துணிக்காத காரணம் ஏன் என்று சொல்லி,
உருக்கமுடன் தன் எதிரில் நின்ற கிழவன் உபாயமுடனே மனம்
சலித்து, மனம் பதரி, பின்புறத்தில் பார்க்கத் தானே, குமாரனைப் போல்
கலிதீர் தீர்க்கும் பிள்ளையென பொன்குடத்தின்மேலே கண்டான் குமாரனையும்,

ஏடு 125




பார்த்து மனமகிழ்ந்து, கருப்பய்யாக் கோனார் பரிவுடனே ஏது சொல்வான்,
காத்த வனதேவதையே, இந்தப் படமாத்தூர் காட்டில் கண்ட க**ள**ஞ்சியமே[261]
சோதனையாய் கொண்டு வந்து, இந்தக் கண்காட்சி செய்த துரையே, நீ இப்போது,
பாதகனாம் என்னையும் ஏன் இப்படிச் சோதித்து, பாலகரைப் போல் வடிவாய்




இருப்பதென்ன காரணமோ, எங்கள் வடநாட்டுச் சாமியோ, ஏதோ இதுவிபரம்,
விருப்பமுடனே எனக்கு சொல்ல இதுநேரம் வேணும், துரை மகனே
என்று உரைக்கையிலே, நம்மள் காஞ்சிவனச்சாமி இரங்கி அருள்புரிய,
நன்றாகக் காஞ்சிவனம் பிரசன்னமாகி, நன்மை சிலது **உ**ரைப்பான்,

ஏடு 126




அப்பனே சொல்லுகிறேன், உன்னுடைய மாமன் ஆனோன், என்னை மறத்தான்,
செப்பின தெல்லாம் மறந்து, உய்யாண்டாள் தன்னை தேவி யெனவே உனக்கு
முடித்தான் விவாகமது, கருப்பன் உரைத்த மொழி தவறினான் அவனும்,
துடித்தான் மகள் இறக்க, அத்துடன் நீயும் சோர்வடைந்தாய் இப்போது,

[258] துயர் = துன்பம், இரண்டாவது மனைவி பிரசவத்தின் போது இறந்த சோகம்,
[259] நிற்கயிலே = நிற்கும் வேளையிலே, நிற்கும்போது,
[260] குத்தவைத்து = கைகளை முன் நீட்டி, கால் மடக்கி உட்கார்ந்து இருத்தல்.
(அருள்மிகு ஐயப்பன் உட்கார்ந்து இருப்பது போன்று உட்கார்ந்து இருப்பது)
[261] களஞ்சியம் = மிகுதியான காசு அல்லது தானியங்களைச் சேமிக்கும் பாத்திரம்.




கருப்பன் துணை, எனவே, இந்த ஒன்பது பொன்குடத்தில் கண்ட பொருளை யெல்லாம்,
விருப்பமுடன் இவ்விடத்தல் இந்த காஞ்சிக் கருப்பன் விதரம் உடன் இருந்து, காத்து உனக்கு அளிப்பேன், <u>சிவல்பட்டி என்ற காட்டினுக்குள்ளே</u> சிலது யதார்த்தமுள்ள யாதவர்கள் நாலிரண்டு வீடு நன்மையுடனே எடுத்து,

ஏடு 127




இருந்து சுகமாக வருகிறார் அங்கே எதுவும் குறையில்லாமல்,
நருந்துளவோனைப்[262] பணிந்து சேமம்[263] பெருகி நன்மையுடன் இருக்க,
அவ்விடத்தில் ஓர்புதுமை, உவர் நிலந்தான் ரெம்ப[264] அதிகம், ஒருகாடு ஒவ்வும்படி அதையே இந்த திரவியத்தினாலே உபாயமுடனே வாங்கி,




பசுத் தொ**ழு**வை அங்கு வைத்து, உயர் நிலத்தில் சாணி பரவி, அதில் விதைத்து,
விசுவாசமாகவே நீ இந்த இடத்தில் வீடு எடுத்துமே[265] இதையும்
<u>குமாரனுடபட்டி</u> என்று யார்க்கும் தெரிய கூறி இதில் இருப்பீர்,
சுமாருடனே இன்று முதல் உனக்கு துணையாய்தான் இருப்பேன் வையகத்தில்,

எடு 128



இது புதுமைதான், எவர்க்கும் உரையாமல் செய்வாய், இந்தப் பொருளை யெல்லாம்
எதுவும் குறையாமல் காத்திருப்பேன், என்று நம்மள் எஜமான் உரைக்கயிலே,
கருப்பய்யாக் கோனாரும் நம்மள் கருப்பய்யா தன்னை காரணமாய்த்தான் வணங்கி,
விருப்பமுடன் வீட்டில் வந்து கிழவனுக்கும் சொல்லி, வீரன் அதுதினமே




---


[262] நருந்துளவோன் = திருமால், பெருமாள், கண்ணன்,
[263] சேமம் = நல்வாழ்வு, இன்பம், காவல்
[264] ரெம்ப = நிறைய, கூடுதலாக,
[265] வீடு எடுத்து = வீடு கட்டி

மரங்கள் தயாருடனே[266] அந்தப் படமாத்தூர்க் காடு வந்து, அதிவிரைவில் திரட்டியாய் மனையெடுத்து, அதிலே குடியாய் சென்றார், கிழவன்முதல் வந்து, அதிலிருந்து குமாரபட்டி என்று வருவோர் அது தெரிய சந்தோஷமாய் இருந்து, அந்த ஒன்பது பொன்குடத்தை தானே பதனமுடன்

ஏடு 129




சேகரித்துமே, அவர்கள் சிவல்பட்டிக் காட்டில் நம்மள் சீமான் உரைத்தது போல், பாகமுடன் பார்த்துவர, உவர்நிலங்கள் ரெம்பபாடு[267], சீரில்லாமல் இருப்பதறிந்து, நம்மள் ஆதிகிழவன் இதிலே பசுத்தொழுவை விருப்பமுடன் வைப்பது என்று, பசுத்தொழு ஒன்றிட்டு[268] வீரன் கிழவனுமே,




பாணிப்புடன்[269] முடித்து, எருக்கள் எல்லாம் சேர்க்க, பகவான் கிருபையினால், சாணி கொட்டப், பட்டி ஒன்றும் தயாரிப்பு[270] செய்து தானே நம்மள் கிழவனுந்தான், மருகன் பசுமேய்த்து, அந்த சிவல்பட்டிக்காட்டில் வந்து பசுவடைத்து வருவான், குமாரபட்டி கருப்பன் துணையென்று மறுநாள் பசுத் திறப்பான்[271]

ஏடு 130



அப்படியேத் தான் நடக்க, நம்மள் சிவல்பட்டி காட்டில் ஆன உவர் நிலத்தை, செப்பமுடனே சிலது கிரையமே[272] வாங்கி, நம்மள் சீமான் கிழவனுமே குமாரபட்டிதான் இருக்க, கருப்பய்யாக் கோனும் கூறுகிறான் கிழவனிடம், தாமே அனுதினமும் இங்கிருந்து தானே சாமம்[273] எந்த வேளையிலும்




பசுக்கள் அடைத்துவர, சிவல்ப்பட்டிப் பாதை பரிந்து, தினந்தினமும்

---


266 தயாருடனே = உடனே தயாரித்து, உடனே வீடுகட்டுவதற்கான மரங்களைத் தயார் செய்து கொண்டு,
267 ரெம்பபாடு = நிறைந்த சிரமம் (பாடுபட்டு = சிரமப்பட்டு)
268 ஒன்றிட்டு = ஒன்று இட்டு = ஒன்று வைத்து
269 பாணிப்பு = குருட்டுத்தனமாகக் கருதி, குத்துமதிப்பாகக் கருதி, மனதில் தோன்றியபடி கருதி
270 சாணி கொட்டப் பட்டி ஒன்று தயார் செய்து = சாணிப்பட்டி என்ற பெயரில் கிராமம் ஒன்று கண்டாக்கிபட்டிக்கு அருகே உள்ளது.
271 பசுத் திறப்பான் = பசுக்களைத் (தொழுவத்தி லிருந்து) திறந்து விடுவான்
272 கிரையம் = விலைக்கு
273 சாமம் = இரவு, நடுச்சாமம் = நள்ளிரவு

விசுவாசமாய் நடக்க, ராக்காலம்[274] எல்லாம் மிகுந்த இருட்டில் வர முடியாது, அதனாலே, சிவல்பட்டிக்கு அடுத்து, முல்லை வனக்காடு ஒன்று கடிய வனம் அதிலே இரண்டு மயில்தூரம்[275] கண்டேன், மைதானம் ஒன்று,

ஏடு 131




அவ்விடத்திலே குடியாய் மனைகட்டி,  அங்கே ஆட்சி புரிந்திடவே,
ஒவ்வும்[276] என உரைக்க, ஆதிகிழவன் ஓதுகிறான் அப்போது,
குமாரபட்டி வந்து நம்மள் எட்டுவருடம் கழித்தோம், சிலநாளை
சுமாராகவே, நமது காஞ்சிக்கருப்பனுக்குத் துலங்கவே ஆலயமாய்




ஒற்றைப் பனையடியில்[277] பீடம் அதுபோட்டு, உண்மை எனவே பணிந்து,
கற்றைச் சடையோன் அருளால், கருப்பனைப் போற்றிக் காரணமாய் நாம் இருந்தோம்,
உன்மனம் போல் அங்கு சென்றால், காஞ்சிக் கருப்பனுக்கு உபாயம் என்ன கூறுமென,
நன்மை இது சொல்லும் என்று, நம்மள் ஆதிகிழவன் நாடிமிகத்தான் கேட்க,

ஏடு 132



கருப்பய்யாக் கோன் மகிழ்ந்து, கிழவனுக்கும் அங்கே கனிவாய் உரைக்கலுற்றான்,
விருப்பமுடனே, நமது காஞ்சிவனத்தான் வீரன் பிடிமண் எடுத்து[278]
(அ)ங்கேதான் கொண்டு சென்று, கருப்பனுக்கு ஆங்கு ஓர் ஆலயமுமே அமைத்து
(ப)ங்கமில்லாது உம்முடைய நாமம் உள்ள ஊராய்[279], பரிந்து திருநாமம் இட்டு,




குடியாய் அதில் இருந்தால், குணமென்று சொல்ல, கோமான் சரியிடவே,

---


[274] ராக்காலம் = இரவுக்காலம்
[275] மயில்தூரம் = ஒரு மைல் (mile) தூரம் என்பது 1600 மீட்டர், ஒரு கி.மீ. தூரம் என்பது 1000 மீட்டர்,   (2 மைல் = 3+ கி.மீ.)
[276] ஒவ்வும் = ஒத்துவரும், ஏற்புடையதாய் இருக்கும்,
[277] பனையடியில் = பனை மரத்தின் அடியில், (கருப்பசாமி புதையல் காத்த இடத்தில்)
[278] பிடிமண் எடுத்து = சாமி இருக்கும் இடத்தில் இருந்து மண் எடுத்துச் சென்று வேறொரு இடத்தில் அந்த மண்ணை வைத்துக் கோயில்கட்டிச் சாமி கும்பிடுதல்
[279] உம்முடைய நாமம் உள்ள ஊராய் = உங்களுடைய பெயர் உடைய ஊராய்

படிமீதில் ஓர் நிமித்தம்[280] பார்த்துக், கிழவன் பகவான் கருப்பனுட
ஆலயத்தில் சென்று இவர்கள் பிடிமண் எடுத்து, அப்படியே எல்லோரும்
சீலமுடன் கொண்டு வந்து, அந்த முல்லைவனக் காட்டில் சீராய் துலங்கிடவே,
கருப்பனுட கோவில் என்றும், நம்மள் கிழவன் பெயரே கண்டாங்கிபட்டி[281] என்றும்,

ஏடு 133




விருப்பமுடன் நாமமிட்டு[282] மனையும் அங்கே கட்டி, வெகுவாய் இருக்கயிலே,
வருஷமது ஐந்தாச்சு, அந்த கண்டாங்கிபட்டியில் வந்தார் சிலர்குடியாய்,
கருப்பன் துணையதினால், நம்மள் கிழவனுடனே கன்னி உய்யவந்தாளும்
(வி)ருப்பமுடன் வெகுவாய் கருப்பய்யாக்கோனும் வீரன் பசுக்களுடன்
(இ)ருக்கும் அந்தக்காலம் அதில், மூன்று வருஷம் ஏகமழையில்லாமல்,




(பஞ்)சங்கள் வந்திடவே, காஞ்சிவனச்சாமி பார்த்துக் கிழவனையும்
(அ)ஞ்சாமல் என்மகனே, சிவல்ப்பட்டிக் காட்டில் அடர்ந்த உவர் நிலத்தில்,
(ச)ம்பா விதைத்தும் அங்கே, வரப்புகள் எல்லாம் தானே சரிப்படுத்தி,
நம்பும் குடிகளுக்கு படி அளக்க வேண்டும், நாடியது போலே,

ஏடு 134




செய்வாய் எனக்கூற, கருப்பன் உரைத்தபடி, நம்மள் சீமான் கிழவனுமே,
வையகத்திலே சிறந்த பசு தொழுவை நாடி, வாரினான் சாணமெல்லாம்,
(உ)வர் நிலத்திலே பரப்பி, வரப்புகளும் இட்டு, உடனே கிழவனுந்தான்
(தெய்வ)மே உருவாக வந்த காஞ்சி கருப்பன்தானே துணையென்று சொல்லி,




(விதை)த்தானே நெல்லை அள்ளி, கண்டமட்டும் தானே வீசினான் ஆசையுடன்,
(க)தைபோல் இருக்குது என்று, இந்த பஞ்சகாலத்தில் கதிர்விளைவது எப்படியோ
என்று நினைத்தே கிழவன், எருதுகளைக் கொண்டு ஏக மிதிக்கவிட்டு,
நன்றாய் உவர் நிலத்தில் சம்பா விதைத்தான், நல்லபலன் வேணும் என்று,

ஏடு 135

[280] நிமித்தம் = சகுனம்
[281] கண்டாங்கி = கண்ட + அங்கி, கண்டங்களை உடைய ஆடை என்று பொருளாகிறது. (கண்டாங்கிபட்டிச் சேலை என்பது ஒரு வகை நூல் சேலை. காரைக்குடி பகுதியில் இந்த வகையான சேலைகள் பிரபலம்.)
[282] நாமமிட்டு = பெயரிட்டு, பெயர் சூட்டி




சொல்லிக் கிழவனுந்தான் வீடு திரும்பத், துரையும் அந்தக் காஞ்சிவனம்,
சல்லியங்கள்[283] செய்யலாமல் அக்கினிமூலைதானே கரு எழுப்பி,
(வ)ருகுது கார்மேகம், அந்தக் கிழவன் வயலில் பொழியுதுவே மழையும்,
(திரு)மாலின் பாற்க்கடல்போல், சீமான் வயலில் திறமாய் பொழிந்திடவே,




(பதரிக்) கிழவனுமே இந்த வெள்ளம் அதில் நெல்லும் கரைபுரண்டு போகும் என்று,
...டன் செயல் என்று சொல்லி ஓடிவரும் போது, வயலுக்கு அப்புரத்தில்
கண்மாய் துலங்கிடவே, பிரமித்து, நம்மள் கருப்பனுடவேலையென்று,
உண்மை தெரியவென்று ஓடி வந்து பார்க்க, உடனே வயலை எல்லாம்,

ஏடு 136




(சு)ற்றிவரும்போது ஒரு திவலை நெல்கூட தூர்விலகாமல்,
(மு)ற்றி அது பூமியிலே முளைக்கிளம்பி நிற்க, பார்த்தான் அதிசயித்தான்,
(கருப்ப)ய்யன் தனை துதித்து, வீடு வந்து சேர்ந்தான், காரணத்தை யாவருக்கும்,
(விருப்ப)முடன் உரைக்க, அன்று பெய்த மாரி, வீரன் வயல் தவிர,




(பிற)ர் நிலங்களிலே துளி கூடத்தானே மழையும் பொழியவில்லை,
(மற்)றேர் கலை உணர்ந்தோர், நம்மள் கிழவன் வயலைப்பார்த்து கவலை மிகஅடைய,
மூன்று வருஷம் குடிகள் பஞ்சம் பொறுக்காமல், முற்றும் வயிர் பிழைக்க[284]
ஈன்றோர் பிதாவுடனே சிலதேசம் செல்ல, இந்த இடையன் குதுகுலுமாய்

ஏடு 137




(இ)ருப்பது என்னமோ புதுமை, தெய்வச் சகாயம் இருப்பதினாலே அவனும்
(வி)ருப்பமுடன் இப்படியே செய்தான், இதுவும் வீரன் திறமையினால்
(எ)ன்று அதிசயித்து, அந்த சிவல்பட்டி யுள்ளோர் இருக்கச், சில தினத்தில்,
நன்றாகவே கதிரும் அறுக்கும் பருவம் நாடியதினால்க், கிழவன்

[283] சல்லியம் = தொல்லை, சண்டை
[284] வயிறு பிழைக்க = பஞ்சத்தில் பிழைத்திருக்க




(கூ)லியாள் கொண்டு வந்து, கதிரை பிருத்துக்[285] கொண்டு வந்துமே அவனும்,
(கூ)லியர்கள் நெற்க்கதிரை சரியாய் அடித்து, வைக்கோல்தனை ஒதுக்கி,
(தூ)ற்றியே நெல்லை யெல்லாம், இந்த உலகளந்தநாதன் சுந்தரராஜன் மலைபோல்[286],
(கொ)ற்றிக்[287] குவியல் என திரட்டும் சமயம், ஏழைகளும் மற்றுமுள்ள

ஏடு 138




வருமையினால் வருந்தி பஞ்சமதில் மெலிந்தோர் வந்தே, அது சமயம்
சிறுமை அடைந்தோர்கள் எல்லாம் பெருங்கூட்டமாக திரண்டு வந்துமே அ(ங்கே)
நிற்கும் தருணமதில், நம்மள் காஞ்சிவனச்சாமி நிருபன்[288] மனமிரங்கி,
கற்க்கம்[289] என்று எண்ணாமல், இங்கே வந்தவர்க்கு எல்லாம் தானே ஒருமனமாய்,




(மரக்)கால்தனை எடுத்து ஒவ்வொருவருக்கும் வகையாய் ஒரு ,
(மர)க்கவே இப்பொழுது நெல்லை அளந்து திறமாய்க் கொடு,
(ச)ன்னதமாய்க் கிழவனிடம் நம்மள் காஞ்சிவனத்தான் தானுரைக்கவே கேட்டு,
மன்னன் வருதியைப் போல் நின்றோர்க்கும் போனோர்க்கும் மனதில் கனிவுடனே,

ஏடு 139




.........கண்மாயில் பால்சுரக்க, (கருப்பன்) துணையிரென்று
(நன்)றாகவே கிழவன் மரக்கால் எடுத்து, சிந்தாமல் நெல்லை அள்ளி,
தீரன் அளந்து அளந்து, நம்(மள்) ஆதி கிழவன் சீமானும் தான் போட,
(தீர)ன் செயலதுவால், நெல் குன்றாக விளைந்து கொண்டு தானிருக்க,



[285] பிருத்து ? = பிரித்து, அறுத்து
[286] சுந்தரராஜன் மலை = அழகர்மலை
[287] கொற்றி = கொட்டி, நெல்லைக் கொட்டி வைத்தல், (மழை கொட்டியது)
[288] நிருபன் = அரசன்,
[289] கற்க்கம் = கர்க்கம் = மருந்து உருண்டை

(ஊரார்) அதிசயித்து அந்த கண்டாங்கிக் கோனார்க்கு காசினியிலே...
(என்றும்) வேணும் யிவன் பு(த்திரரு)க்கு உயர்வு பெருகி என்றும்,
(பு)த்திர சந்தானமுடன் (பதினாறு)செல்வம்  புண்ணியங்கள் தான் பெருகி,
(வேந்)தன் கிருபையினால் சந்தோஷமாகி காசினியில் வாழ வென்றும்

ஏடு 140



(வாழ்த்தி) வரங்கொடுத்துப் போனார், வர(ட்சி) வருமை அது தீர்ந்தார்.
(அருளு)டைய காஞ்சிவனக் (கருப்)பன் தயவால்த்தானே, நம்மள் கிழவன் வ(கையறா)
(வளமா)க வாழ்ந்திருக்க (வா)ன் யிரங்கி சுபமாய் மழை பொழிந்து,
(பகவா)ன் கிருபையினால் க(ண்டாங்)கிபட்டி பாரில் நலம் பெருக.

## சுபம்

-------------------------------------------

## *இந்த ஏடு எழுதிய காலக் கணிப்பு*

திருவள்ளுவர் திருக்குறளை இயற்றிய காலம் வேறு, திருக்குறளை ஓலைச்சுவடியில் எழுதி வைத்த காலம் வேறு, ஓலைச்சுவடியிருந்த திருக்குறளை அச்சடித்துப் புத்தகமாக வெளியிட்ட காலம் வேறு. அதுபோல், இந்தச் சுவடியில் கூறப்பட்டுள்ள ஆதிகிழவனின் வாழ்க்கை வரலாறு நடைபெற்ற காலம் வேறு, ஆதிகிழவனின் வாழ்க்கை வரலாற்றை ஓலைச்சுவடியில் எழுதிவைத்த காலம் வேறு. இந்த இரண்டு காலத்தையும் கண்டறிய வேண்டியுள்ளது.

***காலக்கணிப்பு செய்வதில் சிக்கல் -*** ஆதிகிழவன் பஞ்சத்தின் காரணமாகக் காஞ்சிபுரத்திலிருந்து புறப்பட்டு, சிவகங்கை மாவட்டம் படமாத்தூர் வந்து சேர்ந்து, கண்டாங்கிபட்டி கிராமத்தை உருவாக்கி, இங்கே குடியாய் வாழ்ந்தது வரை இந்த ஏட்டில் கதையாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் எந்தவொரு நிகழ்ச்சியிலும், எந்தவொரு காலக்கணிப்பும் குறிப்பிட்டுக் கூறப்படவில்லை.

இந்த ஏட்டில் இடம் பெற்றுள்ள புதுக்கோட்டை மன்னர் “சாதி மறுப்புத் திருமணத்தை” ஆதரித்து, ஆதிகிழவனின் மகளைப் பெண்கேட்டு, ஆதிகிழவனின் இசைவுடன் திருமணமும் செய்துகொள்ள முயன்றுள்ளார். ஆனாலும் இந்தப் புதுக்கோட்டை மன்னரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. சேதுபதிமன்னர்,, சேதுபதிச்சீமை, இராமேநாட் ஜில்லா என்ற குறிப்புகள் உள்ளன. ஆனாலும் சேதுபதி மன்னரின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

இதனால், இந்தக் கதை நடைபெற்றது எப்போது? என்பது பற்றியோ, இந்த ஏட்டுச் சுவடி எப்போது எழுதப் பெற்றது? என்பது பற்றியோ எந்தவொரு குறிப்பும் இல்லை.

***காலக்கணிப்பிற்கு மூன்று சான்றுகள் உள்ளன -***

இந்தக் கதையில் இரண்டு பஞ்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பவுண்டு, ஜில்லா, போன்ற ஆங்கிலச் சொற்கள் இடம் பெற்றுள்ளன.

1) ***பஞ்சம் -*** இந்த ஏட்டுச் சுவடியில் சொல்லப்பட்டுள்ள கண்டாங்கிக் கோனாரின் வாழ்க்கை வரலாறு ஒரு பஞ்சத்தில் தொடங்கி மற்றொரு பஞ்சத்தில் முடிகிறது. இந்த ஏட்டில் உள்ள ஏடு எண் 16 ஆவது ஏட்டிலிருந்து தொடங்குகிறது. கதையின் தொடக்கமே “நாடு விளையாமல், கருப்பனுட சீமை நல்லமழை பெய்யாமல், பாடுபலனில்லாமல், காஞ்சி வன நாட்டில் பஞ்சம் அது வந்ததினால்,……” என்று பஞ்சம் பற்றிய வர்ணிப்புடன் தொடங்குகிறது. இதில் காலம் ஏதும் குறிப்பிடப்படவில்லை.. பஞ்சம் என்றவுடன் அனைவருக்கும் கி.பி. 1877-78 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ***“தாது வருடப் பஞ்சம்”*** நினைவிற்கு வரும். ஆனால் இந்த ஏட்டுச் சுவடியில், ஏடு எண் 96இல் ***பன்னிரண்டு வருடம் பஞ்சம்*** போனதால் ஆதிகிழவன் மாடுகளை மேய்த்துக்கொண்டு காஞ்சிபுரத்திலிருந்து புறப்பட்டுச் சிங்கம்புணரிக்கு வந்ததாக ஒரு குறிப்பு உள்ளது. ஏடு எண் 133இல் கண்டாங்கிபட்டியில் ***மூன்று வருடங்கள் பஞ்சம்*** ஏற்பட்டதாகவும், குடிமக்களில் பலர் புலம்பெயர்ந்து சென்றதாகவும் ஒரு குறிப்பு உள்ளது. இந்த இரண்டு பஞ்சங்களின் அடிப்படையிலேயே இந்தக் கதை நடைபெற்ற காலத்தைக் கணிக்க வேண்டியுள்ளது.

2) ***ஆங்கிலச் சொற்கள் -*** திருச்சியில் பவுண்டு (ஏடு எண் 23, 24, 26, 27) இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. ஜில்லா என்ற சொல் (ஏடு எண் 62)இல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவை இரண்டும் ஆங்கிலச் சொற்கள் என்ற காரணத்தினால், இந்தச் சுவடி எழுதப்பட்ட காலம் ஆங்கிலேயர் ஆட்சிக்காலமாக இருக்கலாம். ஆனால் ஆங்கிலத்தில் உள்ள சொற்கள் பலவும் பிறமொழிச் சொற்களாகும். எனவே பவுண்டு ஜில்லா ஆகிய இரண்டு சொற்களும் இராமநாதபுரம் சீமைக்கு ஆங்கிலேயர்கள் வந்தபின்னரே பயன்பாட்டிற்கு வந்தனவா? அல்லது ஆங்கிலேயர் இங்கே வருவதற்கு முன்பே இந்தச் சொற்கள் இங்கே வழக்கில் இருந்தனவா? என்பது கண்டறியப்பட வேண்டும்.

மேலும், திருச்சிராப்பள்ளியில் தண்டனைக்காக மாடுகளை அடைக்கும் பவுண்டு எந்த வருடம் முதல் செயல்படத் தொடங்கியது என்பது பற்றிய குறிப்பும், இராமநாதபுரம் ஜில்லா என்ற பெயர்ச்சொல் எந்த வருடத்திலிருந்து பயன்பாட்டிற்கு வந்தது? என்ற குறிப்பும் கிடைத்தால் மட்டுமே, இந்தச் சொற்களின் அடிப்படையில் இந்தச் சுவடி எழுதப்பட்ட காலத்தைக் கணித்துக் கூற இயலும்.

3) ***சிவகங்கை பற்றிய குறிப்பு ஏதும் இல்லை -*** சேதுபதி பற்றிச் சிறப்பித்துக்கூறும் இந்த ஏட்டில் எந்தவொரு இடத்திலும் சிவகங்கைச்சீமை பற்றிய குறிப்பு இல்லை. சிவகங்கைக்கு மிக அருகில் உள்ள படமாத்தூர், குமாரபட்டி கண்டாங்கிபட்டி முதலான கிராமங்கள் இந்த ஏட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் சிவகங்கைச் சீமையின் தலைநகரமாக விளங்கிய சிவகங்கை பற்றிய குறிப்பு ஏதும் இந்த ஏட்டில் இடம் பெறவில்லை.

மாடுகளை ஓட்டிக் கொண்டு புதுக்கோட்டையிலிருந்து புறப்பட்டு காளையார்கோயில் வந்து, அங்கிருந்து படமாத்தூர் சென்றதாக ஏடு எண் 63இல் பாடப் பெற்றுள்ளது. ஆனால் காளையார்கோயிலில் இருந்து படமாத்தூர் செல்வதானால் சிவகங்கை வழியாகத்தான் செல்ல முடியும். ஆனாலும் சிவகங்கை பற்றிய குறிப்பு ஏதும் இந்தச் சுவடியில் இடம் பெறவில்லை.

இதனால் ஆதிகிழவன் காஞ்சிபுரத்திலிருந்து புறப்பட்டு படமாத்தூர் வந்த காலத்தில் ***சிவகங்கை என்ற ஊர் உருவாகவில்லை*** என்று கருத வேண்டியுள்ளது.

***கிழவன்சேதுபதியும் ஆதிகிழவனும் -*** இராமநாதபுரச் சீமையை ஆண்ட மன்னன் ***"கிழவன் சேதுபதி"*** என்று அழைக்கப்பட்டுள்ளார். மற்றபிற மன்னர்கள் யாரும் கிழவன் என்ற அடைமொழியுடன் அழைக்கப்படவில்லை.

கிழவன் சேதுபதி போன்று, கண்டாங்கிக் கோனாரும் ***"ஆதிகிழவன்"*** என்று அழைக்கப்பட்டுள்ளார். இந்த ஏட்டின் தொடக்கத்தில் இருந்து கண்டாங்கிக் கோனார் என்ற இயற்பெயர் சுட்டிக்காட்டப்படாமல் ஆதிகிழவன் என்ற சிறப்புப் பெயரால் சுட்டிக்காட்டப்படுகிறார். ஏட்டின் இறுதிப் பாகத்தில் ஏடு எண் 132இல், ஆதிகிழவனின் பெயரை வைத்து கண்டாங்கிபட்டி கிராமம் புதிதாக உருவாக்கப்பட்டதாகக் குறிப்பு உள்ளது. கண்டாங்கிக்கோனார் என்ற இயற்பெயரைக் குறிப்பிடாமலும், கிழவன் என்று சொல்லாமலும், ஆதிகிழவன் என்றே அனைத்து இடங்களிலும் மிகவும் மரியாதை கொடுத்துக் கண்டாங்கிக் கோனார் குறிப்பிடப்பட்டுள்ள காரணத்தினால், கண்டாங்கிக் கோனார் வாழ்ந்த காலத்திற்கு பின்னர், பலதலைமுறைகள் ஆகிப் பல கிழவர்களுக்குப் பின்னாளில் வாழ்ந்த தலைமுறையினரால் இந்த ஏடு எழுதப்பட்டிருக்கலாம் என்று கருத வேண்டியுள்ளது.

***காலக்கணிப்பு முடிவுரை -***

சிவகங்கைச் சீமையை சசிவர்ண விஜயரகுநாத முத்துவடுகநாதப் பெரிய உடையாத்தேவர் (கி.பி.1749 - 1772) ஆண்டுள்ளார். இவர் இவரது *குருவான முனிவர் சாத்தப்பையா தியானம் செய்த இடத்திற்கு அருகிலிருந்த நீர் ஊற்றை விரிவு படுத்தி அதைப் பெரிய விசாலமான தெப்பக்குளமாக உருவாக்கினார் என்றும், சிவனது கங்கை இருந்த இடம் என்பதால் அந்த இடத்திற்குச் "சிவகங்கை" என்று பெயர் சூட்டினார் என்றும் சொல்கின்றனர். இதனடிப்படையில் அதாவது 1749ஆம் வருடத்திற்கு முன் நாலுகோட்டை, சோழபுரம், காளையார்கோயில் முதலான ஊர்களே இருந்துள்ளன. சிவகங்கை 1749ஆம் வருடத்திற்குப் பின்னரே உருவாகியுள்ளது என்று அறியமுடிகிறது. இந்தக் காரணத்தினால்தான் ஆதிகிழவன் காளையார்கோயிலில் இருந்து படமாத்தூர் செல்லும் வழியில் உள்ள சிவகங்கை பற்றி ஏதும் குறிப்பிடவில்லை என்று கருத வேண்டியுள்ளது.*

(1) சிவகங்கை உருவாகும் முன் இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் ***"கிழவன் சேதுபதி"*** ஆவார். சிவகங்கை குறிப்பிடப்படாத காரணத்திலும், கிழவன் சேதுபதி என்று மன்னர் பெருமையுடன் அழைக்கப்படுவது போன்று, கண்ணடாங்கிக் கோனாரும் ***"ஆதிகிழவன்"*** என்று பெருமையுடன்

அழைக்கப்பட்டுள்ள காரணத்தினாலும், கண்டாங்கிக் கோனார் வாழ்ந்த காலமும் கிழவன்சேதுபதியின் ஆட்சிக்காலமும் ஒன்றாக இருக்கலாம் என்று கருத வேண்டியுள்ளது.

(2) கி.பி.1710ஆம் ஆண்டுவரை கிழவன் சேதுபதி அவர்கள் இராமநாதபுரத்தை ஆட்சி செய்துள்ளார். அப்போது புதுக்கோட்டையை மன்னர் ***"இரகுநாதராய தொண்டைமான்" (கி.பி. 1686-1730)*** ஆண்டுள்ளார். இவரது சகோதரியை (காதலி நாச்சியார்) கிழவன்சேதுபதி திருமணம் செய்துள்ளார். இந்த உறவுமுறை காரணமாகப் புதுக்கோட்டை மன்னர் கண்டாங்கிக்கோனாரைத் தேடிப் படமாத்தூர் வந்தபோது, சேதுபதிமன்னரின் உதவியை நாடியிருக்கலாம் என்று கருதவேண்டியுள்ளது. மேலும், புதுக்கோட்டை அரசரும் மிகப்பெரிய படைபலத்துடன் இருந்தது போன்று ஏட்டில் வர்ணிப்பும் ஏதும் கூறப்படவில்ல. இதனால் இந்த ஏட்டில் குறிப்பிடப்படும் புதுக்கோட்டை மன்னர் மிகவும் சொற்பமான வீரர்களை மட்டும் வைத்துக் கொண்டு கிழவன்சேதுபதியின் கட்டளைக்கு உட்பட்டு புதுக்கோட்டையை அரசாண்டு வந்திருக்கலாம் என்று கருத வேண்டியுள்ளது.

(3) கி.பி. 1700 முதல் 1900 வரையிலான 200 வருட காலத்தில் ஏற்பட்ட பஞ்சங்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன. இவற்றில் கிழவன் சேதுபதியின் ஆட்சிக் காலத்தில் கி..பி. 1709ஆம் வருடத்தில் பெரும் பஞ்சமும் வெள்ளமும் ஏற்பட்டதாகக் குறிப்புகள் உள்ளன. இதனால் கிழவன்சேதுபதிக்கு அடுத்த அரசாண்ட மன்னர் விஜய ரகுநாத சேதுபதி ( கி.பி. 1710 - 1720) ஆட்சிக்காலத்தில் மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதாகக் குறிப்புகள் உள்ளன. ( Manonmaniam Sundaranar University, DDE, M.A. HISTORY - I YEAR, DKH11 : HISTORY OF TAMILNADU UPTO 1967 A.D பக்கம் 264)

1709ஆம் வருடப் பஞ்சத்திற்குப் பின்னர் சுமார் 72 வருடங்கள் கழித்து, 1781ஆம் வருடத்தில் மிகவும் கடுமையான பஞ்சம் ஒன்று ஏற்பட்டதாகவும், அப்போது விவசாயிகள் பல்வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்து சென்றார்கள் என்றும் குறிப்புகள் உள்ளன. (மேலது பக்கம் 309)

*இந்த ஏட்டில் உள்ள செய்திகளை வரலாற்று ஆசிரியர்கள் ஆய்ந்தறிந்து கண்டறிந்து கூறும் காலக்கணிப்பே சரியானதாக இருக்கும். இருப்பினும், புதுக்கோட்டை மற்றும் சேதுபதி மன்னர்களது ஆட்சிக்காலத்தின் அடிப்படையிலும், பஞ்சம் உண்டான காலத்தின் அடிப்படையிலும் கி.பி. 1709 ஆம் வருடத்தில் உண்டான பஞ்சத்தின்போது ஆதிகிழவன் என்ற கண்டாங்கிக் கோனார் காஞ்சிபுரத்திலிருந்து புலம் பெயர்ந்து வந்துள்ளார் என்றும், கி.பி. 1781வருடம் ஏற்பட்ட பஞ்சத்தின்போது கண்டாங்கிபட்டியில் இவரது வயலில் விளைந்த நெல்லை அளந்தளந்து தானம் செய்துள்ளார் என்றும் கூறலாம்.*

***கி.பி.1709 முதல் கி.பி.1781 முடிய***
***கண்டாங்கிக்கோனார் புலம்பெயர்ந்து வாழ்ந்த வரலாற்றை***
***இந்த ஏடு ஆவணப்படுத்தியுள்ளது எனக் கூறலாம்.***

காசிஸ்ரீ, முனைவர், நா.ரா.கி. காளைராசன்
நூலாசிரியர்.

----------------------------------------------------------------------------------------------------

***இணைப்பு -***
***1) இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களின் பெயர்ப்பட்டியல்***
***2) புதுக்கோட்டை மன்னர்களின் பெயர்ப்பட்டியல்***
***3) சிவகங்கைச் சீமை மன்னர்களின் பெயர்ப்பட்டியல்***
***4) பஞ்சம் ஏற்பட்ட வருடங்களின் பட்டியல்***

-----------------------------------------------------------------------------------------

## ***1) இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களின் பெயர்ப்பட்டியல்***

கிழவன் சேதுபதி என்ற ரெகுனாத சேதுபதி மன்னர், இராமநாதபுரத்தின் ஏழாவது அரசராக ஆட்சி புரிந்து வந்தார். ரெகுனாத சேதுபதியின் மகள் அகிலாண்டேஸ்வரி நாச்சியாரை, நாலுகோட்டை பெரிய உடைய தேவர் மகன் சசிவர்ன தேவர்க்கு மணம் முடித்து வைத்துள்ளார். சிவகங்கை சீமையை சசிவர்ன பெரிய உடைய தேவர் கி.பி. 1730 முதல் 1750 வரை ஆட்சி புரிந்தார்.

1. சடைக்கத் தேவராமய உடையான் சேதுபதி 1604 - 1621
2. கூத்தன் சேதுபதி 1621 - 1635
3. தனவாய் சேதுபதி 1635 - 1645
4. ரகுநாத சேதுபதியாகிய திருமலைச் சேதுபதி 1645 - 1670
5. ராசசூரிய சேதுபதி 1670 - 1673
6. ***கிழவன் சேதுபதி 1673 - 1708***
7. ***திருவுடையத் தேவர் சேதுபதி 1708 - 1723***
   (இவரது ஆட்சிக் காலத்தில் ***<u>1709இல் கடும் பஞ்சம்</u>*** ஏற்பட்டுள்ளது)
8. தண்டத் தேவர் 1724
9. பவானி சங்கரத் தேவர் 1723 - 1728
10. குமாரமுத்து விஜயரகுநாத சேதுபதி 1728 - 1734

........

23. ***பாஸ்கர சேதுபதி 1873 - 1903***
   (இவரது ஆட்சிக் காலத்தில் ***<u>1877 தாது வருடப் பஞ்சம்</u>*** ஏற்பட்டுள்ளது)
24. முத்துராமலிங்க சேதுபதி 1903 - 1931

......

-----------------------------------------------------------------------------------------

## ***<u>2) புதுக்கோட்டை தொண்டைமான் அரசர்கள்</u>***

1)முதல் அரசர் பச்சை தொண்டைமான் ஆவார்.
2) ஆவடிராய தொண்டைமான்
3) இவரது மகன் ***<u>இரகுநாதராய தொண்டைமான் (கி.பி. 1686-1730)</u>***
இவரது சகோதரி "காதலி நாச்சியாரை" இராமநாதபுரத்தை ஆண்ட விஜயரகுநாத கிழவன் சேதுபதி (கி.பி.1673-1710) திருமணம் செய்துகொண்டார்.
4) விஜயரகுநாத ராய தொண்டைமான் (கி.பி.1730-1769)
5) இராய ரகுநாத தொண்டைமான் (கி.பி.1769-1789)
6) விஜயரகுநாத தொண்டைமான் பகதூர் (கி.பி.1789-1807)
7) இராஜா விஜயரகுநாத ராய தொண்டைமான் பகதூர் (கி.பி.1807-1825)
8) ஹிஸ் எக்சலென்சி இராஜா ரகுநாத தொண்டைமான் பகதூர் 1825 - 1839
பிரிட்டீஷ் அரசு His Excellency என்ற பட்டம் அளித்தது.
9) ஹிஸ் எக்சலென்சி ஸ்ரீபிரகதம்பாதாஸ் இராஜா ராமச்சந்திர தொண்டைமான் பகதூர் 1839 - 1886
10) ஹிஸ் எக்சலென்சி ஸ்ரீ பிரகதம்பாதாஸ் இராஜா மார்த்தாண்ட பைரவ தொண்டைமான் பகதூர் ஜி.சி.ஐ.இ. 1886 - 1922. இவர் 11-வது வயதில் அரசரானார்.

------------------------------------------------------------------------------------------------------------

## ***<u>3) சிவகங்கைச் சீமை மன்னர்கள்</u>***

1. 1728 - 1749 - முத்து வீஜயரகுநாத சசிவர்ணத்தேவர்

2. 1749 - 1772 - சசிவர்ண விஜயரகுநாத முத்துவடுகநாதப்பெரிய உடையத்தேவர் *(சசிவர்ண தேவர் தனது குரு முனிவர் சாத்தப்பையா தியானம் செய்த இடத்திற்கு அருகிலிருந்த நீர் ஊற்றை விரிவு படுத்தி அதைப் பெரிய விசாலமான தெப்பக்குளமாக உருவாக்கியுள்ளார். அந்த இடமானது சிவனது கங்கை இருந்த இடம் பெயர் மாற்றம் பெற்று சிவகங்கை எனப் பெயர் பெற்றது. )*
3. 1780 - 1790 - வீரமங்கை ராணி வேலு நாச்சியார் முத்துவடுகநாத பெரிய உடையாத்தேவர்
4. 1790 - 1793 - வெள்ளச்சி நாச்சியார் வேலு நாச்சியாரின் மகள்
5. 1793 - 1801 - வேங்கை பெரிய உடையனத் தேவர், வெள்ளச்சி நாச்சியாரின் கணவர்
6. 1801 - 1829 - கௌரிவல்லப உடையணத்தேவர் மன்னர் முத்துவடுகநாத பெரிய உடையணத்தேவரின் உடன் பங்காளி ராணி வேலு நாச்சியாரின் தத்து மைந்தன்
7. 1829 - 1831 - உ.முத்துவடுகநாதத்வேர்
8. 1831 - 1841 - மு. போதகுருசாமித்தேவர்
9. 1841 - 1848 - போ. உடையணத்தேவர்
10. 1848 - 1863 - மு.போதகுருசாமித்தேவர்
11. 1863 - 1877 - ராணி காதமநாச்சியார் போதகுருசாமி
12. 1877 - முத்துவடுகநாதத்தேவர் (***1877 தாதுவருடப் பஞ்சம்*** ஏற்பட்டுள்ளது)
13. ***1878 - 1883 - துரைசிங்கராஜா***
14. 1883 - 1898 - து. உடையணராஜா

/… ….. ….. https://ta.wikipedia.org/s/40h

------------------------------------------------------------------

## ***4) பஞ்சம் ஏற்பட்ட வருடங்களின் பட்டியல் -***

***நல்லதங்காள்*** கதை பிரபலமான ஒரு சோகக் கதையாகும். மானாமதுரையில் தொடர்ந்து ***12 வருடங்கள் பஞ்சம்*** ஏற்பட்டு, உணவு இன்றி மக்கள் பலரும் மாண்டனர். ஆனால் நல்லதங்காள் வாழ்ந்த காலம் பற்றிய குறிப்பு ஏதும் கிடைக்கப் பெறவில்லை. https://ta.wikipedia.org/s/tg8

***கி.பி. 1396 முதல் கி.பி.1407 வரை 12 வருடங்கள் பஞ்சம்***
(த்வதாசவர்ஷ பஞ்சம்) டெக்கனின் துர்கா தேவி பஞ்சம். வாய்மொழிக்கதைகள் வழியாகச் சொல்லப்பட்டு வருகிறது. https://en.wikipedia.org/wiki/Famine_in_India#CITEREFCurreyHugo1984

***1702–1704 Famine*** in Deccan India இறப்பு 2,000,000 பேர். https://en.wikipedia.org/wiki/List_of_famines

***Manonmaniam Sundaranar University, DDE, M.A. HISTORY - I YEAR, DKH11 : HISTORY OF TAMILNADU UPTO 1967 A.D புத்தகத்தில் உள்ளபடி .....***

***1711ஆம் வருடம்*** கிழவன் சேதுபதி அவர்கள், புதுக்கோட்டை தொண்டைமான் சமஸ்தானத்தை உருவாக்கினார் (பக்கம் 57)

***1709 பஞ்சம் -*** விஜய ரகுநாத சேதுபதி: அவர் 1710 முதல் 1720 ஏ.டி. வரை ஆட்சியில் இருந்தார். ***பஞ்சம் மற்றும் வெள்ளம்*** காரணமாக இவரது ஆட்சிக்காலத்தில் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையில் இருந்துள்ளது. (பக்கம் 264)

***1781 பஞ்சம்*** இந்த பஞ்சம் 1784 வரை நீடித்தது. இது கடுமையான பஞ்சம். விவசாயிகள் பல்வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்தார். (பக்கம் 309)

***1790 பஞ்சம்.*** இந்தப் பஞ்சம் மிகவும் கொடூரமானது. இது *இரண்டு ஆண்டுகள் நீடித்தது.* வடக்கில் உள்ள மாவட்ட விவசாயிகளின் பெரும்பான்மை பாதிக்கப்பட்டனர். (பக்கம் எண் 310)

*18 ஆம் நூற்றாண்டின் இறுதியில்,* தமிழ்நாட்டின் தெற்கு மாவட்டங்கள் கடுமையாக அனுபவித்தன. உணவுக்கான பற்றாக்குறை. தெற்கு மாவட்டங்களான

<u>மதுரை, ராம்நாட், திண்டுக்கல் மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன.</u> பெரிய அளவில் <u>மக்கள் இடம் பெயர்ந்து சென்றனர்.</u> (பக்கம் 311)

***<u>1805 - 1807 பஞ்சம் -</u>***நெல்லூர், ஆர்காட், மதுரை, திண்டுக்கல், தஞ்சை, திருச்சி மாவட்டங்கள் இந்தப் பஞ்சத்தால் மிகவும் பாதிக்கப்பட்டன. பஞ்சம் மிகவும் கடுமையாக இருந்தது,

***<u>1811 ல் பஞ்சம் -</u>*** மதுரை மற்றும் தெற்கில், பஞ்சம் அவ்வளவு கடுமையானதல்ல. 1813 இல் மக்கள் பஞ்சத்திலிருந்து மீண்டனர்.

***<u>1823 இல் பஞ்சம் -</u>*** விவசாயிகள் நிறைய அவதிப்பட்டனர். பொருட்களின் விலைகள் மிக உயர்ந்தன. மரணம், உணவு பற்றாக்குறை காரணமாக. வறுமை காரணமாக, பெற்றோர்கள் <u>தங்கள் குழந்தைகளை அடிமைத்தனத்திற்கு விற்றனர்.</u>

***ராஜமுந்திரி பஞ்சம் - 1830,*** 1831, 1835, 1836 மற்றும் 1837 மற்றும் 1838 மற்றும் 1839 மற்றும் 1840 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பேரழிவுகளால் உணவு மற்றும் தண்ணீருக்கு கடுமையான பற்றாக்குறை இருந்தது. கிட்டத்தட்ட ஒன்றரை லட்சம் பேர் இந்த பஞ்சத்தால் பரிதாபமாக இறந்தார் (பக்கம் 312)

***குண்டூரில் பஞ்சம் - 1833*** ஆம் ஆண்டில், குண்டூரில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. எண்ணற்ற மக்களும் கால்நடைகளும் இறந்தன. ***<u>மக்களும் மதுரைக்கு தப்பி ஓடினர்.</u>*** (பக்கம் 312)

***<u>1876 . 1879 பஞ்சம் -</u> தாதுவருடப் பஞ்சம்.*** ஒரு பயங்கர பஞ்சம். ஏராளமான கிராம மக்கள் இடம்பெயர்ந்தனர். இந்த பஞ்சம் மூன்று ஆண்டுகள் நீடித்தது. ஆயிரக்கணக்கானோருக்கு இலங்கைக்கு குடிபெயர்ந்தனர். (பக்கம் 311).
https://ta.wikipedia.org/s/iys

இத்நப் பஞ்சகாலத்தில், இராமநாதபுரம் சமஸ்தானத்தை மாட்சிமை பொருந்திய "பாஸ்கர சேதுபதி" அவர்கள் 1873 முதல் 1903வரை ஆட்சி செய்துள்ளார்கள். புதுக்கோட்டையை சமஸ்தானத்தை மாட்சிமைபொருந்திய "ஸ்ரீ பிரகதம்பாதாஸ் இராஜா மார்த்தாண்ட பைரவ தொண்டைமான் பகதூர் ஜி.சி.ஐ.இ. அவர்கள் 1886 முதல் 1922வரை ஆட்சி செய்துள்ளார்கள்.

***<u>1892 பஞ்சம் -</u>*** பஞ்சத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் இறந்தனர் உணவு பற்றாக்குறை.

***<u>1900 பஞ்சம் -</u>***

***<u>(குறிப்பு -</u>*** மேலே குறிப்பிடப்பட்டுள்ள வருடங்கள் யாவும் மிகவும் துள்ளிதமானவை அல்ல)

---

***<u>நன்றி</u> -*** இந்தப் புத்தகத்தின் தட்டச்சுப் பிழைகளைத் திருத்திக் கொடுத்த அழகப்பா பல்கலைக்கழக உதவியாளர் திருமதி இரா. பிரபாவதி சிவராமபாரதி அவர்களுக்கு நன்றி. அவருக்கு எனது வாழ்த்துகள்.

அன்பன்
காசிஶ்ரீ, முனைவர், நா.ரா.கி. காளைராசன்,
(மேனாள் துணைப்பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி)
28 அ, குருநாதர்கோயில்தெரு, கோட்டையூர் – 630 106.
கைபேசி: 824 826 6418, புலனம்: 9443501912, முகநூல்: kalairajan.krishnan,
மின்னஞ்சல்: kalairajan26@gmail.com

## பின்னிணைப்பு

## *நூலாசிரியர் குறிப்பு*

அருள்மிகு பூரணை புஷ்கலை உடனாய புலிக்கரை ஐயனார் துணை

காசிஸ்ரீ, முனைவர், நா.ரா.கி. காளைராசன்*,*



28A, குருநாதர்கோயில் தெரு, கோட்டையூர் - 630 106
தொடர்பு எண் - 94435 01912, 824 826 6418,
மின்னஞ்சல் - kalairajan26@gmail.com
பிறந்த நாள் - 26.10.1957
பூர்வீகம் – தமராக்கி, சிவகங்கை மாவட்டம்.
பிறந்த ஊர் – காளையார்கோயில், சிவகங்கை மாவட்டம்
வளர்ந்த ஊர் – திருப்பூவணம், சிவகங்கை மாவட்டம்
முன்னோர் புலம் பெயர்ந்த ஊர் – மாரநாடு கிராமம், சிவகங்கை மாவட்டம்.
முன்னோர் புலம் பெயர்ந்த நாடு – மயன்மார் (பர்மா), யங்கோன் (ரங்கோன்) மற்றும் யோராஞ்சி கிராமம் (தட்டோன் மாவட்டம் இன்னின் (Yinnyein) கிராமம் அருகில்),

கல்வித் தகுதி
B.Sc. (Mathematics), மதுரை தியாகராசர் கல்லூரி,
M.A., (Tamil), அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
M.Phil., (Tamil), திருப்பூவணநாதர் கோயில் ஆய்வு, அழகப்பா பல்கலைக்கழகம்.
Ph.D., (Tamil), திருப்பூவணப் புராணம் ஆய்வு, அழகப்பா பல்கலைக்கழகம்.
அலுவலகப் பணி - துணைப்பதிவாளர், (விருப்பப் பணிஓய்வு நாள் 30.04.2015), அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

காசி பாதயாத்திரை - வலையபட்டி சித்தர் காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்கள் அழைத்துச் சென்ற பாதயாத்திரைகள்.
(1) இராமேச்சுரம் காசி பாதயாத்திரை (காசிஸ்ரீ பட்டம்). 24.05.2014 அன்று இராமேச்சுரம் கோயிலில் இருந்து புறப்பட்டு 12.09.2014 அன்று காசி விசுவநாதர் கோயில் வழிபாடு. 110 நாட்கள் நடைப் பயணம்.

காசிஸ்ரீ பட்டம் - யாத்திரையின் நிறைவாக புரட்டாசி 3 (19.09.2014) வெள்ளிக் கிழமையன்று காசிதேவஸ்தான அலுவலகத்தில், காசி தேவஸ்தான அலுவலகத்தின் நிர்வாக முதன்மைச் செயல்அலுவலர் அவர்களால் ***"காசி ஸ்ரீ" பட்டம்*** வழங்கப் பெற்றது. (2) 20.04.2015 அன்று இராமேச்சுரத்தில் இருந்து புறப்பட்டு காசி பாதயாத்திரை சென்று கொண்டிருந்தார். காரைக்குடியிலிருந்து நாக்பூருக்குத் தொடர்வண்டியில் பயணம் செய்து, 19.07.2015 அன்று நாக்பூருக்குச் சென்றடைந்து இந்தப் பாதயாத்திரையில் சேர்ந்து கொண்டு காசி பாதயாத்திரை. 25.08.2015 அன்று காசியை அடைந்து விசுவநாதர் கோயில் வழிபாடு. 38 நாட்கள் நடைப் பயணம்.

அறுபடைவீடு பாதயாத்திரை - வலையபட்டி சித்தர் காசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்கள் அழைத்துச் சென்ற பாதயாத்திரை. பிள்ளையார்பட்டியிலிருந்து புறப்பட்டு, பழமுதிர்சோலை, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருச்செந்தூர் அறுபடைவீடு பாதயாத்திரை –

1) 53 நாட்கள் (07.04.2016 முதல் 30.05.2016 முடிய) 1126 கி.மீ. நடைப் பயணம்,
2) 60 நாட்கள் (08.06.2017 முதல் 06.08.2017 முடிய) 1126 கி.மீ. நடைப் பயணம்.

மதுரை மானாமதுரை ஆன்மிகப் பாத யாத்திரைகள் - (1) மானாமதுரை வேதியரேந்தல் விலக்கு அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி கோயில் சுவாமிஜி அவர்கள் தலைமையில், மதுரையிலிருந்து வேதியரேந்தல் விலக்கு அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி கோயிலுக்குப் பாதயாத்திரை 3 நாட்கள் (2014, மாசி பூரணை) .
(2) மதுரையிலிருந்து வேதியரேந்தல் விலக்கு அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி கோயிலுக்குப் பாதயாத்திரை 3 நாட்கள் (2015, மாசி பூரணை).

## ஆன்மிகப் பணி

1) திருப்பூவணம் கோயிலில் ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளையின் இணைச்செயலாளர்,
2) திருப்பூவணம் ஆடித்தபசு மண்டபம் திருப்பணி ஒருங்கிணைப்பாளர்,
3) சக்குடி கோயில் புனர்நிர்மாணம் துவக்கிடத் தூண்டுதலான பணிகள் செய்தமை.
4) *ஆராய்ச்சி அமைப்பாளர், திருவிளையாடற் புராண ஆராய்ச்சி மையம், மதுரை*

## எழுதி வெளியிட்டுள்ள நூல்கள்




1) திருப்பூவணக் காசி - திருப்பூவணம் திருக்கோயில் அமைப்பும் சிறப்பும் மற்றும் திருக்கோயில் தொடர்பான பாடல்கள், திருப்பூவணமானது எவ்வாறு காசியிலும் சிறந்தது என்பதற்கான விளக்கங்கள் உள்ளன. இந்நூல் திருப்பதி தேவஸ்தானத்தின் நிதியுதவியுடன் அச்சிடப்பெற்று 24-09-2007 அன்று திருப்பூவணம் கோயிலில் தவத்திரு குன்றக்குடிப் பொன்னம்பல அடிகளார் அவர்களால், மானாமதுரை வேதியரேந்தல் விலக்கு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி கோயில் சுவாமிஜி ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர சுவாமிகள் முன்னிலையில் வெளியிடப்பெற்றது.

2) திருப்பூவணப் புராணம் - 1620 ஆம் ஆண்டு தமிழில் மொழிபெயர்த்துப் பாடப் பெற்ற திருப்பூவணப் புராணத்தைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இந்நூல் திருப்பதி தேவஸ்தானத்தின் நிதியுதவி பெற்று அச்சிடப்பட்டு 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் நாள் (15.03.2009) அன்று திருப்பூவணம் கோயிலில் மானாமதுரை வேதியரேந்தல் விலக்கு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி கோயில் சுவாமிஜி ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர சுவாமி அவர்களால் வெளியிடப் பெற்றது. ஐயா பட்டமுத்து அவர்கள் முதற்ப் பிரதியைப் பெற்றுக் கொள்கிறார்.



இந்நூலாசிரியரின் இணைய நண்பர் திரு.சீறினிவாசன் அவர்களது பெருமுயற்சியால் https://tamil.pratilipi.com/story/திருப்பூவணப்-புராணம்-lphz8cjwodvi என்ற இணையதளத்தில் திருப்பூவணப் புராணம் (thirupoovana-puraanam) வெளியிடப்பெற்றுள்ளது.

3) பொழில் திகழும் பூவணம்- திருப்பூவணம் தொடர்பான அனைத்து விபரங்களையும் தொகுத்து திருப்பூவணம் கோட்டை வழக்கறிஞரும், பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளையின் மேனாள் செயலாளருமான திரு.சண்முகநாதன் அவர்களது பொருளுதவியுடன் இந்நூல் சிறு கையேடாக வெளியிடப் பெற்றுள்ளது.

4) காளையார்கோயில் தலபுராணம் (கதைச்சுருக்கம்).



காளையார்கோயில் தலபுராணம் பங்குனி 13 (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பெற்றது. தேவகோட்டை ஜமீன்தார் அள.அரு.சோம.நாராயணன் செட்டியார் அவர்கள் தலைமை தாங்கினார். ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர சுவாமி அவர்கள் மற்றும் ஸ்ரீகாசிஸ்ரீ பச்சைக்காவடி அவர்கள் முன்னிலை வகித்தனர். தேவகோட்டை இலக்கியமேகம் ஸ்ரீனிவாசன் அவர்கள் நூலை அறிமுகம் செய்தார். ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளைத் தலைவர் தேவகோட்டை பேராசிரியர் இராம. திண்ணப்பன் அவர்கள் நூலை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். காளையார்கோயில் பரம்பரை ஸ்தானிகம் திரு. காளீசுவர குருக்கள் அவர்கள் நூலைப் பெற்றுக் கொண்டு வாழ்த்துரை வழங்கினார். அவரைத் தொடர்ந்து தேவகோட்டை உ.மு.பழ.ராம.பழ. சோமசுந்தரம் செட்டியார் அவர்களும், காசிஸ்ரீ சின்னக்கருப்பன் செட்டியார் அவர்களும், சென்னை உமாபதிப்பகம் திரு.இராம. லெட்சுமணன் செட்டியார் அவர்களும் மற்றும் திருக்கானப்பேர் அன்பர் குழுவின் தலைவர் பாஸ்கரன் அவர்களும், செயல்தலைவர் வெல்டிங் ஏ.கண்ணன் அவர்களும், சிவனடியார் கா. தவமணி அவர்களும், சிவகங்கை ஈசாயோகா மையம் திரு.மாயன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினர். திருக்கானப்பேர் சூர்யா கண்ஸ்ட்ரக்சன்ஸ் டி.என். கருணாநிதி அவர்கள் நன்றி கூறினார்.

5) *கள்ளழகர் வரலாறும், சித்திரைத் திருவிழா நேரடி வர்ணிப்பும் (ஓலைச்சுவடியில் உள்ளபடி)*



“கள்ளழகர் வரலாறும், சித்திரைத் திருவிழா நேரடி வர்ணிப்பும் - மின்னூல்” பங்குனி 4 (17 மார்ச் 2021), புதன்கிழமை, காலை 10.30 மணிக்கு, அழகப்பா பல்கலைக் கழகக் கருத்தரங்கக்கூடத்தில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களால் வெளியிடப்பட்டது. மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் நா. இராஜேந்திரன் அவர்கள் மின்னூலைப் பெற்றுக் கொண்டு தலைமையுரை வழங்கினார்.

## 6) எழுத்தில், பிழைத்திருத்தத்தில், அச்சில் உள்ள நூல்கள்

1) திருப்பூவண நாதருலா (மூலமும் உரையும்), 2) திருஆப்புடையார் புராணம், 3) காளையார்கோயில் புராணம் (மூலமும் உரையும்), 4) காளையார்கோயில் கல்வெட்டுகள், 5) திருவாடானைப் புராணம், 6) சூரைமாநகர் புராணம் (மூலமும் உரையும்), 7) மருதூர் அந்தாதி (ஓலைச் சுவடியில் உள்ளபடி). 8) உலகம் உருவானது எப்படி? கடல்கொண்ட குமரி - கங்கன் கங்கை கடல்வெள்ளம், புவியியல் புத்தகம். 9)நாட்டரசன்கோட்டை ஸ்ரீ கண்ணுடையம்மன் பேரில் களியாட்ட மகத்துவச் சிந்து (1908)

## ஒலிக் குறுந்தகடுகள் வெளியீடு .



திருப்பூவணப் புராணம் ஒலிப்பதிவு குறுந்தகடு வெளியிடுதல்
வேதியரேந்தல் விலக்கு அருள்மிகு ப்ரித்யங்கிராதேவி கோயில் சுவாமிஜி
அவர்கள் வெளியிட, காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூரியின் மேனாள்
முதல்வர் முனைவர் நா.வள்ளி அவர்கள் பெற்றுக் கொள்கிறார்.



சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் மேலாளர் திரு. இளங்கோ
முன்னிலையில், பேராசிரியர் இராம.திண்ணப்பன் செட்டியார்
அவர்களிடமிருந்து, திருப்பூவணம் பதிகங்களை ஓதுவார் திரு. முத்துக்குமார்
அவர்களது குழுவினருடன் சேர்ந்து பாடிய ஒலிப்பதிவு குறுந்தகட்டைத்
திருக்கோயில் கண்காணிப்பாளர் திரு. செந்தில் அவர்கள் பெற்றுக் கொள்கிறார்.

திருப்பூவணம் தேவாரப்பாடல்கள் அடங்கிய ஒலிக்குறுந்தகடும், திருப்பூவணப் புராணக் கதைகள் அடங்கிய குறுந்தகடும் என இரண்டு குறுந்தகடுகள் இந்நூலாசிரியரால் வெளியிடப் பெற்றுள்ளன.


கட்டுரைகள் - முனைவர் கி. காளைராசன் அவர்களது படைப்புகளை ஆன்மிகம், ஆன்மிக அறிவியல் மற்றும் திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகள் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவருடைய கட்டுரைகள் தினபூமி, தினமலர், மஞ்சரி, தமிழ் மாருதம், செந்தமிழ்ச் செல்வி, ஓம்சக்தி, மெய்கண்டார், கண்ணியம் ஆகிய இதழ்களில் வெளிவந்துள்ளன.
சமீபத்தில் வெளியான கட்டுரை - “கீழடியில் கிடைத்தனவும், கிடைக்காதனவும்” (தினமலர் 18.08.2020)

ஆன்மிகக் கட்டுரைகள் - 1) “ஐயாவிடம் சொல்லிவிட்டேன் அவர் பார்த்துக்கொள்வார்” காரைக்குடி-கோட்டையூர் அருகில் உள்ள வேலங்குடி கிராமத்தில் வீற்றிருந்து அருளும் சொற்கேட்ட விநாயகரின் திருவருள் பற்றியது.
2) “என்பிழை பொறுப்பாய் எம்மானே” திருப்பூவணத்தில் சிவபெருமான் பார்வதி தேவிக்கு வரம் அருளியது
3) “பாவம் போக்கும் பூவணம்” திருப்பூவணத் திருத்தலத்தின் பெருமைகள் குறித்து எழுதப் பெற்றது.
4) “சித்தர் வடிவில் சிவபெருமான்” 36ஆவது திருவிளையாடற் புராணம் - சித்தர் வடிவில் சிவபெருமான் திருப்பூவணத்தில் எழுந்தருளி இரசவாதம் செய்தருளியது.
5) “ஆற்றின் குறுக்கே 1008 லிங்கம்” திருப்பூவணத்தில் திருக்கோயில் எதிரே ஓடும் வைகை ஆற்றில் லிங்கங்கள் புதையுண்டிருப்பது பற்றிய கட்டுரை
6) “கல்லா? கடவுளா? ” கல்லால் ஆன வடிவங்கள் எப்படிக் கடவுள் போன்று செயல்பட முடியும் என்பதற்கான விளக்கம்
7) “சாமி என்ன சாப்பிடவா செய்கிறார்? ” கடவுளுக்குப் படைக்கப்படுபவை அவரை எவ்வாறு சென்றடைகின்றன என்பதற்கான விளக்கம்

ஆன்மிக அறிவியல் கட்டுரைகள் - 8) “சிவனும் பெருமாளும் ACயும் DCயும்” (இறைவடிவங்களும் மின்சாரத்தின் வடிவங்களும் ஒன்றாய் உள்ளன என்று விளக்கும் கட்டுரை).
9) “ஆடல்வல்லானே அறிவியல் இறைவன் (தனி ஊசல் விதிகளுக்கு ஏற்ப ஆடல்வல்லானின் (நடராசரின்) ஆட்டம் உள்ளது” என்ற விளக்கக் கட்டுரை)
10) “விஞ்ஞானத் தொலைகாட்சிப்பெட்டியும் மெய்ஞ்ஞானக் கோயில்களும்” - தொலைக்காட்சிப் பெட்டியில் உள்ள காட்சிக் குழாயின் (Picture Tube) வடிவமும் செயலும் நடராசரின் வடிவத்துடனும் செயலுடனும் ஒத்து இருப்பதை விளக்கும் கட்டுரை.
11) “மதுரைக்கு வந்த சுனாமி” - பிரளயகாலத்தில் சுனாமி ஏற்பட்டு நான்கு முறை மதுரைக்கு வந்துள்ளது என்பதைத் திருவிளையாடற் புராணம் கொண்டு விளக்கும் கட்டுரை.
12) “ஆனை முகத்தானே(னோ) ஆதிபகவன்” - முதற் குறளில் குறிப்பிடப்பெற்றுள்ள "ஆதிபகவன்" என்பது விநாயகப் பெருமானையே குறிக்கும் என்பது பற்றியது.


திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகள்
13) “வள்ளுவரும் வாஸ்துவும்” திருக்குறளின் பாயிர அதிகார அமைப்பு முறையானது வாஸ்து இலக்கணப்படி உள்ளது என்பதை விளக்கும் கட்டுரை


| வரிசைஎண் | திசை | திசை அதிபதி | குறள் அதிகாரம் |
|---|---|---|---|
| 1. | கிழக்கு | இந்திரன் | கடவுள் வாழ்த்து |
| 2. | மேற்கு | வருணன் | வான் சிறப்பு |
| 3. | தெற்கு | எமன் | நீத்தார் பெருமை |
| 4. | வடக்கு | (குரு)குபேரன் | அறன் வலியுறுத்தல் |




14) “திசைதெய்வங்களைத் தொழும் திருவள்ளுவர்” திருக்குறளின் முதல் நான்கு அதிகாரங்களும் திசை தெய்வங்களை வணங்கி எழுதப்பெற்றுள்ளன என்பதை விளக்கும் கட்டுரை.
15) “குறளிலும் சோதிடம்” இராகு கேது இவற்றின் சோதிட அமைப்பில் ஐந்தாவது . குறள் எழுதப்பட்டுள்ளது என்பதை விளக்கும் கட்டுரை
16) “திருக்குறளில் வேண்டுதல் வேண்டாமை இல்லாதவர் யார்?” என்பது பற்றிய விளக்கம்
17) “குறள் கூறும் இறைவன்” பத்தாவது குறளில் கூறப்பெற்றுள்ள இறைவன் அனந்த சயனப் பெருமாளாகும்.
18) “அமரருளும் ஆரிருளும்” குறள் 121 பற்றிய புதிய சிந்தனை விளக்கம்.
19) “தெய்வந் தொழாள்? ” குறள் 55 பற்றிய புதிய சிந்தனை விளக்கம்.

*புவியியல் கட்டுரைகள்*










1. கங்கன் என்ற 2000 கி.மீ. விட்டம் கொண்ட நெருப்பு விண்கோள் பூமியில் மோதிப் பூமியைத் துளைத்துப் பூமியின் உள்ளே சென்றதால் இமயமலை (Rim) உருவாகி உள்ளது !
2. கங்கன் என்ற விண்கோள் பூமியில் மோதிப் பூமியைத் துளைத்து உள்ளே சென்றபோது ஏற்பட்ட அதிர்வினால் பூமியின் சுமார் 75% சிதறிட, மீதமுள்ள 25% மேற்பரப்பு கண்டங்களாகப் பிளவுபட்டு உள்ளது.
3. கங்கன் என்ற விண்கோள் பூமியில் மோதிப் பூமியைத் துளைத்து உள்ளே சென்றபோது ஏற்பட்ட தாக்கத்தினால் பூமியின் மறுபக்கம் தரைப்பகுதியைக் கொண்ட கண்டங்கள் ஏதும் இல்லாமல் போனது. எரிமலைத் தொடர்கள் (Ring of Fire) உருவாகியுள்ளது.
4. கங்கன் பூமியில் மோதி இமயமலை உருவாகும்போது தெறித்து விழுந்த பாறைக் குழம்புகள் இறுகித் திருப்பரங்குன்றம், திருமயம், திருச்சி, திண்டுக்கல் முதலான கிரானைட் குன்றுகளாக உள்ளன.
5. கங்கன் பூமிக்குள் துளைத்துச் சென்ற பின்னர் பிதுங்கி வெளியே வந்த பாறைக் குழம்புகள் இறுகி ஆல்ப்ஸ்மலை, மேற்குத் தொடர்ச்சி மலை முதலான நீண்டமலைத் தொடர்கள் உருவாகியுள்ளன. இதனால் கண்டங்கள் உருவாகிக் கண்டப்பெயர்ச்சி ஏற்பட்டுள்ளது.
6. பூமியின் நடுப்பகுதியில் கங்கன் இன்றும் தீப்பிளம்பாக உள்ளது.





2000 கி.மீ. விட்டம் கொண்ட கங்கன் பூமியில் மோதிப் பூமியின் மையக்கருவாக உள்ளது. கங்கனின் நிறைக்கு (Mass)ச் சமமான நிறையுள்ள பூமியின் மறுபகுதி பிய்த்து எறியப்பட்டுச் சந்திரனாக உருவாகியுள்ளது.


Ganga Puranam Theory :
Ganga, a celestial salt ice water planet was attracted by the earth and that was collided.That place became as Takalamakan Desert.
kalairajan26@gmail.com



Ganga
Himalaya
Ganga Puranam Theory :
Ganga, a celestial salt ice water planet hited on earth. That place was became Takalamakan Desert.
kalairajan26@gmail.com


Ganga Puranam Theory :
The celestial ice water planet fall on earth.
That place became as taklamakan desert. Ganga's water drilled the earth's surface. and came out at Mariana Trench. That's why takalamakan desert and Mariana trench are very deepest.
kalairajan26@gmail.com
17 Sep 2017
Google
IBCAO, Data SIO, NOAA, U.S. Na... 13°47'02"N 110°59'11"E 21,116 km


Ganga Puranam Theory :
Ganga was a celestial sedimentary water ice planet. It was attracted by the earth and fall on at the place of takalamakan desert.
When its water flowed on earth, the colluvium & alluvium formed Thailand, Indonesia and Japan landscapes.
kalairajan26@gmail.com
Google
IBCAO, Data SIO, NOAA, U.S. Na... 13°47'02"N 110°59'11"E 21,116 km




1) கங்கை என்ற விண்பனி நீர்க்கோள் பூமியில் இறங்கியுள்ளது. அது இறங்கும் போது காற்றுமண்டலத்தில் மோதி எரிந்துள்ளது. இவ்வாறு கங்கையில் இருந்த மூலக்கூறுகள் எரிந்து விழுந்த இடங்கள் பூமியில் மிகப்பெரிய பாலைவனங்களாக மாறியுள்ளன.
2) கங்கை என்ற விண்பனி நீர்க்கோள் பூமியில் இமயமலைப் பள்ளத்தாக்கில் (Rim) இறங்கிப் பூமியைத் துளைத்துச் சென்ற இடமே தக்களமேகன் பாலைவனமாக (Taklamakan desert ) மாறியுள்ளது !
3) கங்கை என்ற விண்பனி நீர்க்கோள் பூமியில் இமயமலைப் பகுதியில் இறங்கிப் பூமியைத் துளைத்துச் சென்று தண்ணீர் வெளியேறிய இடமே மெரினா ஆழ்கடல் (Mariana Trench) பகுதியாக உள்ளது.
4) கங்கையில் இருந்த தண்ணீரும் சேறும் சகதியும் பாய்ந்தோடிப் படிந்த காரணத்தினால் இந்தோனேசியா நிலத்திட்டு உருவாகியுள்ளது.
5) கங்கையில் இருந்த சேறும் சகதியும் சேர்ந்து படிந்து beding rocks உலககெங்கும் உருவாகியுள்ளன.
6) கங்கைளில் இருந்த சேறும் சகதியும் படிந்து உருவான நிலத்திட்டுகளில் உள்ள default திட்டுக்கள் புரண்டு விழுவதால் நிலநடுக்கமும் சுனாமியும் உண்டாகின்றன.




1) மதுரைக்கு வந்த சுனாமி !
2) கடல்கோளால் உண்டானது நாகமலை !
3) கீழடி அழிந்தது சுனாமியினாலா?
4) விருப்பாச்சிப் பாறைகள் கடல்கோளால் உருவானவையா?
5) அழகர்மலையில் உள்ளது கல்மரமா?
6) சிவகளை மலைத்தொடர் கடல்கோளால் உருவானதா?
7) எழுகடல்தெரு வரை கடலேழும் பொங்கி வந்துள்ளனவா?
8) கொடைக்கானல் மலைமேல் உள்ள பொக்குப் பாறைகள் சுனாமியினால் உருவானவையா?
9) மொரிசியசு தீவு பண்டைய கடல்கொண்ட மதுரையா?
10) டிகோகார்சிகா தீவு பண்டைய தமிழரின் கபாடபுரமா?

முனைவர் கி.காளைராசன் அவர்களது பதிவுகளைக் கீழ்க்கண்ட இணைய வலைத்தளங்களில் காணலாம்.

## இணையப் பதிப்புகள்

1) https://tamil.pratilipi.com/story/திருப்பூவணப்-புராணம்-lphz8cjwodvi
2) http://freetamilebooks.com/ebooks/kaalaiyar-koil-puranam-short-version/
https://thirukkural-kalairajan.blogspot.com/
https://theory-of-tsunamis-kalairajan.blogspot.com/
https://letters-kalairajan.blogspot.com/
https://books-kalairajan.blogspot.com/
https://publications-kalairajan.blogspot.com/
https://kalairajan26.blogspot.com/
https://kasi-pathayathrai-kalairajan.blogspot.com/
https://kaalaiyarkovil-kalairajan.blogspot.com/
https://thiruppuvanam-kalairajan.blogspot.com/
https://thiruvadanai-puranam-kalairajan.blogspot.com/
https://pulikkarai-iyanar-kalairajan.blogspot.com/
https://temples-kalairajan.blogspot.com/
https://soundcloud.com/kalairajan-krishnan/



***திருப்பூவணத்தில் அன்னதானம் செய்வோம் -*** *முடியுடை மூவேந்தரும் ஒன்றாகச் சேர்ந்து வழிபட்ட திருத்தலம் இது.* மூவர் தேவாரமும் பெற்ற பாண்டிய நாட்டுத் திருத்தலம் இது ஒன்றே ஆகும். திருஞானசம்பந்தருக்கு வைகை ஆற்று மணல்கள் எல்லாம் சிவலிங்கங்களாகக் காட்சியளித்தன. எனவே திருஞானசம்பந்தர் வைகை ஆற்றின் வடகரையில் நின்றபடியே "தென்திருப்பூவணமே" என்று முடியும் பதிகத்தைப் பாடி வணங்கினார். திருப்பூவணநாதர் அகம் மகிழ்ந்து, நந்தியைச் சாய்ந்திருக்கச் சொல்லித் திருஞானசம்பந்தருக்குக் காட்சி அருளினார். திருப்பூவணத்தில் நந்தி மறைக்காது. திருப்பூவணம் ***"காசியை விட வீசம் கூட"*** எனப் புராணம் குறிப்பிடுகிறது. ***"திருப்பூவணக்காசி"***யில் அன்னதானம் இடுவது காசியில் அன்னதானம் செய்வதை விடச் சிறந்தது.

தருமஞ்ஞன் அவனுடைய பிதுர்கள் முத்தியடைய வேண்டியத் திருப்பூவணத்தில் அன்னதானம் செய்தான். அவன் கொண்டுவந்திருந்த அஸ்திக் கலயத்தில் இருந்த எலும்பு திருப்பூவணத்தில் பூவாக மாறியது. ***"எலும்பு பூவாக மாறிய திருத்தலம்"*** திருப்பூவணம் ஆகும்.

சுச்சோதி என்ற வடநாட்டு அரசன் அவனுடைய பிதுர்கள் முத்தியடைய வேண்டித் திருப்பூவணத்தில் அன்னதானம் செய்தான். அவனது முன்னோர்கள் நேரில் தோன்றிப் பிண்டம் பெற்றுக் கொண்டு அவனை ஆசிர்வதித்தனர். ***"பிதுர் மோட்சபுரி"*** என்ற புகழுடையது திருப்பூவணம்.

திருப்பூவணத்தில் பொன்னனையாள் என்ற நடனமாது அன்னதானம் செய்து வந்தாள். மதுரை அருள்மிகு சோமசுந்தரேசுவரர் சித்தர் வடிவில் அன்னதானத்தில் தோன்றி, ***36 ஆவது திருவிளையாடலான இரசவாதம் செய்த திருவிளையாடலை*** நிகழ்த்தி அருளினார். சிவபெருமான் சித்தர் வடிவில் திருப்பூவணம் வந்து அன்னதானத்தில் கலந்து கொண்டதால், இங்கு நடைபெறும் அன்னதானத்தில் சிவபெருமானுடன் சித்தர்பெருமக்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர் என்பது ஐதீகம். இத்தகைய புகழ்பெற்ற திருப்பூவணக்காசியில் முன்னோர்கள் முத்தியடையவும், குலம் செழிக்கவும் அன்னதானம் இடுவது சிறப்புடையது.

நம் இறப்பிற்குப் பின் மற்றொருவர் வாழ்வில் ஒளிகாட்டக் கண்தானம் செய்வோம். இறைவனின் கருணையைப் பெறுவோம். ***அன்னதானம் கண்தானம், இவ்விரண்டு தானங்களையும் சிவபெருமான் ஏற்றுக் கொள்கிறார்.***

***திருப்பூவணம் ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளை***



*THIRUPOOVANAM SRI PONNANAIYAL ANNADHANA TRUST,*
*THIRUPPUVANAM - 630 106, Sivagangai District.*
***STATE BANK OF INDIA, A/C No. 307 101 349 77,***
***IFSC : SBIN 0011 064, CIF Number : 854 743 025 67,***

**நிறுவுனர் தலைவர்** - ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர சுவாமிகள், அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிராதேவி திருக்கோயில், வேதியரேந்தல் விலக்கு, மானாமதுரை.

**தலைவர்** - ஆங்கிலப் பேராசிரியர் திரு இராம. திண்ணப்பன் செட்டியார், தேவகோட்டை., **துணைத்தலைவர்** - திரு பழ. சோமசுந்தரம் செட்டியார், தேவகோட்டை, (இருப்பு-மதுரை) - 93606 53798, **செயலாளர்** - திரு குரு. முத்துப்பாண்டி, இரயில்வே பீடர் ரோடு, திருப்பூவணம் - 94435 68005,, **இணைச் செயலாளர் -** திரு. உமாசேகர், தெய்வீகப் பேரவை, திருப்பூவணம்

**இணைச் செயலாளர்** - காசிஸ்ரீ முனைவர் நா.ரா.கி. காளைராசன், கோட்டையூர் - 94435 01912, **பொருளாளர்** - திரு சுவா. முத்துக் குமாரசாமி, பஜார் தெரு, கோட்டை, திருப்பூவணம் - 97913 72414



***கஷ்டம் எல்லாம் விட்டு அகலக்,***
***காஞ்சிவனக் கருப்பன்***
***கதையைப் படித்தோரும்,***
***சுவாமி கதையைக் கருத்து உகந்து கேட்போரும்,***
***வற்றாத செல்வமுடன் மதிகதிர் உள்ள மட்டும்***
***வாழ்ந்து இருக்க வாழியதே.***

ISBN 978-81-971855-4-0

*ISBN Number : 978-81-971855-4-0*

*காசிஸ்ரீ, முனைவர், நா.ரா.கி. காளைராசன்*